# ரகுநாதன் கவிதைகள்

(திருச்சிற்றம்பலக் கவிராயர்)

ஸ்டார் பிரசுரம்

திருவல்லிக்கேணி — மேலக்கோபுரத் தெரு

சென்னை-5. மதுரை

## உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

✱✱✱

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

## Universal (CC0 1.0) Public Domain Dedication

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

✱✱✱

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

முதற் பதிப்பு : பிப்ரவரி—1957

விலை. ரூ. 2—8—0

STAR PUBLICATIONS

Triplicane
MADRAS-5.

West Tower St.
MADURAI

# பதிப்புரை

தமிழ்க் கவிதை பலகாலமாகப் பற்பல துறைகளில் பலவகையான பாவினங்களால் செழிப்புற்று வளர்ந்திருக்கிறது. இந்த நூற்ருண்டில் புதுவகையான பாவினமொன்று தமிழ் மக்கட்கு அறிமுகப்படுத்தப் பெற்று வருகிறது. இந்தப் பாவினத்தைப்பற்றிய விளக்கத்தை ஆசிரியர், "புதுமைப்பித்தன் கவிதைகள்" என்ற நூலுக்கு எழுதிய முன்னுரையில் விரிவாக அறியலாம்.

ஆசிரியர் ரகுநாதன் அவர்களைத் தமிழ்கூறும் நல்லுலகம் நன்கறியும். அதேமாதிரி "திருச்சிற்றம்பலக் கவிராய" ரையும் தமிழ் மக்கள் அறிவார்கள். ஆனுல் இருவரும் ஒருவர்தான் என்பது பலருக்கு இதன் மூலந்தான் தெரியவரும்.

இக் கவிதைத் தொகுதியின் இறுதியில் உள்ள குறிப்புக்கள் வாசகர்கட்குப் பெரிதும் பயன்படும்.

இந்நூலை வெளியிடும் வாய்ப்பை எங்கட்களிதத் ஆசிரியருக்கு எங்கள் நன்றி.

ஸ்டார் பிரசுரம்

## நாம்

காடுகளாய் மலை மேடுகளாய் எங்கும்
காணக் கிடந்த இப்பூ வுலகை
மேடு திருத்தியே கன்னலும் செந்நெலும்
விம்மி விளைந்திடச் செய்தவர் நாம். 1.

மாலையிள வெயிற் கோலத்திலே மழை
வானவில்லின் ஏழு வண்ணத்திலே
நூலைத் திரித்ததும் சேலைகள் நெய்ததும்
நூற்றுக்கணக்கில் குவித்ததும் நாம். 2.

வெற்பின் இமகிரி போல்நிமிர்ந்து விண்ணின்
மேகம் கிழிபட நீண்டுயர்ந்த
அற்புதக் கோபுரக் கூடமும் மாடமும்
ஆக்கிப் படைத்தவர் நாம், அவர் நாம். 3.

ஆழ நெடுங் கடற் பேழைக்குள்ளே தவழ்
ஆயிர மாயிரம் முத்தினத்தை
மீளக் கொணர்ந்து குவித்தவர் நாம்; ஒளி
மின்னும் சரங்களாய்க் கோத்தவர் நாம். 4.

மின்னற் கொடித்திறள் என்னப் பளிச்சிட்டு
வெட்டி மினுக்கும் நவமணியை
கன்னங் கரிய நிலக்கரியை, தங்கக்
கட்டியை வெட்டி எடுத்தவர் நாம். 5.

வண்ண மலர்க்குலம் புன்னகைக்கும் கரு
வண்டுக் குலம் மது உண்டுறங்கும்

கண்ணைக் கவர்ந்திடும் பண்ணையைத் தேமலர்க்
காவனத்தை ஆக்கித் தந்தவர் நாம். 6.

கங்கு கரையற்றுப் பொங்கி மதம் கொளும்
காட்டு நதிகளைக் கால் திருத்தி
அங்குசம் போலணை தேக்கியே மாநிலம்
யாவும் புரந்திடச் செய்தவர் நாம். 7.

மாயிருட் பாதலப் பாறைச் சிறைக்குள்ளே
மண்டியெழும் எண்ணெய் வாரி கண்டு
ஆயிர மாயிரம் எந்திரத்தால் பொருள்
அல்லும் பகலும் படைத்தவர் நாம். 8.

கந்தரு வர்குலச் சுந்தரர் போலவும்
கற்பனை வேகத்தி னற்புதம் போலவும்
அந்தர வெண்முகில் மண்டலத்தே செலும்
ஆகாச வாகனம் செய்தவர் நாம். 9.

கல்லையும் நீரையும் காற்றையும் தீயையும்
கண்டவர் நாம்; வெற்றி கொண்டவர் நாம்;
கொல்ல வரும் பஞ்ச பூதமும் எம்முனே
கும்பிட்டு வாழ்ந்திடச் செய்தவர் நாம். 10.

எண்ணும் கணக்கும் இறந்தொழிந்தாலென
எண்ணிற் பலப்பல விந்தையெலாம்
பண்ணிய மானிடச் சாதியர் நாம்; இந்தப்
பாரிற் படைப்புக் கடவுளர் நாம். 11.

வையம் தழைத்திடச் செய்தவர் நாம்; புவி
வாழ்வை ஒளிபெறச் செய்தவர் நாம்.
ஐயம் திரிபு சந்தேக மின்றி உல
காளப் பிறந்தவர் நாம், அவர் நாம்! 12.

1954.

# ஓய்ந்திருக்க மாட்டோம்

ஓய்ந்திருக்க மாட்டோம்—தலை
சாய்ந்திருக்க மாட்டோம் !
வேய்ந்த கூரையின்றி—நடு
வீதியிலே தூங்கிக்
காய்ந்த கும்பியோடும்—முழக்
கந்தல் துணியோடும்
மாய்ந்து மக்கள் வாடும்—புன்மை
மாய்ந் தொழியு மட்டும்
ஓய்ந்திருக்க மாட்டோம்—தலை
சாய்ந்திருக்க மாட்டோம் ! 1.

களைத்திருக்க மாட்டோம்—உளம்
சளைத்திருக்க மாட்டோம் !
உழைக்கும் உரம் பெற்றும்—நெஞ்சில்
ஊக்க மிருந்தும் மக்கள்
பிழைக்கும் மார்க்கமின்றி—பிச்சை
பிச்சை யென்றே நம்மை
அழைக்கும் கோரம் உலகில்—முற்றும்
அழிந் தொழியு மட்டும்
களைத்திருக்க மாட்டோம்—உளம்
சளைத்திருக்க மாட்டோம் ! 2.

ஆவி சோர மாட்டோம்—மன
அமைதி காண மாட்டோம் !
பூவுலகில் நெல்லை—முப்
போகம் விளைத்தோர்கள்

நாவுலர்ந்து வாடி—வறுமை
நரகில் வீழ்ந்து துஞ்சிச்
சாவுலகம் நாடும்—தீமை
சாய்ந்தழியு மட்டும்
ஆவி சோர மாட்டோம்—மன
அமைதி காண மாட்டோம்! 3.

மருண்டு நிற்க மாட்டோம்—கண்கள்
இருண்டு நிற்க மாட்டோம்!
திரண்ட தோளின் வலியால்—பலர்
தினம் படைக்கும் பயனைச்
சுரண்டி வாழும் சில்லோர்—தின்று
சொர்க்க வாழ்வு வாழும்
இரண்டு பட்ட தன்மை—மாறி
இன்பம் காணு மட்டும்
மருண்டு நிற்க மாட்டோம்—கண்கள்
இருண்டு நிற்க மாட்டோம்! 4.

கண்ணுறங்க மாட்டோம்—எங்கள்
கருத்துறங்க மாட்டோம்!
கண்ணிருந்தும் குருடாய்—இரு
காதிருந்தும் செவிடாய்
எண்ணெழுத்து அறியா—பாழ்
இருளி லுழன்று வாழ்வோர்
விண்ணை முட்டும் அறிவின்—ஒளி
விளக்கம் ஏந்து மட்டும்
கண்ணுறங்க மாட்டோம்—எங்கள்
கருத்துறங்க மாட்டோம்! 5.

ஒண்டி நிற்க மாட்டோம்—உறக்கம்
அண்டி நிற்க மாட்டோம்!
குண்டு மாரி வீசி—மக்கள்
குலத்தைக் கொன்று தின்று
கண்டு முதலில் லாபம்—காணும்
கயவர் சூழ்ச்சி வென்று
எண்டிசையும் சாந்தி—நின்று
என்றும் நிலவு மட்டும்
ஒண்டி நிற்க மாட்டோம்—உறக்கம்
அண்டி நிற்க மாட்டோம்! 6.

தங்கி நிற்க மாட்டோம்—பின்
தங்கி நிற்க மாட்டோம்!
எங்கள் சக்தி யோர்ந்தோம்—இனி
இன்பம் காண்போ மென்றே
பொங்கி யெழும் மக்கள்—வர்க்க
போத ஞானம் பெற்றுச்
சங்க நாதம் செய்யும்—அந்தச்
சத்தம் கேட்கு மட்டும்
தங்கி நிற்க மாட்டோம்—பின்
தங்கி நிற்க மாட்டோம்! 7.

1955

# செயலும் செல்வமும்

காடு களைந்து நிலமுழு வோம்-பொன்
காந்திடும் செந்நெற் கதிர் விளைப்போம்
மாடுகள் பூட்டிய ஏரொடு மானிட
மாடெனச் சேற்றில் உழைத் துழுவோம்
ஓடு பிளந்திடுங் கோடையிலே-நெற்றி
ஓடை நீர் பாய்ச்சிப் பயிர் காப்போம்-எனில்
கூடு விட்டே உயிர் ஓடிடு முன்னெங்கள்
கும்பி குளிர்ந்திட உண்ணுவமோ ? 1

பாறைக் கதவை உடைத்தெறிவோம்-இருட
பாதலந் தன்னிற் புகுந்து ஒளிச்
சாறு பிழிந்து கதிர் சிதறும் மணிச்
சாதியினங்களைப் பேர்த்தெடுப் போம்
வீறு கொண்டே யலை வீசிடும் ஆழியின்
விந்தைச் சுடர்விடும் முத்தெடுப்போம் எனில்
சோறு விரும்பிடும் ஏழைக் கொடும்பசி
தொல்லை தவிர்க்க உதவிடு மோ ? 2.

பஞ்சுப் புகையை உலைத் தெறிவோம்-நயம்
பட்டு இழைகளாய் நாம் திரிப்போம்
மஞ்சு நிகரெழில் வண்ணத்திலே துகில்
மாமலையாகக் குவித்திடுவோம்-எனில்
கஞ்சி யிரந்து தலைசுழன்று-தெருக்
காட்டில் விழுந்து துடி துடித்து

நஞ்சுக் குளிரில் வாடிடும் ஏழைக்கு
நாதியளித்து உதவிடுமோ? 3.

பண்ணை வெளியிற் பயிர் செயினும்-எங்கள்
பட்டினி தீர்ந்து தொலைந்திடுமோ?
கண்ணைக் கெடுத்து நூற்ற நல்லாடை எம்
கன்னியர் மானத்தைக் காத்திடுமோ?
மண்ணைக் குடைந்து வாரிய தங்கம் எம்
மக்கள் உணவுக் குதவிடுமோ?
எண்ணத் தொலையாத் துன்ப விருள்
என்றைக்குத் தீர்ந்து ஒளிவருமோ? 4.

1946

1

காரைக்குடி நகரின்
கண்ணியரே !கம்பனது
பேருரைகள் கூறவந்த
பெரியோரே ! உமக்கெல்லாம்
சீர்க்கம்பன் அடிபரவும்
சிற்றம்பலம் வணக்கம்.

2

அத்தத் திருநாளில்
அரங்கேற்றி, தமிழ்மொழியின்
நித்தியத்தைப் பட்டயமாய்
நீட்டிவிட்ட கம்பனை நீர்
சித்தரித்துக் காட்டுமென்று
செப்பிவிட்டார் செயலாளர்.
சிறியேனோ—
எழுத்தாணி மழுத்தாங்கி
எதுகை மோனைகளை
விழுத்தாட்டி வாகைகொளும்
வெற்றிக் கவியல்ல.
ஆதலினால்—
"கம்பத் திரு நாடா !
கண்பார்க்க வேண்டுமையா !
வம்பு தும்பு பண்ணமல்
வந்தருள வேண்டுமையா !
கும்பிட்டேன், அடியேனின்
குறை தீர்க்க வாருமையா !

தம்பி துயர் துடைக்கத்
தட்சணமே வாருமையா!

"சத்தியமாய்ச் சொல்லுகிறேன்
சாகணேசன் மீதாணை!
இத்தருணம் இங்குவந்து
எந்தன் கலிதீர்க்கச்
சித்தம் இரங்கியருள்
செய்யுமையா!" —என்றிட்டேன்.
என்றவுடன்,
கல்விக் கடல் கடந்த
கம்பன், தமிழ்ச் சொல்லின்
செல்வன், கவிராசன்
சிங்கேறு போல் வந்தான்.

3

வந்தவுடன்—
"ராமா யணக் கதையை
ரஞ்சகமாய்ப் பாடிவைத்த
கோமானும் நீர்தாமோ?
கூறுமையா!" என்றிட்டேன்.
என்றவுடன்,
"ஆமையா! நாமே தாம்!
ஆணை எமக்கிட்டுப்
பூமிக்கு அழைத்ததுமேன்?
புகலுமையா" என்றிட்டான்
சீமான் கவிச் செல்வன்.

4

"கூப்பிட்ட காரியத்தைக்
கூறித் தெரியணுமோ?

ஆப்பசைத்த கவியாகி
அகப்பட்டுக் கொண்டவெனைக்
காப்பாற்றும் ! சந்தேகம்
களைந்து அறிவூட்டும் !
பூப்போட்டு உம்மடியைப்
பூசிப்பேன் !" என்றுரைத்தேன்.
" நல்லது ' வோய் ! உம்மனத்தின்
நலிவதனை எம்மிடத்தே
சொல்லு மென்றான் கவிராசன்.

5

" கவிராஜா ! சொல்லுவதைச்
செவி சாய்த்துக் கேளுமையா !
இங்கு சிலர்—
மாவட்டம் பலகூட்டி
மாநாட்டுப் பந்தரிட்டு,
பாவட்டா மேல்தூக்கிப்
பறக்கவிட்டு, கையதனில்
தீவட்டி ஏந்தியுமைத்
தீய்த்துவிட வேணுமென்று
கூவித் திரிகின்றார் !
நீரோ—
ஆரியனும் ராமனுக்கு
அடிவருடி ஆனீராம் !
வீரியனும் ராவணனை
விழத்தட்டி விட்டீராம் !
சாதிவரு ணாசிரமச்
சதிதனக்கு ஆளாகி
ஆதித் தமிழ்க் குடிக்கு
அநியாயம் செய்தீராம் !

தாய்மொழிக்குக் கேடுபல
தானிழைத்தீர் என்றுசொலி
வாய்கிழியப் பேசி யுமை
வைகின்றார் ;
மேலும் நீர்
ஆஸ்திகம் பேசினிராம் !
ஆரியர்கள் கூறியபொய்ச்
சாஸ்திரத்தைக் கதைத்தீராம்!
சங்கத் தமிழ்க்கவிஞர்
மோஸ்தரிலே பாடாமல்
முழுமோசம் செய்தீராம் !
வாஸ்தவமா இதுவெல்லாம்
வழக்குரையும் ; அன்னவர்தம்
வாதுக்குப் பதிலுரையும் !"
என்றிட்டேன்.

## 6

" வாஸ்தவம் தான் !...
ஆஸ்திகம் பேசியதும்
அடியேனா ? என்னைப்போல்
நாஸ்திகம் பேசியவோர்
நாவலனைக் கண்டதுண்டோ ?
கேளப்பா !—
வானின்றிழிந்துவந்த
மாபூத வைப்பெங்கும்
ஊனைப் போல், உயிரைப்போல்
உளன் என்றுஉளமாற
நானாகச் சொன்னேனா ?

வேதமும் வேதியரும்
விரிஞ்சனும் தெரியாத

ஆதியஞ் சோதியினை
அறிந்தவன் நான் என்றேனு ?

அன்றென்னில் அன்றென்னும்
ஆமென்னில் ஆமென்னும்
இன்றென்னில் இன்றென்னும்
இரண்டுகெட்ட தத்துவத்தை
நன்றென்று நம்புவதே
நமக்குப் பிழைப்பென்று
என்றேனும் சொல்லியுமை
ஏமாற்றிப் போட்டேனு ?

இன்னும் கேள் :
சாதி சமயமென்ருல் :
சதியென்ருல் ; ஆரியரின்
சூ தென்ருல், என்கருத்தைச்
சொல்லுகிறேன், வீடணன்போல
நீதியால் வந்த தொரு
நெடுந்தரும நெறியல்லால்
சாதியால் வந்ததொரு
சிறு நெறியை யானறியேன்.
எந்தனுக்கோ—
பரசேந்திப் பலபேரைப்
பகைத்தாலும், வில்லேந்தும்
அரசருருக் கொண்டாலும்,
அறநெறியை மறவாமல்
நீதிவழி நின்றக்கால்
நிச்சயமாய் அவனுமொரு
வேதியன் தான் ! யானுரைத்த
வேதப்பொருள் இதுதான் !

கதையைப் பொறுத்தவரை
கற்பனைதான் ; என் கருத்தை
விதையூன்றக் கிடைத்தவொரு
விளைநிலம்தான் ! அறியாமல்
அதைப் பார்த்து சூழ்ச்சியென்றும்
ஆரியரின் மாயையென்றும்
குதியாட்டம் போடுவதில்
குணமில்லை !" என்றிட்டான்
அதிமேதைக் கவிக்கம்பன்.

7

அடியேனும்—
"கம்பத் திருநாடா !
ரொம்ப சரி, நின் வார்த்தை.
பன்னு தமிழ்க்கவிதைப்
பாவலனே ! என்னுளத்தில்
இன்னுமொரு சந்தேகம்
இருப்பதனைத் தெளிவாக்கும்
ஏதோ நீர்—
பாடி வைத்த காவியத்தில்
பச்சோந்தி போன்றுபலர்
ஊடுசென்று போலிகளை
உருவேற்றி னுரென்றும்,
தேடியதை மாற்றுரைத்துத்
தேர்ந்து பலபாட்டை
ஏடுவிட்டு ஓட விட்டு
'இதுதான் கம்பன்' என்று
பாடுகின்ருர். நின் கருத்தைப்
பகருவாய்" என்றுரைத்தேன்.

8

"சிற்றம்பலத் தானே!
செப்புவதைக் கேள்மகனே!
செம்பொன் பணியூடே
செம்பைப் புகுத்துவதும்,
அம்புலியின் மேனிதனில்
அழுக்கேறிச் சேருவதும்
நம்பன் மணிமிடற்றில்
நஞ்சிறங்கிப் போனதுவும்
கம்பன் கவியூடே
கள்ளம் புகுந்ததுவும்
வம்பு நிறைஉலகத்தே
வளமுறைதான்!
என்றாலும்—
சாவிப் பதரினத்தை,
சண்டு சருகதனைத்
தூவிப் பிரித்தெடுக்கத்
துணிவுமட்டும் போதாது!
இடைச்செருகல் என்றாலும்
இடம்பார்த்து, பொருள் பார்த்துத்
துடைச் செடுக்கத் தனிப்புலமை
தோய்ந்திருக்க வேண்டுமையா!
பாவிமக்கள் செய்வினையால்
பரவிவிட்ட நஞ்சதனை
ஆவிவிட்டுப் போகாமல்
அறுத்தாற்ற வேணுமையா!"
என்றுரைத்தான்.

9

"நன்று, நன்று,
இன்றைக்கு —

உந்தன் கவிதைக்கு
உரையென்று சொல்லியிங்கு
கந்தர கூளமெனக்
கதைகட்டித் திரிகின்றார்.
மந்தியதன் வசப்பட்ட
மலர்மாலை போலாக்கித்
தெந்தினங்கள் போட்டாடித்
திரிகின்றார் வேறுசிலர்.
கம்பன் மேதையினைக்
கண்டுவிட்டோம் என்றுசொலி
அம்பதி னாயிரத்து
அனர்த்தங்கள் கற்பித்து
செம்பாகத் தீங்கவியைச்
சிதைக்கின்றார், புல்லுருவி
வம்பரிவர் சூதினுக்கு
வழியுண்டோ ?" என மொழிந்தேன்.

## 10

" கேளப்பா—
முடுகு யமகமென்று
முடிச்சுவிடும் ஜாலவித்தை
கடுகளவும் என்னிடத்தே
கண்டுகொள்ள ஏலாது.
விடுபட்ட சரம்போலே
விரைந்தோடும் என்கவியில்
முடுகுக்கு இடமேது ?

சுவையறிய நாக்கதனில்
சுரணையிருப்பது போல்
கவியை அறிவதற்கும்

கலையுணர்ச்சி தான்வேண்டும்.
அதுவற்று—
பவிசாகப் பொய்ப்புலமைப்
பகட்டும் குரலுக்குச்
செவிசாய்த்து, செந்தமிழைச்
சீரழிய வைக்காதீர் !

கவிராயா !
ஒன்று மட்டும் முடிவாக
உரைக்கின்றேன் ; மாமேருக்
குன்றெறிந்து வந்தாலும்,
கொடுஞ்சதிகள் செய்தாலும்,
மன்றேறி எனைப்பற்றி
வசைமாரி பெய்தாலும்
கொன்றொழித்து எந்தனுக்குக்
குழிதோண்ட ஏலாது !

கொள்ளிவாய்ப் பேய்போலே
கும்பலிட்டு, என்மீது
அள்ளி நெருப்பெடுத்து
அறைந்தாலும், இடை சேர்ந்த
கள்ளக் கவிதையெனக்
கண்டகண்ட பாட்டையெலாம்
கிள்ளி எறிந்தாலும்,
கீழ்த்தரமாய் என்கவியை
எள்ளி நகையாடி
எதிர்த்தாலும், இறப்பறியாத்
துள்ளுகின்ற என்கவியைத்
தூக்கேற்ற ஏலாது !

சாகாத் தமிழ் மொழிக்குச்
சஞ்சீவி யென்னவொரு
மாகாவியம் செய்து
மண்ணில் நிலைபெற்றேன்.
தமிழுக்குக் கதிமோட்சம்
தந்தேன் ; அம்மொழியை
அமிழ்தமெனச் சொல்லுதற்கும்
அடிவாணம் போட்டமைத்தேன்.
ஆதலினால்—
எமைப் பார்த்துயாரானும்
ஏதேதோ சொன்னக்கால்
குமையாதீர் ! எம்கவிதை
குன்றின்மேல் இட்டதொரு
குல விளக்கு ! வஞ்சகரால்
என்றும் அணைத்திடற்கு
ஏலாத பரஞ்சோதி;
நின்றுஇனிப் பேசுதற்கு
நேரமில்லை, ஆதலினால்
சென்று வருவ" னெனச்
செப்பி மறைந்துவிட்டான்
செல்வக் கவிச் சிங்கம்—எங்கள்
கல்விக் கடல் வங்கம் !

11

காரைக்குடி நகரின்
கண்ணியரே ! கம்பனது
பேருரைகள் கூறவந்த
பெரியோரே ! அடியேனும்
சீர்க்கம்பன் அடிபரவிச்
சென்று வருகின்றேன். 1949

# கம்பன் என் காதலன்

## 1

நமஸ்காரம்.

காதற் கவிதைதனைக்
காதாரக் கேட்பதற்காய்
மீதுற்ற பேராவல்
மேவி யிவண் வந்தவரே!
ஒருவார்த்தை—

மீசை முளைத்தவனை
மின்னியலார் தன்னியல்பாய்
ஆசையுற்று, நாயகிபோல்
அபிநயித்து, அரங்கேறிக்
கூசாமல், சற்றேனும்
குணங்காமல் பாவிசைத்துப்
பேசிவிடு எனஆணை
பிறப்பித்து விட்டக்கால்
பேச்சும் பிறந்திடுமோ?—கவி
மூச்சும் சிறந்திடுமோ?

கம்பனுக்கும் எந்தனுக்கும்
காதல் முடிபோட்டு
வம்பிழைத்த செயலாளர்
வார்த்தை கிடைத்த தென்று,
'தம்பீ! ஒரு பாட்டு
தயாராக்கி வா' வென்றால்
எம் பிழைப்பின் கோலத்தை

என்னென்று கூறுவதோ ?
என்றாலும்—
பம்பிப் பதுங்காமல்
பயந்து ஒடுங்காமல்
வம்புக்கு வம்புசெய
வழிசெய்து, அன்றொருநாள்
செம்பாதி ராத்திரியில்
சிந்தித்தேன் ; சிந்தித்தேன் ;
சிந்தைச் சிலிர்ப்புற்றேன்.

2

கொம்பனையார் காதலுக்காய்க்
கூடுவிட்டுக் கூடுசென்று,
கம்பத் திருமகனைக்
காதலனாய்க் கற்பித்து,
கச்சணிந்த மாதர்
கற்புக் கணிகலமாம்
அச்சம், மடம், நாணம்
அத்தனையும் கடன் வாங்கி,
மிச்சமுள்ள பெண்குலத்தின்
மென்மைக் குணத்தையெலாம்
சொச்சக் கணக்குக்குச்
சொகுசாக ஈடுகட்டி
வச்சிவச்சிப் பார்த்தாலும்
வாலை இளங்குமரிக்
காதல் பிறந்திடுமோ?
கவிதை சிறந்திடுமோ ?
அவ்வேளை—
வேனல் வெது வெதுப்போ?
விரகத்தின் செந்தழலோ?

கூனல் இளம்பிறையின்
கொதிப்போ ? நிலச்சூடோ
மேனி புழுங்க, சிந்தை
மேவிவரும் கற்பனையை
ஏணி பிடித்தேறி
எங்கோ திரிந்து வந்தேன்.

3

கற்பனை தான் ! என்றாலும்
கம்பன் என் காதலன் தான் !
கற்பவர்கள் கற்றவரைக்
காமுறலும், கவிப்பிரியன்
விற்பன்ன மேதைதனை
விரும்புவதும் காதலின்பால்
நிற்பதுவே யாமன்றோ
ஆதலினால்—
சொற்படிவ மானகம்பன்
சொல் பழகும் எந்தனுக்கு
நற்பயனாய் வந்த வொரு
நாயகன் தான் ! அவன் கவிதை
நற்கவியின் காதலுக்கோர்
தாயகம் தான் !

நானோ—
கன்னிக் கவிராயன் !
கவிபாடும் வேட்கையினால்
முன்னி யெழுந்தவெறி
மூண்டுத் தவிதவித்தேன்.
இன்ன வழி ஏது வழி
என்றுவகை புரியாமல்
பின்ன முற்றேன் ; காதலெனும்

பித்தம் சுரந்துவரும்
கன்னி யிளம்பருவக்
கனவைப் போல், அவ்வேளை
என்னை, என்னுளத்தை
ஏற்று மணம் புரிந்து
நன்னயம்தோய் கவிமகவு
நல்குதற்கு ஏற்றவொரு
மன்னவனை, கவிக்குலத்து
மாராசன் மலர்க்கரத்தை
எண்ணி, எதிர்பார்த்து
ஏங்கிக் கிடந்தேன் நான்.

## 4

அவ்வேளை—
எண்ணரிய புலவரெலாம்
எதிர்வந்தார் ; புன்னகைத்தார் ;
பண்ணமைந்த பலபாட்டைப்
பரிசங்கள் பேசிவந்தார் !
'பெண்ணணங்கே ! இளங்கவிதைப்
பெட்டகமே ! கவிபாட
என்னைக் கலந்துவிடு !'
என்றிட்டார் !
அன்னவரோ—
இலக்கணத்தைத் தூளாக்கி
இடித்து, சூரணித்து,
கலக்கிக் குடித்திறக்கிக்
கவியென்று பேர்சுமந்து
பிலக்கணமாய்ப் பாடிவந்த
பித்தர் சிலபேர்கள்.

குதிரையெனக் கொண்டாலும்
குதிரையாய், குதிரை கெட்ட
கழுதை யெனக்கொண்டாலும்
கழுதையாய்த் தோற்றமுறப்
பழுதை யென்றும் பாம்பென்றும்
பகுத்தறியாப் பான்மையினில்
இழுபறியாய், திரிபென்றும்
யமகம் சிலேடையென்றும்
கழையேறிக் கூத்தாடிக்
காதல் விழைய வந்த
உழைச் சேற்றுப் புலவோர்கள்
ஒருசில பேர் !
அவரெல்லாம்—
சொல்லுக் குயிரைவிட்டு,
சோதாவாய் வார்த்தைகளை
மல்லுக்கு எதிர்நின்று
மடிபிடித் திழுத்துவந்து
அடுக்கி, கற்குவியல்
ஆக்கி. பல்லையெலாம்
உடைக்கக் கவிபாடி
உயர்கவிதை என்றுசொலிப்
படைத்தார் ; கன்னி மனப்
பாசம் விரும்பி நின்றார் !

பிஞ்சுக் கவியுளத்தைப்
பிணமாக்க, இத்தகைய
நஞ்சுக் கவிஞர் குழாம்
நயமாய் எனை நாடி
கொஞ்சிவிளை யாடியிளங்
கோலம் குலைக்கவந்தார் !

## 5

எந்தனுக்கோ—
கன்னியே ஆனாலும்
கவிதை இதுவென்று
உன்னி உணர்தற்கும்
உளத்தில் திறமுண்டு.
சின்னஞ் சிறுபுலமை,
செப்படிவித் தைப்புலமை,
கன்னமிட்டுக் கவிதைதனில்
கைவைக்கும் பொய்ப்புலமை,
சன்னமாய்ச் செந்தமிழைச்
சாகடிக்கும் வெறும்புலமை
இன்னதென அறிவதற்கும்
இதயத் தெளிவுண்டு!

எனவேதான்—
அன்னவரை என் மனப்பெண்
அணைய விலை; புலவரெலாம்
பன்னிப்பல் சாகசங்கள்
பகர்ந்தாலும், பணிந்தாலும்
என்னுள்ளம் அன்னவரை
ஏற்க விரும்பவில்லை.

இப்படியாய்—
வரிசை யிட்டு வந்தென்னை
வதுவை புரியவந்த
பரிசை கெட்ட வெறும்புலமைப்
பாவலரின் கைமறுத்து,
திரிசங்கு நிலைபோலத்
திகைத்திருந்த வேளையிலே

அரிச் சிங்கம் போல வந்து
ஆட் கொண்டான் ஓர் புலவன் !

6

அன்னவன்தான்—
கொல்லும் இலக்கணத்தின்
கொத்தடிமை ஆகாமல்,
சொல்லுக்குச் சொல் அழகு
சுகமாய்ச் சுதிகூட்டக்
கல்லும் கனிந்துருகக்
கவிசொன்ன மாராசன் !

சந்தத்தின் இங்கிதமும்,
செந்தமிழின் மெய்யழகும்,
சிந்தனையின் லட்சியத்தின்
சிகரத்துப் பொன்னொளியும்
தந்தெனக்கு என்னுளத்தைத்
தன்னடிமை யாக்கிவிட்ட
பொன்னடி யான் அந்தப்
புலவர் திருக் கோமான் !

பாவியலின் பண்பையெலாம்
பண்ணமைப்பில், தான்படைத்த
காவியத்தின் ஜீவியத்தில்
காட்டிவிட்ட கம்பனவன்,
ஆவி குளிர வந்த
அமுதக் கவிக் குமரன்
கோவில் கண்டான் ! என்மனமே
குடி கொண்டான் !

தோத்திரங்கள் பலபாடித்
தொட்டறியா உண்மையினை,
சாத்திரங்கள், கண்டறியாச்
சத்தியத்தை, ராமகதைப்
பாத்திரங்கள் மூலம்
படைத்துவிட்ட கம்பனவன்
நேத்திரங்கள் காணுதென்
நெஞ்சிற் குடிபுகுந்தான் !

காத்திருந்த என்னுளைக்
காதல்கை கூடிவர,
பூத்திருந்த கன்னிமனம்
புத்தேன் சுரந்தோட,
நீத்திருந்த என் ஆர்வ
நெருப்பு நிமிர்ந்தோங்க,
பொங்கும் மனக்கன்னி
பூரிக்க, புளகமுறச்
செங்கை மலர்பிடித்தான்
செல்வத் திருநாதன்!

## 7

அன்றுமுதல் —
இல்லாரும் உடையாரும்
இல்லாத கோசலமாம்
நல்லதொரு லட்சியம்சேர்
நாட்டில் உலவி வந்தோம்!
கங்கைக் கரைக்கதிபன்
கானரசன் குகன் அளித்த
பொங்கு நுரை நறவும்
புதுமீனும் உண்டு வந்தோம் !

கங்குல் இருள்அகலாக்
கானகத்தே கல்லணைமேல்
சிங்கநிகர் இளையோன்
செய்தமைத்த சாலையினில்
அங்கை தலைசாய்த்து
அயர்ந்து சயனித்தோம் !
எங்கெங்கோ நாங்கள்
இருபேரும் இதயத்தால்
சங்கமித்தோம் ; கவிதைச்
சாகரத்தில் முக்குளித்தோம் !
மேலும் அவன்—
தாதை சொற்கேட்ட
தனயன் திருவுளத்தில்
சீதையம்மன் சோக
சித்திரத்தில், ராமபிரான்
பாதமலர் சிரஞ்சுமந்த
பரதன் அருங்குணத்தில்
ஈதொத்த—
ஏதெவற்றி லெல்லாம்
என்னை வயமாக்கிக்
காதல் களிமயக்கில்
கவிதைச் சுகம்கொடுத்தான் !

8

தறியூடு பாவோடும்
தன்மையிலே பின்னலுற்று
முறிவற்ற பாநயத்தின்
முயக்கில் கலந்தாலும்,
செறிதோறும் அவன் கவியைச்
சிந்தையினில் தெளிதோறும்

அறிதோறும் அறிதோறும்
அறியாமை கண்டறிந்தேன்
புரியாத புதிரெல்லாம்
புரிய, மேன்மேலும்
விரிவான ஆனந்தம்
விகசித்து மேலோங்க
அரிதான புத்தமுதம்
அளித்தான் ; களிப்பித்தான் !
இன்று இருப்பதுபோல்
என்றும் இருந்ததிலே,
இன்னே யிருப்பதுபோல
பின்னே இருப்பதிலே
என்னும் படியாக,
வேட்ட பொழுதெல்லாம்
விருப்பம் அவையவைபோல்
பாட்டின் உயிர்மூச்சை,
பாவோடும் கவிச் சுவையை
ஈட்டி, அவன் தந்த
இன்பில் தோய்ந்திருந்தேன்.

## 9

அந்தரங்க மாகஎந்தன்
அருமைத் திருக்கம்பன்
சுந்தரனுர் தம்மோடு
சுகம் கண்ட இன்கவிதைக்
காதலனு போகத்தில்
கழறிக் குழறுமொழி
ஓதப்படுமோ ? உணர்ச்சி
உரைபடுமோ ?

ஆதலினால்—
காதலனும் என் கம்பன்
கனிந்து கனிந்தளித்த
போதமெலாம் உங்களுடைப்
புத்திக்கே விட்டுவிட்டுப்
போகின்றேன்; நமஸ்காரம்!

1950

# இளமைத் தமிழ்

## 1

எந்தம் தமிழணங்கின்
இளமைப் பெருமிதத்தைச்
சிந்தை உவந்தேற்கச்
சேர்ந்துற்ற பெரியோரே !
இந்தக் கவியரங்கில்
எனைச் சார்ந்த புலவோரே !
அந்தப் பழம் நாளில்
ஆசிரியப் பெருந்தகையாய்
எந்தன் தமிழார்வம்
என்றென்றும் ஏற்றமுறத்
தந்த தமிழ் ஐயா !
தலைவா !—நமஸ்காரம் !

நானோ—
இருபத்தி ஏழாண்டு
இன்னும் நிரம்பாத
பருவத்து வாலிபன் காண் !
பாவை தமிழ்க்குமரி
கருவத்தே நிமிர்ந்தோங்கும்
கட்டிளமைப் பேரெழிலை
மருவத் துடிதுடிக்கும்
மையல் மனத்தேன் நான் !
என்னைப் போய்,

அன்னவளின்
உருவத் திருவழகை,
உள்ளத்து வாலிபத்தைத்
தருவாய் என ஆணை
தந்திட்டீர் !

என்றாலும்
எங்கள் தமிழ்மொழியின்
இளமை உரைக்கின்றேன் ;
நங்கை அவள் பழகும்
நாகரீகம் சொல்லுகின்றேன் ;
உங்கள் செவி சாய்க்க
உளம் சாய்ப்பீர் !

2

கன்னித் தமிழரசி
காலத்தால், இவ்வுலகின்
முன்னை மொழிக் கெல்லாம்
முந்தியவள் என்றாலும்
பின்னைப் புதுமைக்கும்
பெதும்பை இளம் பெண்ணவாள் !

தொல்லைப் பழங்காலம்
தொட்டு வழக்கறிந்த
சொல்லுடையா ளானாலும்
சோர்வும் தளர்வுணர்வும்
இல்லாத புத்துணர்ச்சி
இசைந்து, என்றென்றும்
எல்லை கணித்தறியா
இளமை நிறைந்திருப்பாள் !

மாயப் புலவோர்கள்
மருந்தீடும் செய்வினையும்
ஆயதொரு பொய்ப்புலமை
அநியாயம் செய்தாலும்,
வாயலுக்கக் கையலுக்க
வசைபாடி வந்தாலும்,
தூயவளாம் கன்னிமகள்
தோற்றம் குறையாது
காயகல்பம் உண்டதுபோல்
கட்டுக் குலையாதாள்!

3

நங்கை யவள்—
திங்கள் பிறைக்கொழுந்து
திரியும் பொதிகையிலே
வங்கம் கவிழ்ந்ததென
வழிந்தோடும் வெள்ளருவிக்
கங்கைப் புதுப்புனலில்
நீராடும் காரிகையாள்!

கன்னிக் குமரிமுனைக்
கரிய பொடிமணலைப்
பின்னிமுறுக்கி, தலைப்
பின்னலென மின்னவிடும்
சின்னஞ் சிறு வயசுச்
செல்வி தமிழ்க்கன்னிகையாள்!

கொற்கைப் பதித்துறையில்
கொழிக்கின்ற வெண்தரளம்

பற்களெனக் கோத்தமைத்த
பந்தியினுள் எந்தேவி !

குற்ருலச் சாரலிலே
கொழித்துப் படர்தாவும்
முற்ருக் கொடிமுல்லை
மொக்குச் சரம்சூடிக்
கற்ருரின் சிந்தையெலாம்
கவராடும் காரிகையாள் !

தேனருவித் தூவானம்
தெறிக்கும் கதிரொளியின்
வானவில்லே மென்துகிலாய்
வளைந்து புனைந்துவரும்
கானத்துப் பொன்மயிலாய்க்
களிக்குமொரு பூங்கொடியாள் !

காவரிப்பூம் பட்டினத்தில்
கணிகை திருமாதவியாள்
மேவும் தளிர்க்கரத்தால்
மீட்டுமொரு யாழிசையே
தேவி தமிழ்க்கன்னி
திருவாய் மொழியாளுள் !

4

பல்லாண்டாய் நற்கவிக்குப்
பணி செய்து அணிசெய்து
சொல்லாண்டு பொருளாண்டு
சொல்லிவைத்த காவியத்தின்

எல்லாக் குமரியரும்
எந்தமிழின் அவதாரம்!

வில்லாளன் சீராமன்
வீதிவழி வர நோக்கி,
நில்லாத கண்மணிகள்
நிலைகுத்த, நின்றயர,
புல்லாதே அவன்கண்ணைப்
புசித்தும் பசியாறு
மெல்லியலாள் சீதையெனும்
மிதிலை தவச்செல்வி!

மாமாயக் கண்ணனின்மேல்
மால்கொண்டு, தன் தலையில்
பூமாலை தனைச்சூடிப்
புளகித்து, நமக்கெல்லாம்
பாமாலை தனையளித்த
பாவை திருப்பாவை!

வண்டாடும் கண்ணுட,
வாசமலர்ப் பந்தாட,
செண்டாடும் குற்றாலச்
செல்வி வசந்தவல்லி!

இச்சை அறிந்தவட்கு
இனிக்கின்ற சேதியினைக்
கொச்சைச் சிறுமொழியில்
குறிபார்த்துச் சொல்லுமந்த
பச்சை மலைக் குறத்தி,
பவளமலைக் குறச்சிங்கி!

கயல் புரளும் சிற்ருற்றங்
கரை யமைந்த முக்கூடல்
வயல் வெளியில் நாற்றுநடும்
மருதூருப் பள்ளிமகள் !

இப்படியாய்—
எத்தனையோ அவதாரம்
எடுத்தும் அலுக்காத,
மொத்தப் பிறவிக்கும்
முடிவொன்றும் காணுத
நித்திய கன்னியவள்
நெஞ்சின் அருள் நாடி
நத்தி வந்த காதலுள
நாயகரோ எண்ணிறந்தோர் !

என்ருலும்—
எந்தம் தமிழ்க்குமரி
ஏமாரு அருட் குமரி !
பந்தனமும் பங்கிகளும்
பாடியொரு மோடிசெய்து,
வந்தவரை, போனவரை,
வழிபார்த்து, காசுக்காய்
முந்தி தனை விரிக்கும்
மூடப் புல வோர்கள்
வந்த வழி வாராத
வாலை இளங் குமரி !

போயொழிந்த பண்டையநாள்
பொருளும், அலைகடலின்
வாயொழிந்த இலக்கியமும்
வாராவோ என்றலறி,

ஓடிவிட்ட முயலெண்ணி
ஒரு கோட்டை நீர் வடித்து,
நாடியிலே கையூன்றி
நவரத்ன ஒப்பாரி
பாடுகின்ற பழம்பத்தாம்
பசலியரின் பக்கத்தே
நாடி நெருங்காத
நாயகியாள் தமிழ்க்கன்னி !

மூச்சு விட்டால் மூச்செடுத்தால்,
முன்மோனை, பின்மோனை,
பேச்சுக்கு முன்னூறு
பிராச நயம்போட்டு
வீசி விளாசுகின்ற
விருதா வெறும்புலமை
நீசத் திருக் குழுவின்
நிழலில் ஒதுங்காதாள் !

கம்பன் காவியத்தின்
கவிநயத்தைப் பாராமல்,
'வம்பன் அவன் ! ஆரியர்க்கு
வால் பிடித்தான் !' என்றெல்லாம்
கும்பலிட்டு, தீக்கொளுத்திக்
கூட்டமிடும் பேர்வழியும்,

கையாளும் காதையினைக்
கற்பனையென் றோராமல்
மெய்யாய் அதை நம்பி
மீசை துடிப்பாரும்
கூவி யழைத்தாலும்
கூக்குரல்கள் இட்டாலும்

காவியத்து நாயகியாள்
கண்ணெடுத்தும் பாராதாள்!

இவ்வாறாய்—
நாடிவரும் பேரையெலாம்
நச்சாது, நற்றமிழைப்
பாடி வளர்த்து வரும்
பாவா ணரைச் சார்ந்து
மோடி கிறு கிறுக்கும்
மோகினியாள்! உலகுய்யப்
பாடும் புலவருக்கே
பாட்டின் உயிராவாள்!

வருத்தம், பசி, துன்பம்
வாட்டுகின்ற காலத்தும்,
கருத்தில் தெளிவாற்றல்
கவிதைப் பொருளமைதிப்
பொருத்தம், பொருளாழம்,
பொய்யாத மெஞ்ஞானம்,
சிந்தனையில் முற்போக்கு,
செயலில் துணிவாற்றல்,
எந்தெந்தக் காலத்தும்
ஏற்ற புதுமை வழி—
ஆன இவையெல்லாம்
அழகாகக் கூடிவர,
கூனுடைய பூமாந்தர்
குறையெல்லாம் போக்கி, அவர்
மானிடராய் வாழுமொரு
மார்க்கம் தனை வகுக்கும்
காரியத்தில் ஈடுபட்டுக்
கவிதைப் பணி புரியும்

வீரியர்க்கே தமிழ்க்கன்னி
விரும்பி அருள் புரிவாள் !

ஆதலினால்—
பிஞ்சிளமை வாலிபத்துப்
பெண்ணரசி தமிழ்க் கன்னிக்
கஞ்ச மலர்க் கரத்தைக்
கண்ணொற்றி, கவிவாணர்
நெஞ்சை விட்டு நீங்காத
அன்னாள் நிலை குலையாச்
செஞ்சொல் இளமையினைச்
செப்பி வழி மீளுகின்றேன் !

1951

# காற்று

## 1

உற்ற பொருள்தேர்ந்து
உலகத்து இயற்கைவளம்
பற்றிக் கவியிசைத்துப்
பாடவந்த பாவலரே!
மற்றுமுள பெரியோரே!
உமக்கெல்லாம்
சிற்றம்பலத்தான் நான்
தெண்டனிட்டுச் செப்புகிறேன்.

கைக்குள் அடங்காத
காற்றை வசமாக்கிக்
கைக்குள் அடக்கிக்
கவியாக்கிக் கொண்டுவந்து
பாட்டை அவிழ்த்துவிடு
பாவரங்கில் என்றாணை
போட்டுவிட்டார் இந்தப்
பொல்லாத செயலாளர்.
என்றாலும்—
காற்றை வசமாக்கிக்
கட்டிப் பிடித்துவர
நேற்றை இரவுவரை
நேரம் கிடைக்கவில்லை.
ஆனாலும்—
சொல்லின் திருச் செல்வத்

தோன்றல் பெரு வீரன்
மல்லன் மாருதியின்
மகிமை பாடுமிந்த
சொல்லரங்கில் சில வார்த்தை
சொல்லத் துணிந்துவிட்டேன்.

2

பார்மேவும் பிரகிருதிப்
பருப்பொருளின் வளமையெலாம்
சீர்மேவும் கவிபாடிச்
சென்றிட்டார் பிறபுலவர்.
என்றாலும்—
நீர் மேவும் வளமேயோ
நிலமேயோ நெருப்பேயோ
ஆர்பாடிச் சென்றாலும்
அந்தப் பொருளனைத்தும்
பேர்மேவும் காற்றுவழிப்
பிறப்பெடுத்த தல்லேயோ ?
ஆதலினால்—
வானின்றிழிந் திரங்கி
வரம்பு கடந்தகன்று
ஆனதொரு பூவுலகில்
அமைந்த பொருட்கெல்லாம்
வானவனாய், எங்கெங்கும்
வளர்ந்து நிறைந்தவனாய்
தானமைந்த காற்றவனே
தாயாவான் அல்லேயோ ?
ஆனதினால்—
மண்ணுலக ராசிகட்கு
மாதாபோல் காட்சிதரும்

காற்றின் புகழ்பாடிக்
கவிதை இசைக்கின்றேன்.

அன்னவனே—
பண்ணுருவ மாய்ச்சமைந்தான்
பரம்பொருளான் என்றுலகோர்
எண்ணி மயங்குகின்ற
இயல்பைப்போல்,
கண்ணுக்குத் தெரியாதான்
கைக்குள்ளும் சிக்காதான்
விண் நிமிர்ந்து நின்றே
விகசித்தான் என்றாலும்
எங்கும் நிறைவாகி
எல்லா உயிர்கட்கும்
பொங்கும் அருள்சுரந்து
புரந்து உயிர்காப்பான் ;
தோன்றாப் பெருந்துணையாய்த்
தோன்றி அருள் புரிவான்.
எனவேதான்—
மண்ணுலகத் தோசையெலாம்
வானவனும் காற்றவனே
பண்ணமுதம் போல் நமக்குப்
பரிந்தளிப்பான் என்றுரைத்தான்
விண்ணமுதம் போற் கவிதை
விளம்புகவி பாரதியார்.

தென்னன் பொதிகையிலே
தியங்கித் தயங்கியிள
அன்ன நடைபயின்று
அசைந்து அசைந்தாடி
வாசப்பனி மலராம்

வள்ளத்து நறுமணத்தை
வீசிச் சிதறிவரும்
விந்தை மிகுதென்றலிலே,

தென்றல் மணத்தோடு
திளைத்துக் களித்து வரும்
என்றன் திருநெல்லை
ஈன்ற கவிராஜன்
செப்பும் குறவஞ்சிச்
சிந்தின் இனிமையிலே,

மந்திரம் போல் சொல்வல்லான்
மாமேதைக் கம்பனது
சுந்தரமாம் நற்கவியில்
தோய்ந்திருக்கும் இசைநயத்தைத்
தந்தியொடு சேர்த்திழைத்துத்
தருகின்ற வேளையிலே,
சீதக் குளிர்சுமந்து
சிலிர்ந்து நடுநடுக்கும்
ஊதைப் பெருவாடை
உறுத்த, இளம்பெண்கள்
உள்ளத்தே தீயேற
உடம்பில் சுரமேற
விள்ளத் தெரியாத
விரகத்தால் நாயகரை
உள்ளி உளமுருகி
உணர்வின் உருக்குலைந்து
அங்கொருவர் இங்கொருவர்
ஆனதொரு மழைக்காலக்
கங்குல் கொடுமையினைக்
கவியாக்கிச் செவிவார்க்கும்

நந்திக் கலம்பகத்தின்
நல்ல தமிழ்ப்பாட்டினிலே,

கலம்பகத்தே இளநந்தி
கனிந்தளிக்கும் கவிதையினைச்
சிலம்பலம்பும் கனிமொழியார்
தேனிசையில் தேக்கையிலே,

செம்மண் தமிழ்மணக்கும்
சீருடைய காரைநகர்
இம்மண் தனிலொலித்து
எழுந்ததமி ழோசையிலே

செல்லச் சிறு குதலை
சிந்தும் சிறு நகையில்
வெல்லத் தினிப்போடு
விளம்பும் மழலைமொழிச்
சொல்லைச் செவிவாங்கிச்
சுகம் காணும் வேளையிலே,

நாற்றுப் பிடுங்கிநடும்
நங்கைமார் தம் நாவில்
ஊற்றுப் பெருக்கென்ன
ஊறிவரும் கொச்சைமொழிப்
பாட்டொலியை நம்முளத்தே
பாய்ச்சிப் பரவசங்கள்
மூட்டுகின்ற சிற்ருற்று
முக்கூடற் பள்ளொலியில்

இன்னபிற—
எத்தனையோ ஓசைகளால்
இன்பளிக்கும் காற்றவனும்

வித்தகனின் சித்தையெலாம்
விளம்பற் கரிதாமோ ?
இம்மட்டோ ?
இங்கே நான்,
காற்றின் பெருமைகளைக்
கவியாக்கிக் கூறுகின்ற
கூற்றையெலாம் நும் செவிக்கே
கொணர்வதுவும்,
என்முன்னே
வீற்றிருக்கும் ஒலிவாங்கி
மின்கருவி வாய்வழியே
ஊற்றி உருமாற்றி
ஊரூராய் ஒலிபரப்பிச்
சாற்றுவதும், காற்றவனின்
சக்தி மகத்துவம்தான் !

இவ்வாறாய்—
வானவனும் அன்னவனின்
வளர்ந்த நிறையுருவை
ஊனச் சிறு கண்ணால்
உணர்ந்தறிய ஏலாதேம்

ஆனாலும், கண்ணிரண்டால்
கண்டறிய அன்னவன்தன்
கருணைத் திருவுருவை
உண்டறிவோம் ; நம் மூச்சில்
உயிர்த்தறிவோம் ; நம் பேச்சில்
விண்டறிவோம் ; நம் மேனி
வெதுவெதுப்பில் குதுகுதுப்பில்
கண்டறிவோம் ; சிந்தை
களிப்படைவோம்.

பன்னரிய பெருஞ்சக்திப்
படையானைப் பற்றி இனி
என்னென்ன நான்கூறி
இசைத்தாலும்,
அன்னவன்தன் சக்தியெலாம்
அளந்து முடிவுறுமோ ?
சின்னவன் நான் !
என்றாலும்—
என்னால் இயன்றவரை
ஏதோ ஒரு பாடு
மூச்சைப் பிடித்திழுத்து
ஒரு மூச்சுப் பாடிவிட்டேன் ;
பேச்சு இது போதும்,
பிரியா விடை கொண்டேன்.

1952.

# நம் நாடு

1

நமஸ்காரம்.

அன்பார்ந்த பெரியோரே !
அரங்கோரே ! நம் நாட்டின்
பண்பார்ந்த செந்தமிழன்
பாவலரே ! ஒரு வார்த்தை.

போன நவம்பர் தனில்
பொருள் குறித்து, எந்தனுக்கு
வானொலியார் அரங்குக்கு
வளமான நற்கவியைத்
தேனொழுக, உங்கள் மனம்
தித்திக்க, மகிழ்வூற
நானெழுத வேண்டுமென
நாளும் குறித்து விட்டார்.

நானோ—
பேனா பிடிச் செழுதிப்
பேரெடுத்து அரசாளும்
தானா பதி அல்ல.
ஆனாலும், நம் நாட்டை
அறைகின்றேன் கேளுங்கள் !

## 2

நம் நாட்டில்—
வெள்ளி மலை உருகி
வீழ்ந்தென்ன, வெள்ளருவி
துள்ளி விழுந்திறங்கித்
துயரம் களைந்துவரும்
வெள்ளப் பெருக்கத்தை,
வியன் கங்கை ஆற்றொழுக்கின்
வள்ளற் பெருந்தனத்தை
வாசாம கோசரமாய்க்
கொள்ளை மகிழ்ச்சிதரக்
கூறிடவும் திறமுண்டு !
என்றாலும்—
குறைவற்ற செல்வங்கள்
குவிந்தும், வயற்புறத்தில்
நிறை வயிற்றுச் சூலியைப்போல்
நெற்கதிர்கள் தலைசாய்த்தும்,
அரை வயிற்றுக் கஞ்சிக்கும்
ஆலாய்ப் பறக்கின்ற
குறைவயிற்று ஏழைகளைக்
கூறாதிருந்திடவோ ?

ஆறுண்டு, குளமுண்டு,
அணியணியாய் நெல்வயல்கள்
வீறுடனே ஒளிபரப்பி
விளைவ துண்டு !
என்றாலும்
சோறுண்டோ ? வாழ்வில்
சுக முண்டோ ? இதையெல்லாம்
கூறாதிருந்து விட்டால்
குறை விழுந்து போகாதோ ?

## 3

விண்காட்டும் விரலென்ன,
விமலன் திருவடியைக்
கண்காட்டும் அருட்சோதிக்
கதிரென்ன நிமிர்ந்தோங்கும்
மண் கோட்டைக் கோபுரத்தை,
மதிமயக்கும் மாடத்தை,

கல்லைக்கனியாக்கிக்
கவிப்பொருளை உருவாக்கும்
மல்லைக் கடற்கரையின்
மானுடத்தின் வெற்றிதனைச்
சொல்லைக் குழைத்தெடுத்து
சொக்கும் கவிதீட்ட
எல்லையற்ற பேராவல்
எனக்குண்டு !
என்றாலும்,
வானுயர்ந்த மாடங்கள்
வளர்ந்தும், குடியிருக்கச்
சாணிலமும் இல்லாமல்
சந்துகளில் பொந்துகளில்
கூனிக் கிடந்துழன்றுக்
குற்றுயிராய் வாழ்வதையும்
ஆணித் தரமாக
அறையா திருந்திடவோ ?

## 4

வானத்து வில்லழகின்
வண்ணத்தை, தினைப்புனத்துக்

கான மயில்தோகைக்
கண்ணுயிரங் கோடி
மீனக் குலத்துடிப்பை,
மின்னொளியை ஒன்ருக்கி,
பஞ்சுப் புகைஉலேத்து,
பனிப் புகை போல் நூல் நூற்று
மஞ்சு வண்ணத் தன்மையிலே
மஸ்லின் துணி நெய்த
கஞ்சமலர்க் கரத்தைக்
கண்ணெற்றிப் புகழ்ந்திடவும்
நெஞ்சில் இடமுண்டு !
இன்றைக்கோ—
அஞ்சு கஜத் துணிக்கும்
அடித்துப் புரண்டோடிக்
கெஞ்சுவதை, கலி சூழ்ந்து
கேடுற்ற நளனைப்போல்
கொஞ்சத் துணி யுடுத்துக்
குன்றி யுடல் தாங்குவதைச்
செஞ்சொற் கவியரங்கில்
செப்பா திருந்திடவோ ?

5

தொட்டுத் தாலிகட்டித்
துணையான நாயகர்க்குக்
கட்டுக் கடங்கி, அவர்
கற்பின் திறம் காத்து
மட்டற்ற வலிபெற்று
மதுரை நகர் சுட்டெரித்த
கண்ணகியை, கதிரோனின்
கருமத்தைத் தடைசெய்த

பெண்ணரசி நளாயினியின்
பேரறத்தை, அருந்ததியாள்
விண்ணரங்கில் இடம்பெற்ற
வென்றி எடுத்துரைத்து,
கற்புக் கதை சொல்லிக்
கவி கூறத் திறமுண்டு!
இன்றைக்கோ?—
பாரதத்துப்
பொற்கிளிகள் தம்முடலைப்
பொருளுக்காய், அரிசிக்காய்,
அற்பர்களின் இச்சை வெறி
ஆசை தணிப்பதற்காய்
விற்கின்ருர்! பிச்சை
விழைகின்ருர்? இதையெல்லாம்
சொற்களிலே தீட்டாமல்
சும்மா இருந்திடவோ?

## 6

வெள்ளையரின் ஆட்சிக்கு
வேட்டு வைத்து, அடிமையெனும்
பள்ளத்தே கிடந்துழன்ற
பாரதத்தை விழிப்பூட்டி,
உள்ளக் கனல் ஏற்றி
உதிரப் புனல் பெருகும்
வெள்ளத்தே முங்குளித்து
வெளிக் கொணர்ந்த விடுதலையைத்
துள்ளும் கவி மொழியால்
தொழுதேற்ற ஆசையுண்டு!
என்ருலும்—
கள்ளக் கடை நடத்தக்

கச்சை கட்டும் பாவியர்கள்
வெள்ளை மனத்தவர் போல்
வெளிவேஷம் போட்டாடிக்
கொள்ளையடித்து, தினம்
கொழுக்கின்ற சூழ்வினைக்கும்
பள்ளம் பறிப்பதற்கோர்
பாட்டெழுதா திருந்திடவோ ?

7

பன்னூறு காலமதாய்
பருவ நலம் குலையாத
கன்னித் தமிழ்மகளின்
காதல் திருமகனும்
பன்னீ ராயிரத்துப்
பாட்டெழுதிப் புகழ்பெற்ற
பாவலனை, ஈரடியில்
பாரையெலாம் அளந்தறிந்த
நாவலனும் வள்ளுவனை,

பாரதத்துத் தீமையெலாம்
பறந்தோட, அன்னியரின்
வேரதிரப் பாட்டெழுதி
வீரம் விளைத்தவனும்
பாரதியின் கவித்திறத்தைப்
பைந்தமிழில் சொல்லுதற்கும்
ஆராத பேராவல்
ஆசை எனக்குண்டு !

என்றாலும்—
இன்றைக்குச்

செங்கல் அடுக்கி, தமிழ்ச்
செய்யுள் என்று கூறி நமைப்
பொங்கல் வைக்க வரும்
புல்லுருவிக் கூட்டத்தை,
தங்கக் கவியெனவே
தமுக்கடித்துச் சொல்லி வரும்
வெங்கத் திருக் குழுவை
வீடு பெறச் செய்வதற்கும்
கங்கெரியும் வார்த்தைகளில்
கவிகூரு திருந்திடவோ ?

8

இப்படியாய்—
பண்டு தொட்டு வழங்கும்
பாரதத்துப் பெருமையெலாம்
வண்டு கட்டிக் கொண்டு வந்தே
வைத்தாலும், அவையெல்லாம்
பிண்டு விழுகுதையோ !
பெரியோரே ! என்செய்வேன் ?

ஆதலினல்—
எந்தன் திருநாட்டின்
இயல்பையெலாம உங்களுடைச்
சிந்தைக்கே விட்டுவிட்டுச்
செல்கின்றேன் ! வாக்களித்த
அந்தப் பரிசு தனை
அடியேனுக்குடன் ஈந்து
வந்த வழி மீளுதற்கு
வகை செய்து தாருமையா !

1948

# சுதந்திரம்

1

நமைச் சார்ந்து பாவிசைக்கும்
நாவலரே ! கவியரங்கின்
அமைச்சர் பெருந்தகையே !
அன்பார்ந்த நமஸ்காரம்.
பெற்றெடுத்த தாய்நாட்டின்
பெரியோரே! உங்களுக்கும்
சிற்றம்பலத்தான் நான்
திசை நோக்கித் தெண்டனிட்டேன்.

2

இன்றிங்கே நாமெல்லாம்
இனிதிருக்கும் இவ்வேளை
சென்றுவிட்ட முன்னாளைச்
சிந்தித்துப் பார்ப்போமேல்—
எத்தனையோ இன்பங்கள்,
எத்தனையோ துன்பங்கள் !
அத்தனையும் நம் மனத்தின்
ஆழத்தே நினைவூறும்.

3

நூற்றாண்டுக் காலமதாய்
நுகக்கால் முதுகேற்றி

வேற்றுவரும் நம்மவரின்
வீரம் பிழிந்து வந்தார்.
அந்தப் பெருஞ் சுமையை
அகற்ற, நம் நாட்டைச்
சொந்தமென ஆக்கிப் பின்
சுகம்தேட, நம்மவர்கள்
செங்குருதிப் புனல்வெள்ளம்,
சிறை வாசம், சித்ரவதை,
தொங்கும் கயிற்றினிலே
தூக்கு எனப் பலவாம்
வேதனைக்கு ஆளாகி,
வெற்றி குறிக் கோளாகிச்
சாதனையில் வெற்றிபெற்றுர் ;
சாகா வரம் பெற்றுர்.
நந்தம் சுதந்திரத்தை
நாட்டி விட்ட அன்னவர்க்கு
வந்தனைகள் செய்தின்று
வாழ்த்திடுவோம்.

4

ஆனாலும்—
பேரரசைப் போராடிப்
பெற்றுலும், அடிமைதனை
வேரோடு பேர்த்தெறிந்து
வெட்டிக் களைந்தோமோ ?
பூரணமாம் விடுதலைக்குப்
பொருளும்தான் என்னேயோ ?

உடுக்கத் துணிமணியும்
உண்ண நிறை யுணவும்

படுக்கத் தனிநிழலும்
பாங்கில் உடனமைய,
நெஞ்சில் நினைப்பில்
நெறிமுறையில் நல்வாழ்வில்
நஞ்சு கலவாமல்
நாமெல்லாம் ஓர் குடியாய்
எல்லோரும் இந்நாட்டின்
இளங்கோவாய், ஆண்டானாய்,
நல்லோர் குடிவாழ்க்கை
நாட்டுவதே சுதந்திரமாம்.

இன்றைக்கோ —
வான வெளிமுகடாய்,
மண் தரையே பாயலெனக்
கூனி, உடல் தாங்கிக்
குன்றும் படைசனங்கள்
நெற்றி வியர்வைதனை
நீராக்கி, நெல்லாக்கிக்
குற்றுயிராய் வாழ்ந்து பசிக்
கும்பி கொதிப்பதையும்,

அவ்வேளை—
உண்டு தினம் உறங்கி,
உறுத்தாத பஞ்சுமெத்தைத்
திண்டு சுகம் கொடுக்கத்
திளைக்கின்ற பணக்காரர்
ஊரான் உழைப்பதனை
உறிஞ்சி யுயிர் வாழ்வதையும்.

வட்டிக் கடன் கொடுத்து
வாய்தா கழிந்துவிட்டால்

கட்டிவச்சிக் காசைக்
கறப்பதையும்,

இருப்பில் உணவிருக்க
இருட்டில் பதுக்கிவைத்துக்
கருப்புக் கடை நடத்திக்
காசுதனைச் சேர்த்தோன்
உருப்படியாய் நம்முன்னே
உலா வந்து போவதையும்,

ஆலைத் துணிப் பெருக்கு
அலையலை யாய் வந்தாலும்
சேலை துணி மணிக்குத்
திண்டாடி வாடுவதும்,
மானம் தனை மறைக்க,
மழைக்குளிரைத் தான்தடுக்கச்
சாணகலத் துணியின்றி
மக்கள்பலர் சாவதையும்,

ஆதிமுதல் நம்மவர்க்கு
அகிம்சை நெறி கூறிவந்த
சூதறியாக் காந்தி மகான்
சுடப்பட்டு மாய்ந்ததையும்,
போதிமரப் புத்தனைப்போல்
போதம் புகன்றவனைச்
சாதி மதபேதச்
சழக்கர் உயிர் வாங்கியதும்,

செல்லாகி விட்டபின்னர்
சீவனிழக் காதவர்போல்
பொல்லாச் செயல் புரிந்து

போர்முரசம் கொட்டுகின்ற
சிற்றரசர் தம் கூட்டம்
சீறுவதும், மக்கள்தமைக்
குற்றுயிராய்த் துன்புறுத்திக்
குடலுருவிச் சூடுவதும்,

இப்படியாய்—
எத்தனையோ காட்சிகளை
இன்றளவும் காண்கின்றோம்.
விதவிதமாய்த் துன்பங்கள்
விளைவதுவே பூரணமாம்
சுதந்திரத்தின் தன்மைகளோ ?
சொல்லிடுவீர் அரங்கோரே !

5

ஆகையினால்—
அழுக்குப் படியாமல்
அணிகள் புனைந்து வந்து
தளுக்குத் தனம் பண்ணும்
சங்காத்தம் போதுமையா.

நம் நாட்டில்—
பாடுபடும் பாட்டாளி
பசிதீர்க்க, உச்சி வெயில்
ஓடு பிளந்தெறிய
உழைக்கின்ற விவசாயி
வீடு செழிக்க,
விளக் கேற்ற,
மக்கள் வலிமையினை
மதியாத குறுமன்னர்

பொக்கென்று பட்டொழிந்து
பொடியாக,
வஞ்சனையாய் மதபேத
வார்த்தைசொலி நம்மிடையே
நஞ்சை உமிழ்ந்துவரும்
நாகத்தின் தலை நசுக்க
நாமெல்லாம்—
ஒன்றுவோம்! இன்றுமுதல்
உழைப்போம்! உலகினர்முன்
குன்றாப் புகழ்நிறுவிக்
குலவைக் குரலிடுவோம்!
பொன்றாச் சுதந்திரத்தின்
பூரணத்தை எய்திடுவோம்!

6

ஆதலினால்—
இந்தத் திருநாளில்
இன்புற்றோம்; இனிமேலும்
அந்தப் பெருநாளும்
அணித்தாகச் செய்வதற்குச்
சிந்தை துணிந்தொன்றாய்ச்
சேர்ந்திடுவோம், செகத்தீரே!
ஒன்றாய்ச்
சேர்ந்திடுவோம் செகத்தீரே!

# துஞ்சலும் இலர்

1

புறத்தின் ஒரு பாடல்
பொருளை, தமிழ்க்குலத்தின்
மறத்தை எடுத்துரைக்க
வரவழைத்த வானொலியே!
வானொலியின் முன்னிலையில்
வாக்குரைக்க வந்தகவி
வாணர் திருக்குழுவே!
வாணர் திருக்குழுவின்
வாசகத்தைக் கேட்பதற்காய்
வந்துற்ற அவைத்தலைவ!
காற்று கொணர்ந்துதரும்
கவியை நும்செவிவாய்
ஏற்றுக் களிக்கின்ற
எந்தமிழ் நன்னாட்டாரே!
உமக்கெல்லாம்—
வணக்கம், வணக்கம். இதோ
சுணக்கமின்றி என்கவியைச்
சொல்லத் தொடங்குகிறேன்.

2

உலகம் நிலைத்திருக்கும்
உண்மையினைப் பண்டொருநாள்
அலைவாயில் மாண்டொழிந்த
அறிஞன் பெருவழுதி

கலைவடிவால், கவிவடிவால்
காட்டிவிட்டுப் போயினன்காண் !
கலைவடிவாய்க் காட்டியதோர்
கவியின் திருக்கருத்தின்
நிலை என்ன ?......
ஒரு நிமிஷம்
நினைவூட்டிப் பார்த்திடலாம்...

3

அஞ்சுவதற் கஞ்சுவது
அறிவுடைமை என்றுரைத்த
அஞ்சொற் கவிவாக்கும்
அறிவோம் யாம்;
என்றாலும்
நெஞ்சிற் பலகவலை
நித்தநித் தம் பெருக்கி
அஞ்சி உயிர்சுமத்தல்
அறிவுடைமைஆகிடுமோ ?
துஞ்சி மடிந்திருத்தல்
துணிவுடைமை ஆகிடுமோ ?
பஞ்சையராய், பாமரராய்,
பயத்தின் அடிமைகளாய்,
கிஞ்சித்தும் வீரமிலாக்
கீழாம் பிறவிகளாய்
செஞ்சொல் தமிழ்க்குலத்தோர்
சீரழிய லாகிடுமோ ?

கப்பிக் கவிந்துவரும்
கவலையினை, நெஞ்சத்தை
அப்பிக் கிடந்தலைக்கும்

அச்சத்தை, மன்னுலகைக்
குப்பைக் குழியாக்கும்
கூனச் சிறுமையினைப்
போக்காதிருந்து நிதம்
புலம்புவதும், நாளெல்லாம்
சாக்காட்டுப் பாதையிலே
சாடுவதும் நலமாமோ?

4

இல்லையில்லை இல்லையென்றான்
எங்கள் பெருவழுதி!
தொல்லை தரும் துயரைத்
துடைக்க, மன்குலத்தின்
எல்லையிலாப் பேதைமையின்
இருளைப் பிளந்தெறிய,
சொல்லில் கிரியைகளில்
தூயவொளிக் கதிர்விரிய,
நல்லுரிமைப் போரில்
நமனோடும் போட்டியிடத்
துணியும் பெரும்வீரத்
தோன்றல் சிலருண்டு.
அவரால்தான்—
இனியும் இந்நாளும்
இவ்வுலகு நிலைத்திருக்கும்
என்றுதான் சொன்னான்
எங்கள் பெருவழுதி.

5

பெருவழுதி சொல்லிவைத்த
பேருரையை இனிதேற்று

அறிந்துணர முனைந்தாலோ ?
அய்யய்யோ !...
இன்று நமைத்
தின்று அரித்துவரும்
தீமைகளும், சிந்தைதனைக்
கொன்று குலைத்துவரும்
கோணல் சிறுமதியும்
எண்ணில் அடங்கிடுமோ ?
எத்தனையோ ?...எத்தனையோ ?...

சாதி சமயமெனும்
சழக்கால் மனப்பூசல்
ஆதிப் பழமையெனும்
அறியாமை, அறிவிழந்த
கண்மூடிப் பழக்கங்கள்,
காரிருட்டு வாழ்க்கையிலே
மண்மூடிப் போகின்ற
மானிடங்கள், வாழ்க்கையெனும்
போரில் தலைநிமிர்ந்து
போராடும் தெம்பிழந்து
நீரிற் குமிழியென
நெஞ்சுடையும் பஞ்சையுளம்,
மிடிமையெனும் சாகரத்தே
மிதந்தலையும் தெப்பமென
அடிமைச் சிறுவாழ்வில்
அலைக்கழியும் மன்னுயிர்கள்...
இவ்வாருய்—
எண்ணில் பலஇன்னல்
இருளில் கிடப்போரின்
கண்ணைத் திறந்து, வழி
காட்டி, முன் நடந்து,

பண்ணரிய நற்பணிகள்
பலவும் புரிந்து, உலகோர்
வாழ்வை வளம்படுத்தி
மானுடத்தின் புல்லடிமைத்
தாழ்வைத் தகர்த்தெறிந்து,
தாரணி வாழ்மானிடர்கள்
பீடுநடை நடக்கும்
பெற்றிக்காய், தம்முயிரை
ஈடுவைத்துப் போராடும்
இதயத்தோர் இவ்வுலகில்
இருந்தால், இருப்பதனுல்
உலகம் நிலைத்திருக்கும் ;
உலையா திருந்துவரும் ;
திலகமென அவர்திருப்பேர்
தினமும் நிலைத்திருக்கும்.
இவ்விதமாய்—
இலகு புகழ்சுமந்து
எந்நாளும் இறவாத
உலகப் பெரியார்கள்
ஒரு சிலரோ ?...
பலர் உண்டு.

6

வெளிநாட்டார் நம்நாட்டை
வேட்டைக் களம்ஆக்கிக்
களியாட்டம் ஆடிநின்ற
காலத்தே,
அன்னவரை
வால்பிடித்து, முகஸ்துதியாய்
வக்கணைகள் பேசி, அவர்

கால்பிடித்து, தம்முயிரைக்
கருப்பட்டி யாய்ப் பேணி
பாரதத்து மன்னரினம்
பவிசிழந்த நாளையிலே...
அன்னியரை—
நேரெதிர்த்து, பரித்தியாக
நெருப்பில் குதித்து, அவர்மேல்
போரெதிர்ந்து வீரப்போர்
புரிந்து உயிர்நீத்த
தீரன் கட்டபொம்மன்
திறலை நாம் அறியோமா ?

மரணத்தின் சந்நிதியில்
மானத்தைக் காப்பதற்காய்
திரணமென உயிர்கொடுத்து
தேசக்கொடிகாத்த
திருப்பூர்க் குமரனெனும்
சீராளன் தன் திறலும்
தெரியாதோ, நமக்கெல்லாம் ?

தடிப்பேறி மரத்திருந்த
தமிழர் உளந்தனிலே
துடிப்பேற, தேசபக்தி
துள்ளிப் பொறி பறக்க,
விதேசியரின் கப்பல்
வியாபாரத்திற் கெதிராகச்
சுதேசித் தனிக்கப்பல்
தோற்றுவித்த தேசபக்தன்
சிதம்பரனார் தம்வீரச்
செயலும் நாம்அறியோமா ?

வீட்டில் உலையேற்றும்,
விளக்கேற்றும் செலவுக்காய்,
வேட்டி துணி மணிக்காய்,
மேற்செலவுச் சில்லரைக்காய்
பாட்டை, பைந்தழிழைப்
பணயம் வைத்து, தம்முயிரை
ஊட்டி வளர்த்துவந்த
கவிஞர் ஒருசிலபேர்
நாட்டை மறந்து, மக்கள்
நலத்தைத் துறந்துவிட்டு,
சீட்டுக் கவிபாடிச்
செய்யுள் புலமையினால்
தமிழை அலைக்கழித்துத்
தட்டழிந்த காலத்தே,
அமிழ்த மனையதமிழ்
அன்னை விலங்கறுக்கத்
தோன்றி, தமிழுலகின்
தோளுயரச் செய்யவந்த
தோன்றல் இவன் என்ன

மிடிமைப் பேய்க் கணங்கள்
மிரட்டுகின்ற வேளையிலும்
அடிமைத் தளையறுக்கும்
ஆவேசக் கனல் என்ன

வெள்ளையர்தம் தோலாம்
வெளுப்புக்குச் சலாமிட்டு
உள்ளம் குமைந்தவரின்
உரிமைக் குரல் என்ன

நல்ல தமிழ்க்கவியால்
நாட்டை உயிர்ப்பித்து,

புல்லடிமை தன்னைப்
போக்கும் வலியளித்த
சொல்லின் திருக்குமரன்
சுப்ரமண்ய பாரதியை
எல்லோரும் அறியோமா ?

7

அறிவோம் ; நன்கறிவோம்,
அவரெல்லாம் நம்முளத்தே
உரியதொரு இடம்பெற்ற
உண்மையினை யும்அறிவோம்.

இன்னபலர்—
தன்னலத்தைக் கருதாது
தாய்நாட்டின் நலம்கருதி,
பன்னரிய தியாகங்கள்
பலபுரிந்தார் ; அதனால்தான்
இன்னுமிந்த மன்னுலகு
இருக்கின்ற உண்மையினை,
மன்னுலகு வாழ்ந்துவரும்
மருமத்தை, மாட்சிமையை
உன்னியுணர்ந்தோம் நாம்

உணர்ந்தறிந்தே—
அன்னவரின் நற்பணியை
அன்னவர்தம் லட்சியத்தை
தன்னலத்தைக் கருதாத
தகைமையினை, வீரத்தை
இந்நாளும் நாம்போற்றி
இதயத்தே ஏற்போமேல்,
அஞ்சுவதே தொழிலாய்

அமையாமல், அச்சத்தால்
துஞ்சி மடியாமல்,
துயர் வாழ்வு வாழாமல்,
என்றென்றும் புகழோடும்
என்றென்றும் அருளோடும்
என்றென்றும் நிலைபெற்று
இருந்திடலாம் நாமெல்லாம்
என்றே உரைபகன்று
என்கவியை முடிக்கின்றேன் ;
மன்றோரே நுமக்கெல்லாம்
வணக்கம் ; மறுவணக்கம்.

1953

# "வாழ்க்கை வளமுற"—அறிவு

1

மானுடர்தம் புவிவாழ்க்கை
வளமைபெறும் வகைபலவும்
தானுணர்த்தும் கவியரங்கின்
தலைவா !—மற்றிங்கே
நானுரைக்கும் கவிதையினை
நன்னயமாய்க் கேட்டருளும்
வானொலியின் நேயர்களே !
வணக்கம் : பலவணக்கம்.

2

நேயர்களே !

ஒரு வார்த்தை.
நீள்புவியில் மானிடர்தம்
நெறியை வளம்படுத்தி
வாழ்வளிக்கும் மார்க்கங்கள்
வகை வகையாய்த் தோற்றிடினும்
ஆழ்ந்துணர்ந்து நாம்சற்றே
ஆராய்ந்தால், சிந்தித்தால்,
அவையெல்லாம்—
அறிவென்னும் பேரொளியின்
ஆட்சியினுக் குட்பட்ட
பிரிவினைகள் தாமன்றிப்
பிறிதில்லை என்றறிவோம்.

அறிந்துணர்ந்தால்—

பல்லாண்டு பல்லாண்டு
பலகோடி நூற்றுண்டுக்
கெல்லாமுக் கப்பாலோர்
இருளடைந்த கானகத்தே
காட்டுக் குரங்கினத்தின்
கடைக்குட்டி வாரிசாய்,
நீட்டி நிமிர்ந்தெழுந்து
நின்றிட்ட நாள்முதலாய்,
வேட்டை பலவாடி
வெம்பசியைத் தாஞற்றி,
கூட்டுக் களியினிலே
குலக்கொடியைக் காப்பாற்றி,
ஆலாய் விழுதோடி,
அருகாய் வேரோடி
காலாந்தரத் தறிவு
கனிந்து கனிந்தொளிர
நீரை, நெருப்பை,
நிலத்தை, நீள்விசும்பை,
பாரைப் பகுத்தறிந்த
பண்டை மனிதன்முதல்
இன்றைக்கு—
நம்மிடையே வாழ்ந்துலவும்
நாகரிக மாந்தர்வரை
அம்மம்ம ! நம்வாழ்வை
அறிவென்னும் மணிவிளக்கால்
செம்மையுறச் செய்ததெலாம்
செப்பி முடிவுறுமோ ?
செப்பி முடிவதெனில்
சிறியேன் பிழைப்பேஞ ?

3

உலகத்தே உற்பவித்த
உயிர்ராசி யாவினிலும்
இலகுபுகழ் வேய்ந்த
இமயக் கொடுமுடியாய்
வளர்ந்துற்ற மானிடர்தம்
வாழ்க்கைப் பெரும்போரில்
தளர்ந்துற்றுப் போகின்ற
தருணமெலாம், அறிவென்னும்
அளந்தறியாப் பேரொளியால்
ஆராய்ச்சி யின்பயனுய்,
அஞ்ஞானம் சூழ்ந்திருண்ட
அகவிருளைக் குடியோட்டி,
விஞ்ஞானம் என்றுசொலும்
விந்தைப் பெருவலியால்
மெஞ்ஞானம் கற்றறிந்து
விளைத்திட்ட வெற்றியெலாம்
எண்ணில் அடங்கிடுமோ ?
எத்தனையோ ? எவ்வளவோ !
அவையெல்லாம்—
வையத்தே நம் வாழ்வை
வளம்படுத்தி வந்ததற்கு
ஐயமுண்டோ ? அன்றுடம்
அறிந்துணர்வ தல்லேயோ ?

4

எந்திரத்து மந்திரத்து
எக்ஷிணிபோல் தன்னுடைய
அந்தரங்க விந்தையெலாம்
அறிந்துணர வொட்டாது,

தந்திரமாய் நமையெற்றித்
தருக்கிச் செருக்கிநின்ற
சுந்தரியாம் இயற்கையெனும்
சோபிதஞ்சேர் மோகினியின்
பூதப் பெருந்தோற்றப்
பொலிவின் ரகசியத்தை,
நீதி நெறிமுறையை
நியதி வழிவகையை,
மேதினியில் அறிவாற்றல்
மேதையினுல் கண்டவள்தன்
காதல் உளங்கவர்ந்த
காதையெலாம்—
ஓதற் கெளியனவோ?
உண்மைகளும் ஓர்சிலவோ?

5

பொங்கிப் புடை புடைத்துப்
பூரித்து, விம்முற்று,
கங்குகரை மீறிவரும்
காட்டாற்றின் நீர்த்தொகையைத்
தேக்கி நிறுத்தி, அணைத்
தேக்கம் பலப்பலவும்
ஆக்கிப் படைத்துப்பின்
ஆயிரங்கால் வழிபாய்ச்சி
செந்நெல் வயல்வெளியில்
செங்கரும்புத் தோட்டத்தில்
பொன்னை விளைவித்துப்
பூரிக்கும் விம்மிதமும்—

சீறிப் புகைநாறும்
செந்தழலும் தீச்சாறும்
ஊறிப் பரந்தோடும்
உலகத்துப் பிலவாயைக்
கீறிப் பிளந்துள்ளே
கீழிறங்கி, ஆங்குஉரு
மாறிக் கிடந்தொளிரும்
மணியை, பசும்பொன்னை,
சீரும் சிறப்புற்றுச்
செய்யும் பல தொழிற்கும்
பாரிவள்ளல் போலுதவிப்
பசியாற்றும் நிலக்கரியை
வாரிக் கொணர்ந்திந்த
வையம் குவிப்பதுவும்—

ஆவென்று வாய்பிளந்து
அலைக்கரங்கள் தாம் புடைத்துத்
தாவிக் குமுறி யெழுந்
தார்ப்பரிக்கும் சாகரத்தும்,

காற்றும் மழையிடியும்,
கண்பறிக்கும் மின்வீச்சும்
கூற்றுவன் போல் குடிகொண்டு
குலைநடுக்கும் விண்ணகத்தும்—

காடும், மலைக்கடவும்,
கானும், பனிப்புயலும்
கூடிநிற்கும் இந்தக்
குவலயத்து நிலப்பரப்பும்

எண்ணிறந்த வாகனங்கள்
என்றும் திரிந்துவரப்

பண்ணி, உலகத்தின்
பலதேச மக்களோடும்
நல்லுறவும் நட்புறவும்
நாளும் வளர்ப்பதுவும்—

பிரித்தெடுக்க அரிதென்று
பேசிவந்த அணுப்பொருளை
உரித்தெடுத்து, அதன் வலியை
உலகுணரச் செய்துவிட்ட
இருபத்தாம் நூற்றாண்டின்
இன்றை அறிவாளர்
திருப்பணியும்—

கட்புலனும் அறியாது
காலனைப்போல் நம்முடம்பின்
உட்புகுந்து உயிர்குடிக்கும்
உக்கிரஞ்சேர் மின்சாரம்
தன்னை அறிந்து, அதனின்
சக்தி மகத்துவத்தின்
வேகம் அறிந்து, அந்த
விந்தை வலிமையெலாம்
ஏகம்ப வாணனுக்கு
ஏவல்செய்த பூதமென
நம்மவர்க்கு,
வீட்டில் உலையேற்ற,
விளக்கேற்ற, வேர்த்துடலம்
வட்டமுறின் மேல்விசிறி
வாட்டமிட்டுத் தான்சுழற்ற,
மற்றிங்கு—
கூட்டமிட்டு நாமெல்லாம்
கூடிநிற்கும் கவியரங்கின்

பாட்டொலியைத் தமிழருக்குப்
பரிமாறிச் சேவைசெய,
இன்னபிற—
எண்ணிறந்த விந்தையெலாம்
இயற்றி, நம்மவர்க்குக்
கண்ணறிந்த தெய்வதம்போல்
கைகொடுத்து நின்றுதவக்
காண்பதுவும்—

ஆன இவையெல்லாம்
அறிவின் பேராற்றல்
அளித்த திருவருளின்
செறிவன்ரே ?
அறிவின்றேல்—
மானிடர்தம் புவிவாழ்வில்
மகிழ்வுண்டோ ? மலைக்காட்டுத்
தேனிகர்த்த செந்தமிழின்
தீஞ்சுவையும் தானுண்டோ ?
காவியங்கள் உண்டோ ? இக்
கவியரங்கும் உண்டோமோ ?
ஓவியங்கள் சிற்பமெலாம்
உருப்பெறுவ துண்டுகொலோ ?
ஆதலினல்—

பூவுலகில் நம்வாழ்க்கை
பொலிவுற்று வளம்பொங்க
ஆவியென நிற்பதுவும்
அறிவன்றிப் பிறிதாமோ ?

6

என்றாலும்,
இன்றுலகில்
வீட்டின் இருள்விலக்கும்
விளக்கொளியை, விட்டத்து
மோட்டில் சொருகித்தீ
மூட்டுகின்ற மூடரைப்போல்
பேரொளியாம் அறிவால்நாம்
பெற்ற பயனையெலாம்
போரடுத்து மக்கள்தமைப்
பூண்டோடு வேரறுக்கும்
சீரழிவுப் பாதையிலே
செலுத்துகின்ற புன்மையெலாம்
நீரறிவீர் !

என்றாலும்,
அறிவின் பேராற்றல்
அளித்த செல்வமெலாம்
குறிவைத்து மக்கள்தமைக்
கொன்றொழிக்கும் கொடுமைக்கோ

அணுவைப் பிளந்தெறிந்த
ஆற்றலெலாம் மக்களினை
அணு அணுவாய்ப் பிளந்தெறியும்
அநியாய அழிவுக்கோ ?

இல்லை இல்லை என்றே நாம்
ஏகக் குரலெழுப்பிச்
சொல்லும் மனம் படைத்தோம் !
ஏனென்றால்—
தக்கது ஈதென்றும்

தகாதது ஈதென்றும்
ஒக்கத் தேர்ந்துன்னி
உண்மை தெரிந்துணரா
மக்களேயும் விலங்கென்றே
மதித்திடுக என்றுரைத்த
கம்பத் திருநாடன்
கால்வழியில்,
அறிவென்னில்
சென்ற இடத்தாறே
செல்லாது, தீதொறுத்து,
நன்றின்பால் உய்ப்பதுவே
நல்லறிவு என்றுரைத்த
வள்ளுவனர் தம்வழியில்
வந்தவர் நாம்!

7

ஆதலினல்—
ஆக்கும் வலிபடைத்த
அறிவை, அழிவுவழி
போக்குகின்ற சிறுமையெலாம்
போக்கும் வகையறிந்து,
வானுலகம் என்றுரைக்கும்
வளமார்ந்த பொன்னுலகை
மானுடர்கள் வாழுமிந்த
வையகத்தே தோற்றுவித்து;

விஞ்ஞானம் என்கின்ற
விந்தைப் பெருவலியால்
அஞ்ஞானப் பொய்மையெலாம்
அடியோடு குடியோட்டி,

அறிவாலே நாம்வளர்வோம்
அறிவாலே நாம்உலகை
அறிந்தறிந்து மேம்படுவோம்
அறிவாலே வாழ்க்கைவளம்
அடைவோம் நாம் என்றுசொலிப்
பிரிகின்றேன் அரங்கோரே !
நுமக்கோர் பெருவணக்கம் !

1956

# பாரதி திருநாள்

கோவைத்திருநகரில் கூட்டமிட்டுப் பாட்டிசைத்து
நாவலிக்க நாவலிக்கும் நாவலரே !—யாவருக்கும்
வந்தனங்கள் சொல்லி வாசிக்கும் எம்கவியைச்
சிந்தனையில் கொள்வீர் தெளிந்து. 1

நெல்லைப் பதியுடையான் நீடுபுகழ் அம்பலத்தான்
ஒல்லை இடைசெவலாம் ஊருடையான்—சொல்லுக்கு
அழகேற்றும் அழகிரியான் அணிசெய்யக் கேட்டிடுவீர்
பழகு தமிழ் எம்மிரட்டைப் பா. 2.

ராவிலே கண்விழித்து ரயிலில் வரும்போது
பாவிலே கண்வைத்துப் பாடினேம்—நாவிலே
வந்து சரஸ்வதியார் வாழாக் கலியுகத்தில்
சொந்தக் கவியாய்த் துணிந்து. 3.

காட்பாடி ஜங்ஷனிலே காப்பியின்றி டீகுடித்து
ராப்பாடியாய் நாங்கள் ராத்திரியில்—பாப்பாட
எதுகையொடு போராடி எதிர்க்கட்சி தானுடி
இதுவுரைத்தோம் கேட்பீர் இனி. 4.

யாப்பெதுகை என்றும் யமகம் திரிபென்றும்
ஆப்பறைந்து தமிழ்த்தாய்க்கு அறம்பாடும்—தோப்புக்
கரணவித்தைப் புலவருக்குக் கவியரசன் பாரதியான்
மரணமென வந்தானம் மா. 5.

கம்பனுக்குப் பின்னுலோர் கருவேப்பிலங் கன்றாய்
செம்பொற் கவிச்சுரங்கச் செல்வமாய்—செம்பாகப்
பாட்டிசைத்து நந்தமிழைப் பாலித்து மெய்ப்புகழை
நாட்டியதும் பாரதியின் நா. 6.

மிட்டாமி ராசுகளை மேவாமல், அவர் சாத்தும்
புட்டா ஜரிகைகளைப் போடாமல்—முட்டாள்கள்
பாட்டுரைத்த பாவனையில் பாடாமல், அன்னவர்க்கு
வேட்டுவைத்தான் பாரதியான்' வே! 7.

பாரதியார் நன்னாளில் பாவலர்கள் யாமிருவர்
ஊரறியச் சொல்லும் உரையுண்டு—நீரறியும்!
பாரதியின் பாட்டாலே பாரதியின் பேரழிக்கும்
ஓரிருவர் எங்கும் உளர். 8.

லாலிபல பாடி, லஞ்சச் சிறு பொருளின்
கூலியதன் மேலே குறிவைத்து—சோலியதாய்
மாய்மாலம் பண்ணும் வஞ்சகர்க்கு யாமுரைப்போம்:
'போயொழியும் எங்கேனும் போய்!' 9.

உண்மை உழைப்பாளர் ஊருக்கு நல்லாளர்
பெண்மைதனைப் போற்றும் பேராளர்—திண்மையொடு
பாட்டாளி மக்களுக்காய்ப் பாடுபடும் நல்லோரே!
கூட்டாகக் கூடிவரு வீர்! 10.

உங்கள் கவிராசன், உழைப்பவர்க்குப் பாட்டாளன்,
பொங்கும் விடுதலையின் போராளன்—நங்குலத்து
ஏற்ற முரைத்தான் இவன்நாளைக் கொண்டாடும்
ஆற்றலுளோர் நாம்தானை யா! 11.

கூடித் திருநாளே கொண்டாடிப் போய்விட்டால்
நாடும் பயன் நம்மை நாடாது—வேடிக்கைப்
பேச்சும் சிரிப்பும் பிதற்றலுமாய்ப் போகாமல்
ஓச்சும் கணக்கிங் குள. 12.

நெஞ்சகத்தில் கொள்மின்! நிலையை நினைவுறுமின்!
பஞ்சைப் பரதேசிப் பாமரர்க்கும்—கஞ்சிக்கும்
நொய்யரிசிக் கூழுக்கும் நோவோர்க்கும் நாமுழைப்போம்
வையகத்தில் வாழும் வழிக்கு. 13.

எல்லோரும் மன்னரென்று எம்கவிஞன் அந்நாளில்
சொல்லாறச் சொல்லிட்ட தொன்மொழியை—மல்லாடி
நாமுனைந்து இச்சகத்தில் நனவாக்கி நாட்டினுக்குச்
சேமம் விளைப்பதுவே சீர். 14.

மாமாய வேதாந்த மயக்கைக் கருவறுத்து
போமாறு மற்றதனைப் போக்குவோம்—ஆமாம்காண் !
செத்த பிறகோ சிவலோகம் ! இல்லை ; அதை
இத்தரையில் தோற்றுவிப்போம் யாம். 15.

மூளைகெட்ட இச்சமுக முறையதனை நாம்மாற்றி
ஏழைபணக் காரரென்பார் இல்லையென்போம்
—கோழைமனத்
தாமசங்கள் ஏதுமின்றி தாரணியில் பொதுவுடைமை
நாம் சமைக்க எண்ணுவமிந் நாள்; 16.

செத்த குரலெடுக்கும் சீவனற்ற செய்யுளையும்
சத்தற்ற பாடலையும் சாகடிப்போம்—நித்தநித்தம்
கம்பன் கவிகற்று, பாரதியார் காவியம்போல்
அம்புவிக்கு நாளும் அளித்து 17.

நாடு செழித்தோங்க, நல்லோர்கள் வாழ்ந்திருக்க,
பாடுபடுவோன் பலம் பெருக—வீடெல்லாம்
செல்வம் பெருக, திக்கெட்டும் பஞ்சமற
மல்கிடவே நாட்டின் வளம். 18.

இத்தினத்தில் நாமிங்கு எடுக்கும் சபதமிது ;
ஒத்துழைக்க வாருங்கள் ஓடோடி !—சத்தமின்றிக்
கம்மென்றிருந்து கவிபாடக் கேட்டவரே !
கம்மென் றிருந்துவிடா தீர் ! 19.

1949

# வாரும் பிள்ளாய் எழுத்தாளரே ;

1

என்ன அவசரம் 'வே !
ஏங்காணும் பறக்கின்றீர் ?
சென்னைமா நாட்டுக்குச்
செல்கின்ற விருப்போ ?

வாரும் 'வே !
வந்து உட்காரும்
நீர்தாமோ எழுத்தாளர் ?

கட்டுக்கதை யென்று
கவியென்று, கீரவம்ச
வெட்டும் புலியென்று
வீம்பிட்டு, பத்திரிகைக்
குட்டம் நிறைத்து
குளப்பாசி வண்ணத்தில்
அட்டையிட்டு, அழகாக
அச்சிட்டு, நூலென்று
கொட்ட மடித்துநிதம்
கும்மாளம் போட்டாடும்
நீர்தாமோ எழுத்தாளர் ?

நெஞ்சைச் சுட்டறுத்து,
நினைவை வறுத்தெடுத்து,
எஞ்சியதை வார்த்தைகளில்
இறுத்து வடிகட்டி,

புஞ்சிரிப்பு காதல் எனும்
போதைப்பொடி கலந்து
கதையென்றும் கவியென்றும்
கதைத்து, தமிழணங்கைச்
சிதையேற்றும் உம்முடைய
சிறப்பெல்லாம் நாமறிவோம்!
செப்புகின்ற காரியத்தைச்
செவிசாய்த்துக் கேளுமையா!
ஒப்புக்குச் சொல்லவில்லை;
உள்ளதைத்தான் சொல்லுகிறேன்.

2

அங்கு சென்று—
ஆராரோ கூடிநிற்கும்
அலங்கார மேடையிலே
நீரேறி நின்று கொண்டு,
பாரதிர இடிமுழக்கிப்
பருவமழை போல் வந்த
பாரதிக்குக் கல்லெடுத்துப்
பார்த்திடத்தான் வேண்டும்!

மேநாட்டி லக்கியம்போல்
மேன்மையுற, தமிழணங்கு
கோனாட்சி தானுயர,
தேசக்—
கொடிதூக்க எழுத்தாளர்
ஆனைப் பாடுபட்டு
அறிவு வளர்க் கோணும்
என்றெல்லாம்
மாநாட்டுப் பந்தலிலே

மனசைப் பறிகொடுத்து
வாருட்டைத் தானிடிக்கும்
வாய்ப்பந்தல் போடாதீர் !

3

கச்சேரி வாசலிலே
கணக்கு, புரோநோட்டு,
குச்சுக்கு ஒத்தி,
குடிமனைக்கு அடமானம்
வச்செழுதும் மாராசன்
மனசை, பேனவைப்
பிச்சைப் பிழைப்புக்காய்
பேரங்கள் பேசவில்லை !
நீரோ—
உம்மை, உம்பேனவை
ஊத்தைக் கருத்துக்களை,
உள்ளத்தை, அச்சகத்துப்
பெம்மான் திருவுளத்துப்
பிரியத்துக் கொத்திவைத்துச்
சன்மானம் ஏதுமின்றிச்
சலியா துழைக்கின்றீர் !

வரகரிசிச் சோற்றுக்கும்
வழுதுணங்காய் வாட்டுக்கும்
முரமுரெனப் புளித்த
மோருக்குமாய்த் தவித்து,
கும்பிக் கொதிப்பைக்
குறைக்கக் கவிபாடி
அம்புவியில் வந்துதித்த
அவ்வைப் பெருமகளும்,

'நெற்கொண்டு போமளவும்
நில்லாயோ ?' என்றுரைத்துச்
சொற் கண்டானும் உமக்குச்
சொந்தம்தான் ! ஆனாலும்
இது—
ஈசன் படியளக்கும்
இதிகாச லோகமல்ல !
ரேசன்படி யளக்கும்
ரெண்டுகெட்ட காலமையா !

## 4

காந்திமகான் பேருரைத்து
கதரால் கறைமறைத்து,
சாந்தி, சாத்வீகம்,
சர்வபரித் தியாகமென்று
ஓந்தித்தனம் காட்டும்
உம்முடைய முதலாளி
தியாகத்தை, தருமத்தைத்
திறமையுடன் போதிப்பார் !
காசென்றால்—
வியாகூலம் எய்திடுவார் !
விம்மி மனம் உடைவார் !
நீரேதான்—
கம்பனுக்குப் பின்னாலே
கலைவாணி 'ரீஜெண்டாய்'
அம்புவியில் வந்து
அவதரித்தீர் என்றெல்லாம்
கும்பிடுவார் ! அதைநம்பிக்
குனிந்து கொடுக்காதீர் !

சொல்லுக்குச் சோர்வேது ?
சுவைச் சொல்லே யானாலும்
சல்லி வரவுண்டோ ?
சாற்றுமையா !
நித்தம் ஒரு யமகண்டம்
நேர்ந்து வருங் காலத்தில்
சத்திய சோதனை உம்
சக்திக்குத் தாங்காது !

5

புத்தகத்தை ஏமாந்து
புத்திகெட்டுத் தானமிட்டு,
டிபனுக்காய், மாலையிலே
தேத்தண்ணீர் சில்லரைக்காய்
டவுனுக்குச் சென்றுவர
டிராம் வண்டிக் காசுக்காய்
தவணைப் பணம்பிரிக்கும்
தன்மையிலே நித்த நித்தம்
காவடிகள் தூக்கிக்
கால்கள் சலியாதீர் !
தேவடியாள் பிழைப்புக்குத்
தியாகமென்ன கேட்டுக்கு ?
உம்முடைய—
வான்முகட்டைக் கிழித்து
வளர்ந்தோங்கும் லட்சியங்கள்
நான்முகனும் கண்புதைத்து
நாணமுறும் படைப்புக்கள்,
கூனக் கொடுமையினைக்
குடியோட்டி, சமூகத்தை
ஆனை நடை நடக்க

அறிவூட்டும் சித்திரங்கள்,
பண்பாடு, தமிழ்மரபு
பாவம், கலாசாரம்
எல்லாம் இருக்கட்டும் ;
இல்லையென யார் சொன்னர் ?
அவையெல்லாம்—
சீவிக்கத் திறனுண்டேல்,
செல்லரித்துப் போகாமல்
பாவிக்கத் திறனுண்டேல்,
பலமுண்டேல், உயிருண்டேல்
சாவைத்தனி யெதிர்த்து
சகத்திலுயிர் தரியாதா ?

ஆனலோ ?—
நாளைக்கு உம்முடைய
சீட்டுக் கிழிந்துவிட்டால்,
சீவன் பிரிந்துகட்டை
நீட்டிநிமிர்ந்து விட்டால்,
நிமலன் அடிசேர்ந்தால்
போட்டுவைத்துப் போகப்
பொருளுண்டா ?

ஆதலினல்—
ரேட்டைக் குறைக்காதீர் !
லெச்சைகெட்டுப் போகாதீர் !
ஓட்டைப் படகேறி
உள்ளமுங்கிச் சாகாதீர் !
ஆதலினல் சொல்லிவிட்டேன்
சோத்துக்கு வழிதேடும்
சொன்னபடி கேளும் !
போய்வாரும் !
மறக்காதீர் !
போய்வாரும் !

1946

# தற்சிறப்பு

1

கேளும், ஓய்!

ஆரென்று கேட்டுவிட்டீர்;
அறைகின்றேன், செவிசாயும்!

ஆராரோ ஓரிரவில்
ஆசைக்குள் மாலாகிச்
சோராக் கலவியிலே
சுகம்காண நானுருவாய்,
பாரினிலே வந்துவிழப்
பார்த்துப் பயப்பட்டு,
கம்பத்தின் காலடியில்
கைகடக்க விட்டுவிடக்
கவியாய்க் கரைந்தழுத
கருவிலே திருவுடைய
கவிராசன் நானல்ல.

ஈசன் அடியெடுக்க
ஈற்றடியை நான்முடிக்கும்
ஆசிபெற்ற ராசியிலே
அவதரித்தோன் நானல்ல.

தம்பலத்தின் சாறுண்டு
தமிழ்க்கவியாய்க் கொப்பளித்த

அம்பலக் கவிராய
ஆசுகவி நானல்ல.

கம்சனுக்குக் கலைவிலக்கும்
கணிகையரின் பஞ்சணையில்
நிமிசங்கள் தவறாது
நேம நிட்டை செய்தவத்தால்
சுக்கான பொக்குவுடல்
சுருங்க, தாதுவிழ,
'மெய்க்காதல்' எல்லாம்
மேலோன் ஒருவன்மேல்
வைக்க, கவிதைவர
வாடாத காமத்தைக்
கக்கித் தொலைக்கின்ற
கவிமகனும்
நானல்ல; நானல்ல.

2

நிதிவேட்டு நிதியேற்று
நீதம் மறந்துவிட்டு
மதுக்குடித்த போதையிலே
மண்டியெழும் புதுக்கவியைப்
பிதுக்கி வெளித்தள்ளும்
பெரும்புலமைத் தனமெல்லாம்
எனக்குத் தெரியாது.

3

உம்மைப்போல் நானும்—
உள்ளிக்கும் உப்புக்கும்
ஒருவேளை வெற்றிலைக்கும்

அள்ளிப் பருகியுண
அரைவயிற்றுக் கஞ்சிக்கும்
நித்தம் உழைத்தலுத்தும்
நெஞ்சம் அலுக்காத
மானிடன்தான் !

4

ஆனாலும்—
வேட்டை கிடைத்ததென்று
வேற்றுவரின் கூற்றுகளை
மூட்டோடு பேர்த்தெடுத்து
முதன்மூலம் என்றுசொலி
ரோட்டுத் தவறாமல்
ரோந்துசுற்றி, தழுக்கடித்துப்
பாட்டென்று சாதிக்கும்
பகற்கொள்ளைக் கூட்டத்தை—
சொத்தைக் கருத்துகளைச்
சொல்லில் திறனற்றுப்
பொத்திப் பொதிந்து
பொட்டணமாய்க் கட்டிவைத்து,
பத்திரிகைச் சந்தையிலே
பரப்பி, விலைகூவும்
பாசாங்குக் காரப்
பகல்வேடக் கூட்டத்தை

கற்பனையின் ஊற்றென்றும்
கவியரசின் கூற்றென்றும்
பற்பிடித்துப் பார்க்கும்,
பதம்பார்க்கும் ரசிகரென

விற்பன்ன வேடம்
விளைகின்ற கும்பலினை—

திண்டுமிண்டு பண்ணுமல்
தீமையின்னு மிழைக்காமல்
ஒண்டி வாலொடுக்க,
ஊளைகளைத் தான்நிறுத்த,
கண்ட துண்டமாக்கிக்
கழுகுக்கு விட்டெறியத்
தண்டெடுத்த மறக்குலத்துத்
தமிழன் நான்.

5

வஞ்சனைகள், மாய்மாலம்
வகைத்தப்பு, வாயளப்பு
மிஞ்சிடினும் அன்னவரை
மேலோகம் தானேற்ற
நெஞ்சில் உரமுண்டு ;
நினைப்பில் திறமுண்டு !

ஆரென்று கேட்டதற்கு
அறைந்தேன் ; மறக்காதீர் !
பேர்படைத்து, ஊற்றுப்
பேணவும் கை படைத்து,
சீர்படைத்து, உம்போன்றார்
சிரங்கொய்து சிதையேற்றி
நீர்தெளிக்கும் கவியெழுத
நிலத்தில் உதித்தவன்காண் !
நெஞ்சில் இதைநிறுத்தும் !

1946

# அழைப்பிதழ்

1

'பத்திரிகை ஆசிரியர்
பாரதியார் ஸ்பெஷ'லுக்கு
ரத்தினம்போல் சிறுபாடல்
நல்கிடணும் என்றெனக்கு
உத்திரவு போட்டிருந்தார்.
அன்றிரவில்:
பத்தரை மணியடித்தும்
படுக்கைக்குப் போனபின்னும்
நித்திரை கொள்ளாமல்
நெஞ்சுக்குள் ஏதேதோ
சித்திர வதைசெய்ய,
சிந்தனையைச் செள்ளரிக்க
எத்தை எழுதுவதாம்
என்ன எழுந்திருந்து
கத்தைக் காயிதத்தைக்
கரியாக்கத் திட்டமிட்டேன்.
பேனாவைக் கையெடுத்தேன்;
பேப்பரினை முன்விரித்தேன்.
ஆனாலும் உள்ளத்தில்
அணுவளவும் கற்பனையும்
தோணவில்லை.

2

எத்தை எழுதுவதாம்?
என்றைக்கோ—

அத்தைமகள் அம்புஜத்தை
ஆக்குப் பிரையதனில்
முத்தமிடப்போக, அவள்
முயலைப்போல் பயந்தோடிக்
கத்தியதைக் 'கவி'யாக்கி,
'காதலரின்உள்ளம்' எனக்
கத்தரிச்ச கற்பனையில்
கட்டிவைத்து, சிரஞ்சீவிச்
சித்திரமாய் ஆக்கிடிலென் ?

இல்லையெனில்—
பித்தாடும் எம்பெருமான்
பேயாடும் கங்காளன்
சித்த விகாசத்துத்
திகம்பரத்து லீலைகளைப்
பொத்தி, புனைசுருட்டி,
பொருளூட்டி, அருளூட்டி,
சித்தாந்த தத்துவத்தின்
சிகரமிது என்றுலென் ?

என்றெல்லாம்—
புத்திவழி நில்லாது
புகைமுட்டித் தத்தளிக்க
நிலையற்று, கற்பனையின்
நினைப்பில் பிடிப்பற்று
அலைப்புற்றேன்.
ரவுண்டடிச்சி ரவுண்டடிச்சி
ராங்கித் தனம்பண்ணும்
பவுண்டன்பேனு முனையில்
பாட்டுப் பிறக்கவிலை.

எரிச்சல் மூண்டுவர
எடுத்தெறிந்தேன் பேனவை !

3

மேசைப் பலகையிலே
மேட்டிமையாய்க் குத்திநின்று
ராசாதி ராசனைப்போல்
ரப்புவெறி கொப்புளிக்கப்
பேசிற்று என்பேனு :

“ செப்படிவித்தை, எத்து
சித்துவித்தை செய்யமுனைந்
தெப்படியோ பாட்டெழுத
எண்ணுகின்ற கவிராயா !
இப்படிநான் கூறுவதை
இருசெவியாற் கேளையா !
இன்றைக்கு—
கண்ட்ரோல் எடுபடவும்
காகித 'பேல்' விடுபடவும்
கண்ருவிக் காட்சிகளே
காண்கின்றேன் எங்கெங்கும் !

மூலைக்கு ஒவ்வொன்ருய்,
முடுக்குக்கு ஒவ்வொன்ருய்,
சோலியற்ற பேரெல்லாம்
தொடங்கிவிட்டார் 'ஜெர்னலிஸம் !'
சாகாத் தமிழினையும்
சாகடிக்கும் சஞ்சிகைகள் !
ஆகாத பேரின்மேல்
அறம் பாடும் அனுபந்தம் !

அம்மாமி அத்திம்பேர்
அத்தங்கார் பாஷையிலே
பம்மாத்து பண்ணுகின்ற
பத்திரிகைப் புற் றீசல்

பைஜாமாஸ் கல்லிஜிப்பா
பாகவதர் கிராப்புடையோன்
கைஜாலம் கண் ஜாலம்
காட்டி நிற்க,

பால்முகமும், சேல்விழியும்,
பாசமன ரோசனையும்
டாலடிக்கும் லோலாக்கும்,
டங்கரிக்கும் காற்சிலம்பும்
மேலொளியை மேலொழியா
மேலாக்கும் மேற்கொண்ட
காலேஜுக் குமரியவள்
காருக்காய் காத்துநின்று
நைஸாக வாய்திறந்து

நகைக்க, ஆணழகன்
ஐஸாக உருகுவதும்...
ஆஹா ஹா !
எத்தகைய கற்பனைகள் !
எத்தகைய மறுமலர்ச்சி !
இதையெல்லாம்
வளரும் தமிழென்று
வக்கணைகள் பேசுகிறீர் !
உளறுகின்ற பேர்வழிக்கு
ஒத்தூதிக் காட்டுகிறீர் !
ஒழியட்டும் !...

## 4

நீரும் அச்சுழலில்
நினைப்பைத் திரியவிட்டு
பேரும் புகழுமெனும்
பிச்சை விரும்பாமல்
ஏறிட்டுப் பாருமையா !

செங்குருதித் தீர்த்தத்தில்
செல்வத் திருநாட்டை
முங்குளித்துப் பெற்றெடுத்த
முத்துக்கு —விடுதலைக்கு
ஆபத்து !—

கங்கை அமுதூட்டும்
வங்கத்துச் செல்வமென்பீர் !
பொங்கிக் குமிழோடும்
பொன்னிப் பெருக்கென்பீர் !
அங்கெல்லாம்—
கஞ்சிக்கு வக்கின்றி
கால்வயிற்றுக் குணவின்றி
நஞ்சுக் குளிர் தடுக்க
நாலுமுழத் துண்டின்றிப்
பஞ்சைப் படைசனங்கள்
பரிதவித்து மாளுகின்றார்!

அவ்வேளை—
வெள்ளைக் கதரணிந்து
வேடமிட்டு, திரைமறைவில்
கள்ளக்கடை நடத்திக்
காசடிக்கும் நீசர்குழாம்
சண்டாளத் தனம்பண்ணி,

சாய்மான மேசையிலே
உண்டாட்டுப் படலத்தில்
உன்மத்தம் ஆடுகின்றார்!
கொண்டாடும் விடுதலைக்குக்
கோடாலிக் காம்பானார்!
அவரெல்லாம்—
தூக்குக் கயிற்றினிலே
தொங்கூஞ்சல் ஆடாமல்,
நாக்கைப் பறித்துயிரை
நமன்கையில் சேர்க்காமல்,
காக்கை பிடித்துயிரைக்
காத்துப் பிழைக்கின்றார்!

ஆங்கொருபால்—
பாரதத்து இரட்டையர்கள்
பகையாடி, விடுதலையின்
வேரதிரக் கலகங்கள்
விளைக்கின்றார்!
பெண்டுமக்கள் சீரழிய
பிள்ளைகளைக் காய்கறிபோல்
கண்டதுண்ட மாக்கிக்
கழுகுக்கு விட்டெறிய,
குண்டுவிழ, புறமுதுகில்
குத்துவிழ, காலிகளைக்
கிண்டிவிட்டு ஒற்றுமையைக்
கெடுக்கின்றார் வெள்ளையர்கள்!

நஞ்சூட்டும் வெள்ளையனின்
நாஜித் தனத்தாலே
பஞ்சநதி தீரத்தில்
பச்சைரத்தப் பாசனமோ?

நூருண்டுக் காலமதாய்
நோய்நொடியைப் பாராமல்
போராடிப் பெற்றெடுத்த
புண்ணியத்தை, விடுதலையை
வேரோடு பேர்க்க எண்ணும்
வெள்ளையனை விரட்டாமல்,
சொந்தச் சகோதரரைத்
துன்பத்துக் காளாக்கி
வெந்து மடிகுவதோ ?
வேரோடும் சாய்குவதோ ?
எண்ணரிய தியாகத்தால்
எழுத்தறியாப் புரட்சிகளால்
மண்ணடைந்த பெருமையெலாம்
மண்ணடையச் செய்குவதோ ?
உன்னருமைத் தாய்நாட்டை
ஊர்சிரிக்கப் பண்ணுவதோ ?

5

ஆதலினால், உம்முடைய—
காதல் காவியத்தைக்
கடைகட்டி வையுங்காண் !
சாதல் தவிர்ப்பதற்கு,
சத்தியத்தைக் காப்பதற்கு,
தீதறியாப் பாரதத்துச்
செல்வத்தைக் காப்பதற்கு
வாருமையா ! உம்முடைய
வலிமையெலாம் நாட்டுக்காய்த்
தாருமையா ! இவ்வேளை
தாய்நாட்டுச் சோதரர்க்கு
நேர்ந்துவரும் ஆபத்தை

நிமிஷத்தில் போக்குதற்கு
உந்தன் அறிவெல்லாம்
உதவட்டும்! எழுத்தாளர்
சிந்தையெலாம் மக்களுக்காய்ச்
செழிக்கட்டும்! உலகினர்முன்
சொந்தத் தாய்நாட்டின்
தோளுயரச் செய்யட்டும்!
பட்டினியை உண்டாக்கிப்
பணம்திரட்டும் பாவியர்கள்
சட்டினியாய்ப் போவதற்கு
சங்காரம் ஆவதற்குக்
கொட்டு முழக்கறைந்து
கூடட்டும் நாட்டுக்காய்
சொட்டு மசித்துளியும்
சொந்த உடன்பிறப்பை
வெட்டவழி சொல்வோர்க்கு
விஷமாகப் பாயட்டும்!

6

கவிராயா!
செப்பியதை யெல்லாம்
செவிசாய்த்துக் கேட்டீரா?...
அப்படியா? ரொம்பசரி,
அடியேனின் திருச்சேவை
எப்போதும் உம்முடைய
எழுத்துக்கு உண்டாகும்!"

1947

# உன்னைத்தான் கேட்கின்றேன்

1

என்ன விழிக்கின்றாய்?
உன்னைத்தான் கேட்கின்றேன்;
ஒரு வார்த்தை!
என்னருமைத் தமிழ்நாட்டில்
எழுத்துலகின் முடிசூடா
மன்னனென்றும், மறுமலர்ச்சி
மாணிக்கம், தங்கமென்றும்,
அன்னை விலங்கறுக்கும்
அவதார மூர்த்தியென்றும்,
உன்னையே நீபுகழ்ந்து,
உனக்கேநீ மாலையிட்டு
உன்மத்தம் கொண்டலையும்
உன்னைத்தான் கேட்கின்றேன்;
ஒரு வார்த்தை!

அன்றைக்கு—
செத்துமடிந்தான் புதுமைப்
பித்தனென்றே உம்முடைய
சித்தத்துளே மகிழ்ந்து
செப்புமொரு ஒப்பனைக்காய்,
'வானத்து அமரன்போல்
வந்தான்காண்! வந்ததுபோல்
போனான்காண்!' என்றுசொலிப்
புலம்பி முடித்துள்ளம்

பூரித்துப் போய்விட்ட
புண்ணியரே !
உம்மைத்தான் கேட்கின்றேன் ;
ஒருவார்த்தை !

2

ஏனையா ?
நீரெல்லாம்
போனுன்காண் என்றேதோ
புலம்பிவிட்டுப் போயிடுவீ
ராஞலும், அவன் என்ன
உம்மைப் போல்—
சிந்தனையை முற்றும்
சிரச்சேதம் செய்துவிட்டு,
சொந்தத்துக் கற்பனையைச்
சுட்டுப் பொசுக்கிவிட்டு,
வெளிநாட்டு மேதையர் தம்
வெளியீட்டை ஒவ்வொன்ருய்
வழிமறித்துக் களவாடி
மொழிபெயர்த்து, பாத்திரத்தின்
ஊர்மாற்றி, பேர்மாற்றி,
உடுக்கை தனைமாற்றி,
சேர்மான வேலைகளும்
சிறிதே இடை கலந்து,
காயடிச்ச வார்த்தைகளில்
கட்டிச் சுருட்டிவைக்கும்
ஈயடிச்சான் காப்பிகளை
இலக்கியமென் றேசெப்பி
வாயடித்துக் கையடித்து
வாழ்ந்து மறைந்தாஞ ?

## 3

இல்லையெனில், அவன் என்ன
உம்மைப்போல்—

கற்பனையோ கலையழகோ
கருத்தின் தனிவலியோ
சொற்படிகச் சிற்பமெனச்
சொலிக்கும் மொழிவளமோ
அற்பத்தின் அற்பமெனும்
அளவுக்கும் தேருத
கர்ப்பச் சிதைவுகளைக்
கட்டிச்சுமந்து கொண்டு,

பத்திரிகை ஆசிரியர்
பாதத் திருக்கமலம்
நித்தம் தொழுது, அவர்பின்
நீங்கா நிழல்போல
நத்தித் திரிந்து, வெறி
நாயாய் நடை நடந்து,
ஆசிரியர் வீட்டுக்கு
அல்வா ஜிலேபி லட்டு
ஓசியிலே அனுப்பியவர்
உள்ளம் தனைக்கவர்ந்து
அன்னவரைக் கண்டக்கால்
அடியேன் தெண்டமெனச்
சென்னிதனைத் தாழ்த்திச்
சேவித்து, மேல்துண்டை
முன்னி அவசரமாய்
முழங்கைக்கிறக்கி, சற்றே
முறுவலித்து,

வால்பிடித்து, மேல்பிடித்து
வலியெடுத்த திருக்கமலக்
கால்பிடித்து, கைபிடித்து
காக்காய்பிடித்து, எழுது
கோல்பிடித்த புண்ணியத்தைக்
கொட்டி யளந்தானு ?
கொட்டி யளந்துயிரைக்
கொள்ளை கொடுத்தானு ?
இல்லையெனில், அவன் என்ன
உம்மைப்போல்—

பெற்றெடுத்த தாய்நாட்டுப்
பிரேமை தனைத்துறந்து,
கற்றறிந்த நற்கலையின்
கடமை தனைமறந்து,
நாட்டுமக்கள் தம் வாழ்க்கை
நலத்தை மறந்துவிட்டு,
ஆட்டுவிக்கும் பொம்மைகளுக்
காள்பிடிக்கும், வலைவீசும்
வேற்றூரான் தரும்பிச்சை
வெள்ளிப் பணத்துக்கும்,
சோற்றுக்கும், அவிசாரிச்
சுகபோக வாழ்க்கைக்கும்,
ஊற்றூறும் பேனுவை,
உளத்தை, உடலத்தை
விற்று முதலாக்கி
வீழ்ந்தானு ? தன்மானப்
பற்றைப் பறக்கவிட்டுப்
பரிசழிந்து செத்தானு ?
இல்லையெனில், அவன்என்ன
உம்மைப் போல்—

அல்லும் பகலும்
அயராது பாடுபட்டும்
கொல்லும் பசிப்பிணியைக்
கொல்லுதற்குக் கூழுமின்றி
சற்றே தலைசாய்த்துச்
சயனிக்கக் கூரையின்றி
வற்றி மெலிந்துடலம்
வாடி வதங்குகின்ற
எண்ணற்ற ஏழையர்தம்
இழிநிலையைப் போக்குதற்குக்
கண்ணற்று, கருத்தற்று,
கடமை உணர்வற்று,
கன்னியரின் மேனிவளக்
கட்டழகை, அன்னவர்தம்
மின்னல் துடியிடையை,
மேலாக்கை, மேலாக்கின்
பின்னணியில் மறைந்திருக்கும்
பேரழகை, பேசும்விழிக்
கண்ணழகை, கண்மணியின்
கறுப்பழகை—ஒவ்வொன்ருய்
எண்ணிக் கணக்கிட்டு
எடைபோட்டு, மதிப்பிட்டுப்
பின்னர் அந்த
எழில் வளத்தை மோனை
எதுகைகளால் வருணித்துத்
தொழில் நடத்தித் தன்மானம்
துறந்தே துட்டடிக்கும்
கழிசடையாய் மாறியபின்
கண்மூடிப் போனுளை ?

## 4

இல்லை யில்லை !
அவன் உம்போல்—
பழித்துலகம் கூறும்
படைப்புக் களைப்படைத்து
எழுத்துலகை மலிவாக்கி
இழிவாக்கிச் சாகவில்லை !
உளுத்துக் கலகலக்கும்
உரைபயின்று சாகவில்லை !
கொளுத்துகின்ற செந்தழலாய்க்
கொடுமைசெயும் நோக்காடு
அழுத்தி உயிர் துடித்தாலும்
அவன் அறிவு சாகவில்லை !

கடைப்பட்டு, தரங்கெட்டு
கருத்தின் உரம் கெட்டு,
உடைபட்டு உருக்குலையும்
உம்முடைய 'வானமரப்
படைப்பினங்கள்' எல்லாம்
பரிசைகெட்டுச் சீரழிந்து
நடைப்பிணங்க ளாய் மாறி
நாற்றம் எடுக்கின்ற
நாளையிலும்,
இழிநரகில், சாக்கடையில்
இருட்கிடங்கில் ஒளிகாணும்
வழிவகைகள் தெரியாது
வாடுகின்ற மானிடர்தம்
பழிவாழ்வை உலகறியப்
பறைசாற்றும் முறையறிந்து

புத்தம் புதுத் தமிழில்,
புல்லரிக்கும், நெஞ்சுலுக்கும்,
சித்தந் தனைச் சிலிர்க்கும்
செந்தமிழில் நற்கதைகள்
நத்தி நம்மவர்க்கு
நாளும் அளித்துவந்த
பித்தனவன் கற்பனையில்
பிறப்பெடுத்துத் துள்ளிவந்த
சித்திரங்கள் அத்தனையும்
சிரஞ்சீவி யாய்உலகில்
நித்தம் நிலைத்திருக்கும்
நிலையை நீர் உணர்வீரோ?

சீதக்காதி என்பான்
செத்தும் கொடுத்தானென்
றோதுகின்ற கூற்றைப்போல்,
உலகத்தே தன்னுடைய
பூதவுடல் நீத்துப்
போனாலும் பித்தனவன்
சாதலறியான் ; உம்போல்
சாக்காடும் தானறியான்!
போதலறியான்! எனினும்
புகழ்அறிவான்! செய்ந்நன்றி
நீதிமற வாமக்கள்
நினைவிலே நின்றறிவான்!
ஈதையெலாம் நீரறிந்தும்
ஏனையா புலம்புகிறீர்?
புலம்பாதீர்!

1955

# வா வா வா!

நெற்றி வேர்வை நீர்பொ ழிந்து நிலம் கீ றி
நெல்வி ளைத்து உயிர்பு ரக்கும் விவ சா யி
வெற்றி காண, சிறுமை நீங்க, நன் மார்க் க
வீதி காட்டும் மேதின மே வா வா வா!

தொழில் பயின்று பொருள்ப டைக்கும் தொழி லா ளி
துயர்து டைக்கும் அறிவு தந்தே அவன் வாழ் வு
எழில் மலிந்து ஏற்ற மெய்தும் வழி சொல் லி
இனிது வந்த புனித நாளே வா வா வா!

நீதிநியாயம் நேர்மை யற்ற சூழ் நிலை யில்
நெஞ்சுடைந்து மாளு மாந்தர் நிலை மா றி
சோதி வீச, புன்மை மாய, சுகம் தோன் ற
சுடரெ ழுப்பி வருதி னமே வா வா வா!

குன்றி நித்தம் உழைத் துழைத்து, கூன் வீழ்ந் து
குழிவி ழுந்து கிடந்த மக்கள் விழித் தெழுந் து
முன்றி நின்று வர்க்க போத உணர் வுற் று
உரிமை கோரும் நெறிபு கன்றாய் வா வா வா!

யுத்த வேட்கைப் பேயர் சூழ்ச்சி மண் ணுற வே
யுக்தி சொல்லி மக்கள் சக்தித் துணை யா லே
ரத்தப் போரைத் தவிர்க்க சமா தானம் எ னும்
நெறிப யின்று வருதி னமே வா வா வா!

இருள்ம லிந்த வறுமை நீங்கி ஒளி தோன் றும்
இன்ப வாழ்வு பெற்று யர்ந்து எந் நா ளும்
பொருள்ம லிந்து கலைவ ளர்ந்து அருள் சுரந் து
புவன முற்றும் களிசி றக்க வா வா வா! 1953

# இந்தியக் குடியரசு

திருநாளாய், வைபவமாய், தெருவெல்லாம் கெக்கலிக்கும்
பெருநாளாய் எண்ணிமனம் பீடுற்றோம்—வருநாளில்
இந்தக் குடியரசால் ஏழைபணக் காரனெனும்
பந்தத் தளையெல்லாம் பட்டுவிழ—சொந்தமென
உழுதுழுது பாடுபட்டும் உழைப்பின் பலனறியாப்
பழுதுபட்டு மக்கள்குலம் பஞ்சமற—தொழுதடிமைக்
கும்பிடுகள் சாத்துகின்ற குல்லாக்கள் போடுகின்ற
வம்புநிறை சோம்பேறி வாழ்க்கையற,—செம்படித்த
காசும் கிடைக்குமென்றால் கள்ளக்கடை நடத்தும்
நீசத் திருக்கூட்டம் நீறாக,—தேசத்தில்
லஞ்சப் பிசாசுகளால் லாந்தி வரும் பேரெல்லாம்
பஞ்சாய்ப் பொடித்தூளாய்ப் பறந்தோட—நெஞ்சத்தில்
கள்ளத்தனம் கொண்டு கண்ணில் மண் தூவுகின்ற
குள்ள மனிச ரெல்லாம் கூண்டேற,—வெள்ளமென
நாட்டில் நலம் கொழிக்க, நலிவுற்ற பஞ்சைமக்கள்
வீட்டில் திருச்சேர்ந்து விளக்கேற—தேட்டமுடன்
கலிவெண்பா யாத்திசைத்தேன் ; காசினியில் மக்கள் குலம்
கலிநீங்கி வாழ்க களித்து !

1950

# ஜனவரி 30

சத்தியத்தின் இன்னுருவாய், சாத்துவிகப் பேரொளியாய்
பத்தியங்கள் பல நோற்று பாரதத்து நோய்நொடியைக்
கத்தியற்று ரத்தமற்றுக் களைந்தெறியப் பாடுபட்ட
சத்தியவான் போய்மறைந்தான்! சண்டாளன் கொன்று
விட்டான்! 1

கடும்புலிகள் மத்தியிலே கன்றேந்திச் சென்றதுபோல்
இடும்புற்ற நவகாளி இருளூடே, ஒற்றுமையை
உடும்புப் பிடிப்போடு உருவேற்றி வந்தவனைக்
கொடும்பாவி துப்பாக்கி கொண்டல்லோ கொன்று
விட்டான்! 2

இந்தியர்கள் தம்நாட்டை இரண்டாகப் பிளந்தாலும்
சிந்தையிலே பிளவற்றுச் சேர்ந்தொன்றாய் வாழ்வதற்காய்
நொந்தும் நோன்புற்றும் நொடிப்பொழுதும் சோராதான்
சிந்தி விட்டான் செங்குருதி! செத்துவிட்டான்
இன்றைக்கு! 3

எங்குலத்து நாயகனின் இலட்சியத்தை நிறைவேற்றச்
செங்குருதி வெள்ளத்தில் சேர்த்திடுவோம் நம் கரங்கள்!
நங்குலத்தைத் தீண்டிவரும் நச்சரவை, வேற்றுமையை,
பொங்கும் விஷக் கனலைப் பொசுக்கிடுவோம்!
ஒன்றுவோம்! 4

1948

## சங்கமம்

வேறுவேறு திசை மாறிச்செலும் இரு
ஆறுகளை வெட்டித் தேக்கினுர்—கடல்
ஐந்தினையும் ஒன்று ஆக்கினுர்!

ஈரிரண் டாண்டினில் ஆறுபத்து மைல்
தூரத்திலும் பணி யாற்றினுர்—புவித்
தோற்றத்தையே உரு மாற்றினுர்!

ஆறின் இருகரை தோறும் பலப்பல
ஊரினையும்உண் டாக்கினுர்—பொருள்
உற்பத்தியை விரி வாக்கினுர்!

நீரின்விசை யால்மின் சாரபலம் பெற்று
சீரியநற் ருெழில் ஊக்கினுர்—நாட்டின்
செல்வத்தைப் பன்மடங் காக்கினுர்!

வெட்ட வெளிக்களர் பொட்டலினைத் தங்கக்
கட்டிச்சு ரங்கமாய் ஆக்கினுர்—பழக்
காடுக ழனியுண் டாக்கினுர்!

தொட்டதெலாம் கரம் கிட்டும் பெருந்தொழில்
திட்டங்கள் பற்பல தீட்டினுர்! சொன்ன
தேதியில் செய்துமே காட்டினுர்!

பாலைநிலத்தினை சோலைவனம் மலர்
மாலைவனமென ஆக்கினுர்—மந்த
மாருதமும் ஆங்குறப் போக்கினுர்!

ஆலைகளைத் தொழிற் சாலைகளை, ஆக்க
வேலைகளை அவர் பேணினுர்—யுத்த
வேட்கைச் செயலுக்கே நாணினுர்!

ஆக்கமும் சாந்தியில் நோக்கமும் தொழில்
ஊக்கமும் சோவியத் ஆட்சியில்—உள்ள
உண்மையினுக் கே இது சாட்சியே !

தேக்கமும் யுத்த நோக்கமும் பண
வீக்கமும் மிஞ்சிய நாட்டிலே—இந்த
விந்தையெ லாம்வெறும் ஏட்டிலே !

வால்கா டான் நதிக் கால்வாயின் சங்கமம்
வையத்திலே பெருஞ் சாதனை—மக்கள்
வர்க்கத்துக்கே அரும் போதனை !

கால்வாயின் சங்கமத் தால்ஐந்து சாகரம்
கலந்ததைச் சிந்தை கூருவோம்—ஐந்து
கண்டமும் ஒன்றெனச் சேருவோம் !

1952

# கூச் பீஹாரில்
# கொலையுண்ட குமரிக்கு

வன்பசியின் கொடுமையினால் வயிறு காய்ந்து
வாழவகை கேட்டுரிமை வேட்டுச் சென்ற
அன்புள்ள சோதரியே! நின்னைப் போலீஸ்
அரக்கர்படை துப்பாக்கிக் குண்டால் கொன்றார்
என்பதொரு செய்தியினைக் கேட்டோம்; நெஞ்சில்
எரிநெருப்புக் கனல்மூளக் கண்டோம்; மக்கள்
துன்பத்தைத் துடைக்கவகை யற்ற சர்க்கார்
தோட்டாவால் பதிலளிக்கும் கோரம்கண்டோம்! 1

ஆதிவெள்ளைக் காரரவர் ஆட்சிக் காலம்
அழிவுற்ற வங்கத்தின் பஞ்சை மக்கள்
நாதியற்று நடுத்தெருவில் செத்து வீழ்ந்து
நாய்நரியும் கழுகுகளும் நகரி லெங்கும்
வீதிவலம் வந்ததொரு கொடுமை கண்ட
வேதனையும் நின்கொலையை விளம்பக் கேட்ட
போதினிலே சிறுதுன்பாய்ப் போயிற் றம்மா!
போலீஸார் சுட்ட கதை அன்று கேளோம்! 2

கண்டுமுதல் தானியத்தைக் கடத்திச் சென்று
களஞ்சியத்தில் நிலவறையில் பதுக்கும் பேரைக்
கொண்டுவந்து நிறுத்தி, அவர் நெல்லை முற்றும்
கொள்முதலாய்ப் பிடுங்குதற்குத் துணிச்ச லற்றே
அண்டுமவர் பெருந் தயவால் அளிக்கும் நெல்லை
அரசாங்கப் பட்டியலில் வரவு வைத்து,

துண்டு விழும் தேவைக்காய் அயலான் நாட்டைத்
தொங்குகின்ற அரசியலார் உன்னைக் கொன்றார்!
3

வானமழை பொய்த்ததினால் வளமே யில்லை ;
வனச்செழிப்பு அற்றதினால் மழையும் இல்லை
ஆனதினால் வாருங்கள் ! ஊர்கள் தோறும்
ஆலமரம் அரசமரம் எங்கும் நட்டுக்
கானகத்தை வளர்த்துப்பசி தீர்ப்போம் என்று
கதையளக்கும் அரசியலார் உன்னைக் கொன்றார்!
வானமழை தரப்போகும் செந்நெல் அந்நாள்
வாய்க்கரிசி போடுதற்கோ? வயிற்றுக் காமோ ? 4

வள்ளலெனப் பேரிட்டு விலாசம் போட்டு
வாழுகின்ற பகற்கொள்ளைக் காரர் தம்மை,
கொள்ளைவிலை கூறிநந்தம் குருதி மாந்தும்
கோடாலிக் காம்புகளை, பதுக்கி வைத்துக்
கள்ளவிலை வாணிபஞ்செய் கயவர்தம்மைக்
கட்டிவந்து கிட்டியிட்டுக் கழுவி லேற்றி
உள்ளுருவி உயிருருவிக் கொன்றா ரில்லை !
ஒருபிழையும் அறியாத உன்னைக் கொன்றார் ! 5

டாட்டாக்கள் பிர்லாக்கள் டால்மியாக்கள்
டாம்பீக முதலாளி வர்க்கக் கும்பல்
மோட்டாவாய்க் கொழுப்பதற்காய் அயல்நாட்டாரின்
மூலதனத் தோடுறவு கொண்டே நந்தம்
நாட்டாரைச் சூறையிட்டுச் சுரண்டி வாழும்
நயவஞ்சக் கொள்ளைதனைக் கொன்றா ரில்லை !
கூட்டாளி அதற்கானார் ! பசித்த வாய்க்கே
கூழ்கேட்டுச் சென்றவனைச் சுட்டுக் கொன்றார்! 6

விடுதலையென் றேய்த்திட்டார்! எதற்கு? நம்மை
வெறிவேட்டை யாடுமுத லாளிக் கும்பல்
கெடுதலையே செய்யவிடு தலையோ? வாழ்க்கை
கெட்டழியும் பஞ்சைநிலைப் பட்டு மாந்தர்
படுதலையே தேசவிடு தலையென் றூரோ?
பசிக் கொடுமை நீக்காது மக்கள் தம்மைச்
சுடுதலையே மார்க்கமெனக் கொண்டால் அந்தச்
சுதந்திரத்தை மாற்றுமொரு கடமை காண்போம் 7

உன்னையவர் சுட்டதொரு குண்டின் ஓசை
ஓயாது எம்செவியில் ஒலித்தே ஓங்கிப்
பின்னையவர் முடிசாய்ந்து பெயர்ந்தே வீழும்
பெரும்புரட்சி நிகழ்ச்சியினை உலகுக் கிந்நாள்
முன்னையறி விக்குமொரு ஓசை! அன்னூர்
மூர்க்கவெறிக் கோர்முடிவு காணும் ஓசை!
கன்னிமகள் நின்கொலையின் பழியைப் பின்னாள்
கழுவுகின்ற காலம்வரை ஒலிக்கும் ஓசை! 8

1951

# பிள்ளை இதோ பிள்ளை !

பிள்ளை இதோ பிள்ளை !—ஐயோ
பிள்ளை இதோ பிள்ளை !

முந்தித் தவம்நோற்று வந்ததிருப் பிள்ளை !
முன்னூறு நாள்சுமந்த என்னருமைப் பிள்ளை !
அந்தி சந்தி கண்விழித்து அயராது காத்த
அருமந்த பிள்ளை! எந்தன் ஆசைக்கொரு பிள்ளை
(பிள்ளை இதோ—

சீராட்டிப் பாராட்டி வளர்த்த சிறு பிள்ளை !
செந்தூரப் பொட்டிட்டு நான்மகிழ்ந்த பிள்ளை !
ஓராட்டுப் பாட்டிசைத்து உறங்க வைத்த பிள்ளை !
ஒருபிள்ளை, இதுபோனால் மறுபிள்ளை இல்லை !
(பிள்ளை இதோ—

முல்லைமுகைப் பல்லரும்பால் முத்தமிடும் பிள்ளை !
முத்தமிடும் போதெழும்பும் பித்துவெறி கொள்ளை!
புல்லரிக்க, சடலமெலாம் புளகமுறச் செய்யும்
புத்தமுதச் சிறுகுதலை புகலுமிளம் பிள்ளை !
(பிள்ளை இதோ—

பிஞ்சுவிரல் மென்கரத்தால் கஞ்சியை அளைந்து
பேரமுத மாக்கிடுமென் ஆரமுதப் பிள்ளை !
நெஞ்சுபுகு புன்கவலை அஞ்சுகணந் தன்னில்
நீக்குமொரு புன்னகைவாய் பூக்குமொரு பிள்ளை
(பிள்ளை இதோ—

வாழவகை யில்லாதே நாளும்பல தாயர்
வாயெரிய வயிறெரிய வந்துவிற்கும் பிள்ளை !
பாழடைந்த அரசியலைச் சூழு கலிக் கோளைப்
பாருணரும் நாள்வரவைக் கூறவந்த பிள்ளை
(பிள்ளை இதோ—

பணந்தின்னிக் கழுகுபல வலம்திரியும் நாட்டில்
பஞ்சைமக்கள் ஆருயிர்க்கோ விலைமலிந்த
நாட்டில்
பிணந்தின்னிப் பேயாட்சி தலைவிரித்த நாட்டில்
பிரளயத்தை அறிவுறுத்தும் பிள்ளை, இதோ
பிள்ளை ! (பிள்ளை இதோ—

1952

## அன்னை தமிழ்த்
## தாயகமே வெல்க ! வெல்க!

எழுகடலும் புடைபுடைத்து எழுந்தாற் போலே
இமயவரை இடம்பெயர்ந்து எதிர்ந்தாற் போலே
கொழும்வடவைத் தீப்பிழம்பு குமுறிச் சீறிக்
கொதித்தெழுந்து குலவையிட்டுக் குதித்தாற் [போலே
விழும்தமர இடிமுழக்கம் அண்டம் கீற
விசைபிறந்து திசைபரந்து வெடித்தாற் போலே
எழுக படை எனமுழக்கிப் புதுவை மக்கள்
எழுந்துவிட்டார்! அவர் இயக்கம் வெல்க! வெல்க!
1

கடல்கடந்து வந்தகொள்ளைக் காரர் நந்தம்
கருந்தனமாம் அருந்தமிழ்நன் னுட்டை, திட்டாய்
திடல் திடலாய்ப் பிரித்தாண்ட சூழ்ச்சி வெல்வோம் !
தீந்தமிழர் வேறுபடோம் ! சிதைந்து வாழோம் !
உடல்பிளந்து இருகூருய் வீழ்ந்த போதும்
உயிர்சுமந்து எழுந்தஜரா சந்தன் போலே
அடல்மிகுவோம், படைதிரள்வோம் என்ருங் கார்த்த
அறச்சமரின் மறத்தமிழர் வெல்க ! வெல்க ! 2

நீர்த்தொகையால், நெடுவரையால், நெறியால், [பண்பால்,
நெஞ்சத்தால், மொழிவழக்கால் பிரிந்தி லாதோர்
வேர்த்தொகுதி போற்பிணைந்த மக்கள் தம்மை
வேற்றூரான் அரணமைத்து வெல்லப் போமோ ?

சீர்த்தமிழர் தம்நிலத்தை, குலத்தை வெட்டிச்
சிதைத்தாளல் இனிப்பொறுக்கப் போமோ?
என்றே
ஆர்த்தெழுந்த புதுவைமக்கள் அறப்போர் வெல்க!
அன்னைதமிழ்த் தாயகமே வெல்க! வெல்க! 3

வளமார்ந்த தாயகத்தே எங்கும் எந்த
வகையாலும் போர்வெறியர் புகுந்து யுத்த
தளமாக்கச் சம்மதிக்க மாட்டோம்; எந்தம்
தமிழகத்தை அயல்நாட்டார் சுரண்டும் வேட்டைக்
களமாக்கச் சம்மதியோம்; அடிமை வாழ்வின்
கட்டெல்லாம் பட்டுவிழக் காண்போம் என்றே
உளமார்ந்து படைதிரண்ட புதுவை மக்கள்
உரிமைப்போர் திருமுழக்கம் வெல்க! வெல்க! 4

1954

## வாழி நீ கொரிய நாடே!

வாழிநீ கொரிய நாடே
வாழிநீ வாழி வாழி!
ஆழி சூழ் உலகில், மக்கள்
அரண்செயும் அறப்போ ராமேல்
ஏழிரு பிறவி யேற்று,
போர்க்கொடி ஏந்தி, மாற்ருர்
சூழினும் வெல்லார் என்னும்
உண்மையின் சொரூப மாஞய்! 1

விலைக்களம் நச்சும் யுத்த
வேட்கையர் நினது மண்ணைக்
கொலைக்கள மாக்கிப் பன்ஞள்
கொடுமையே புரிந்த போதும்
உலைக்களத் துருக்காய், மக்கள்
உறுதியே இறுதி வெற்றி
நிலைக்களம் காணும் உண்மை
நெறியினை உணர்த்தி நின்ருய்! 2

சிந்தையில் இரக்கம் இல்லாச்
சிறுமதி யாளர் நின்மேல்
செந்தழற் குழம்பின் குண்டு
சிதறியே சிதைத்து மக்கள்
வெந்துடல் கருகிச் சாக
வீழ்த்திய போதும் வீழாய்!
உந்திடும் தேச பக்தி
உருவமாய்ப் பொலிந்து நின்ருய்! 3

சிங்கவெங் குருளை யொத்த
வீரரைச் செருவில், கோஜே
வெங்கொடும் நரகில் வெட்டி
வீழ்த்திய போதும், காதல்
மங்கையர் கற்பும் பொற்பும்
மானமும் பறித்த போதும்
அங்குல நிலமும் மாற்றான்
வசப்பட அளிக்கிலா தாய்! 4

போர்ப்படை கொண்டும், குண்டு
மழையெனப் பொழிந்தும், சேனை
வேர்ப்பட வீழத் தந்தும்,
வென்றிலா மாற்றார் நின்னை
நேர்ப்படப் பொருத லாற்றார்
கிருமிசேர் குண்டால் நின்னைத்
தூர்ப்பட அழிக்கும் எண்ணம்
துணிகினும் தோல்வி காணாய்! 5

நாசியர் இழைத்த நாசம்
வெள்குற, நாணிக் குன்ற,
பாசிசக் கொடுமை பொய்யாய்ப்
பழங்கதை போலாய்ப் போக,
நீசமே புரிந்தும் வீழாக்
குன்றென நின்றாய்; எங்கள்
ஆசிய ஜோதி நீயே!
ஆண்டுபல் லூழி வாழி! 6

"விலகு நீ அமெரிக்காவே!"
என்றெழுந் தெழுந்து விம்மி
உலகெலாம் பரந்த மக்கள்
குலமெலாம் ஒலிக்கும் ஒற்றைக்

குலவையால் சாந்திக் கொள்கை
முழங்கியே நின்னைக் காப்போம் !
அலகு கண் டொதுங்கும் பேய்போல்
போர்வெறி அழியக் காண்போம் ! 7

சாந்தியின் இயக்கம், மக்கள்
சக்தியின் இயக்கம், ரத்தம்
மாந்திடும் யுத்தப் பேயை
மடிக்குமோர் இயக்க ஜோதி
ஏந்துவோம், எடுப்போம், வெற்றி
எய்துமோர் உறுதி பூண்போம் !
தீந்திரு கொரிய நாடே !
நின்பழி தீர்த்து வைப்போம் ! 8

1952

# சமாதானம்

போருக்குக் கச்சை கட்டும்
போக்கிரிகள் வஞ்சகத்தை
ஊருக்கு ஊர் திரண்டு
ஒழிப்பதற்கே...
சமாதானம்! 1

அதிகார வெறி கொண்டு
ஆதிக்கப் போர் தொடங்கும்
சதிகாரர் திட்டத்தைச்
சாய்ப்பதற்கே...
சமாதானம்! 2

அப்பாவி மக்கள் தமை
அழிக்கின்ற வல்லரசின்
கைப்பாவைக் கூலிகளைக்
கவிழ்ப்பதற்கே...
சமாதானம்! 3

அண்டை அயல் நாட்டில்
அநியாயப் போர் நடத்திச்
சண்டையிடும் போர்வெறியர்
தகர்வதற்கே...
சமாதானம்! 4

கொரியாவில் நடக்கின்ற
கொலைச்செயல்கள் உலகெங்கும்

விரியாமல் காப்பாற்ற
வேண்டுவதே...
சமாதானம்! 5

கூண்டோடு மக்கள் தமைக்
கொன்றொழிக்கும் அணுகுண்டைப்
பூண்டோடு வேரறுத்துப்
புதைப்பதற்கே...
சமாதானம்! 6

ஏர்முனையில் சோறளிக்கும்
ஏழைகளைப் பீரங்கிப்
போர்முனைக்குக் கொண்டுசெல்வோர்
பொடிவதற்கே...
சமாதானம் 7

கலையைக் கவிதையினைக்
கற்பனையைச் சூறையிட்டுக்
கொலை வெறியைக் கலையென்போர்
குலைவதற்கே...
சமாதானம்! 8

உடை யுணவு குடியிருப்பை
உத்தாரம் செய்யாமல்
படை திரட்டும் போர்க்கொள்கை
பாழுறவே...
சமாதானம்! 9

உலகத்து மக்களெலாம்
ஒன்றாகி, ஓரினமாய்,
கலகமற்றுச் சுகவாழ்வு
காண்பதற்கே...
சமாதானம்!

1951

## 'கலாசார சுதந்திர' மகாநாட்டில் கலந்துகொண்ட எழுத்தாளனுக்கு :

எந்தச்சு தந்திரம் கேட்டுநின் றாய் ?—அங்கு
எவர்க்கு விடுதலை வேட்டு நின்றாய் ?
சிந்தை துடிப்பதைத் தொட்டுணர்ந்தே உண்மை
செப்புவையோ ? மனம் ஒப்புவையோ ? 1.

நெற்றிவி யர்வையைச் சொட்டுச் சொட்டாய்—சிந்தி
நித்தம்உ ழைப்பவர் தம்கு லத்தை
வற்றிமெ லிந்திடச் செய்தவர் வாழ்வினை
மாந்திக்கொ ழுப்பவர் தம்மவர்க் கோ ? 2.

பண்ணை வெளியிற் கழனிகளில்—பயிர்
பச்சை விளைப்பவன் தன்வ யிற்றில்
மண்ணைய டித்தவன் செந்நெலை முற்றுற
வாரிம டுப்பவர் தம்மவர்க் கோ ? 3.

ஆலைகளைத் தொழிற் சாலைகளை—பொருள்
ஆக்கம் மலிந்திடும் நாடுகளை,
சோலைவனங்களைப் பாலைவன மாக்கிச்
சுட்டுப்பொ சுக்கிடும் சூரருக் கோ ? 4.

பேயுருக் கொண்டுவெ குண்டெழுந்து—யுத்தப்
பீரங்கித் தீனியாய் மக்கள்தமை
ஆயிர மாயிரம் கொன்று குவித்தவர்
ஆவிகு டித்திடும் பாவியர்க் கோ ? 5.

மாதர்கு லத்தினைக் கற்ப ழித்து—பச்சை
மதலைக்கு லத்தினைச் சீரழித்து
தாதையர் தாயரைக் கொன்றுகு வித்திடும்
சண்டாள யுத்த வெறியருக் கோ? 6.

காக்கிக்க றுப்புச்சி வப்புத்தோலா மெனக்
கட்சிகள் கட்டி நிற வெறியால்
நீக்கிரோ மக்களைத் தூக்கிலிட்டுக் கொல்லும்
நீசருக்கோ? படு நாசருக்கோ? 7.

எண்ணெய் வயலும் நிலக்கரியும்—இன்னும்
ஏராள மான கனிப்பொ ருளும்
கண்ணைக் கவர்ந்திடும் அன்னியர் நாட்டினைக்
கவ்வத் துணிந்திடும் பேர்வழிக் கோ? 8.

பொய்யும் புலையும் புளுகுகளும் முழுப்
புரட்டும் பலப்பல சொல்லிச் சொல்லி
வையகப் பாமரர் நெஞ்சினில் நஞ்சினை
வாந்தி யெடுப்பவர் தம்மவர்க் கோ? 9.

கொள்ளை கொலைவெறி ரத்தவெறி யுத்த
கோரவெறி பழி காரவெறிக்
கள்ளரைச் சார்ந்துநீ நிற்பதற்கோ இங்கு
'கலைக்குச்சு தந்திரம்' என்று சொன்னாய்? 10

ஆதிக்க வேட்டை வெறியர் களின்—பே
ராசைக்குத் தாளங்கள் போட்டு நின்றாய்!
நீதியை நேர்மையைக் கொய்து விட்டாய்!—படு
நீசத்தனத்தை நீ செய்து விட்டாய்! 11.

வச்சிரம் போலுமோர் அஸ்திரத்தை—சுடர்
வாளினை ஒத்ததோர் ஆயுதத்தை

எச்சில் இலைக்கு நீ விற்று விட்டாய் !—பிச்சை
ஏற்றுவிட்டாய் ! உண்மை தூற்றி விட்டாய் ! 12.

டாலரின் வெள்ளிக்கு ஆசைப்பட்டுச் சொந்தத்
தாயைமுச் சந்தியில் ஏலமிட் டாய் !
காலரை மாகாணிக் காசுக்காய் நாணயம்
காற்றில்விட்டாய் ! பழி ஏற்றுவிட் டாய் ! 13.

காப்பிச்செ லவுக்காய் மேல்மினுக்காய்—ஓசிக்
காரில்ச வாரிகள் போவதற் காய்
சாப்பிட்டு ஊனை வளர்ப்பதற் காய்—மனச்
சாட்சியைச் சந்தையில் விற்று விட்டாய் ! 14.

தர்ம முறைமை துறந்தவரை—பெற்ற
தாயகம் தன்னை மறந்தவரை
நிர்மூல மாக்கிடும் மக்களின் சக்தியை
நெஞ்சில் சிறிதெண்ணிப் பார்த்திடுவாய் ! 15.

# மீட்டத் திரண்டெழுவோம்

மீட்டத் திரண்டெழுவோம்—சிறை
மீட்டத் திரண்டெழுவோம்

ஓட்டைச் செவியராய், ஊமையாய் பார்வையில்
ஊனமும் உற்றவராய்—மன
ஒற்றுமை அற்றவராய்—பெற்ற
நாட்டை மறந்தவர் காதில் விடுதலை
நாதம் ஒலித்தவனை—கவி
நாயகன் பாரதியை— (மீட்டத்—

மடப் பழமையை, பொய்மையை, ஜாதிய
மூர்க்க முதலைகளை—பகை
மூட்டும் இனவெறியை—விரைந்
தோட விரட்டிடும் பாடல்கள் பற்பல
ஓதிய பாவலனை—சொல்
லோவியன் பாரதியை— (மீட்டத்—

வெள்ளையனின் பகற் கொள்ளையை, ஆதிக்க
வேட்டை வெறித்தனத்தை—வெட்டி
வீழ்த்துவம் என்றதிர்ந்தே—புயம்
துள்ளிப் புடைக்குமோர் சொல்லை யருளிநம்
தூக்கம் கலைத்தவனை—கவித்
தோன்றலை, பாரதியை— (மீட்டத்—

அன்னை திருக்குலம் தன்னை யடிமையாய்
ஆக்கிடும் ஆணவத்தை—எதிர்த்
தார்த்திடும் போர்முரசை—எட்டு

விண்ணு மட்டும் முட்ட முன்னி முழக்கிய
வித்தக புத்திரனை—எங்கள்
வீரனை, பாரதியை— (மீட்டத்—

ஒருமித்தோம் நாமெனில் சிரமங்கள் போமெனும்
உண்மை உணர்ந்தோமேல்—நம்மில்
ஒற்றுமை கண்டோமேல்—அன்றே
வறுமைக்குச் சாவுண்டு வயிற்றுக்குச் சோறுண்டு
வாழ வழியு முண்டு—என்று
வாழ்த்திய பாரதியை— (மீட்டத்—

பாட்டுத் திறத்திஞல் நாட்டைத் திருத்துறப்
பாடிய பாரதியை—அவன்
பாடலை, பண்ணமுதைக்—கட்டிப்
போட்டு வைத்தே வரி தீட்டுவிக்கும் சிறைப்
பூட்டை உடைத்தெறிவோம்—அறப்
போரில் புடைத் தெழுவோம்! (மீட்டத்—

1953

# இன்பப் பொங்கல்

காடுகளாய் மேடுகளாய் கரம்பாய், வேனிற்
கானல் வெளி வெம்பரப்பாய்க் காட்சி தந்த
நீடுலகைப் பண்படுத்தி நீர்க்கால் தேக்கி
நெற்குலையும் செங்கரும்பும் நிமிர்ந்து விம்மப்
பாடுபட்டுத் தினம்உழைத்துப் பட்ட பாட்டின்
பயனையெலாம் பறிகொடுத்துப் பசியால், துன்பால்
வாடுகின்ற ஏழைமக்கள் வாழ்வில் வற்ரு
வளஞ்சுரக்கும் நன்னளே இன்பப் பொங்கல். 1

வானத்து இளமஞ்சின் மென்மை தோற்கும்
வட்டநிலாக் கதிர்க்குலத்தின் ஒளியும் நாணும்
கானத்து மயிற்றேகை வண்ணம் மங்கும்
கைவண்ணத் தாலிந்த உலகின் மக்கள்
மானத்தைக் காப்பதற்குத் துகில்கள் நெய்தோர்
மானத்தைக் காக்கவொரு முழத்துண் டின்றி
கூனத்துப் பிறவிகளாய் குறுகிச் சாம்பும்
குறைதவிரும் நன்னளே இன்பப் பொங்கல். 2.

மண்ணிடித்துக் கல்லுடைத்துச் சுண்ணம் சேர்த்து
மரம்பிளந்து கலையுளத்தின் மாண்பும் சேர்த்து
விண்ணிடிக்கும் கோபுரத்தை, கலச கூட
விமானத்தை அரண்மனையைக் கட்டித் தந்தோர்
கண்ணுடைத்துப் பெருக்கெடுக்கும் கண்ணீர்சோரக்
காற்றுமழை வெயில்தடுக்கக் காவல் இன்றிப்
புண்ணடைந்த உளத்தோடு வாழும் புன்மை
பேயொழியும் நன்னளே இன்பப் பொங்கல். 3.

மானிடர்தம் உதிரத்தை, உயிரை, மாதர்
மங்கலநன் நாண்கயிற்றை, மதலைப்பேச்சின்
தேனடையாய்த் திகழ்கின்ற சிறுர்கள் தம்மைத்
தின்றழித்துக் கொன்ருெழித்து ரத்தம் தேக்கி
நானிலத்தும் போர்வெறியை மூட்ட வெண்ணும்
நரவெறியர் சூழ்ச்சியெலாம் வென்று, மாந்தர்
வானுலகைப் பூநிலத்தில் நிறுவி வெற்றி
வாகைபுனை நன்ளுளே இன்பப் பொங்கல்.

1956

## கந்தையா !...

நமஸ்காரம்.
கந்தையா ! உந்தன்
கலியாணச் செய்தியினை
முந்தை யிரவினில்தான்
முகங்கண்டு நானறிந்தேன் ;
சிந்தையெலாம் தென்திசைக்கே
சென்றுசென்று மீண்டுவர
வந்துசெல்ல வழியின்றி
வாழ்த்துகிறேன் திசைநோக்கி !

2

உன்னை நினைந்து விட்டால்
உள்ளமெலாம், பாலத்துச்
சின்னத் தட்டாரத்
தெரு வீட்டு மாடியினை
எண்ணி யெண்ணிப் பார்த்து
ஏங்கும் ; மறுகணத்தில்
எதுக்களிக்கும் பூரிப்பால்
வீங்கும், களியாடும்
விம்மும், ஆர்ப்பரிக்கும்.
அந்நாளில்—
கல்லூரிப் படிப்பதனைக்
காடேற்றி, நம் வாழ்வின்
செல்லரிப்பைப் போக்கி,
சிந்தைதனில் வலுவேறிப்
புல்லரிக்க, நெஞ்சில்

புத்தமுதத் தேன்சுரக்க
அல்லும் பகலும்
அறுபத்து நாழிகையும்
குள்ளச் சமூகத்தைக்
கூன் நிமிர்க்கக் கோலெடுத்து
வெள்ளைத் தமிழ்ப் புலமை
விருது கட்டி வாழ்ந்ததுவும்,
பாட்டென்று படங்காட்டிப்
பம்மாத்துப் பண்ணிவரும்
கூட்டத்தைக் கைலாசம்
கூண்டோடு தானேற்ற
வேட்டு வச்சிப் பாட்டெழுதி
வீரம் விளைத்ததுவும்,
ஆற்று மணற்பரப்பில்,
அ. சீ. ரா. தம் வீட்டில்
சோற்றை நாம் மறந்து
தூக்கம் நமை மறக்க
ஊற்றூறும் நெஞ்சமதில்
உவகைப் பெருக்கூறக்
காற்றில் மிதக்க விட்ட
கவிதைகளைக்
கண்ணம்மன் கோயில்
கடைவீதி முச்சந்தி
மண்ணறியும் ; ராணி
மங்கம்மா ரோடறியும் !

3

அந்தப் பெரு வாழ்க்கை
அரிசிக்காய், உப்புக்காய்
சிந்திச் சிதறிப்போய்

சென்னை—திருச்சியிலே
குந்திக் கிடந்தாலும்
குன்றாமல் நாம் வாழ்வோம் !
சொந்தத் தமிழ்மொழியைச்
சோற்றுக்காய்த் தள்ளிவிடோம் !
இருந்தாலும்—
கர்ச்சனைசெய் வானொலிக்குக்
கவிதைபுனை உன்நெஞ்சை
அர்ச்சனையாய்த் தாராமல்,
அன்புத் தனித் துணையாய்,
வம்பிழுத்து மகிழ்விக்க
வந்தவொரு சம்பத்தாய்,
நெஞ்சில் சலிப்பேறி
நினைப்பெல்லாம் வேறுபடின்
கொஞ்சிக் குலவி மனக்
குறைதீர்க்கும் நன்மருந்தாய்,
இதயத்துக் கோட்டையிலே
இருள்போக்கி, கவிதையொளி
உதயத்தைத் தூண்டுவதற்
குற்ற தொரு வான்மகளாய்,
பதுமப்பெயர் கொண்டாள்
பதும மலர்க்கை பிடித்தாய் ;
புதுமணத்து வாசலிலே
புன்னகைத்துப் போகின்ற
வதுமகனே ! நின்னை
வாயார வாழ்த்துகிறேன்.

4

நீயும் நின் மனைத்துணையும்
நீடுலகில் பீடுயர்ந்து

வெற்றிக் கொடிநாட்டும்
வீரர்தம் பேரைப்போல்,
முற்றிக் கனிந்தவர்தம்
மூதுரைபோல், தமிழைப்போல்,
சிற்றம்பலத்தான் சொற்
சிறப்பைப்போல்,
என்றும் புகழ் நிறுவி
இருத்தி என வாழ்த்திச்
சென்று வருகின்றேன் ;
செலவெனக்குத் தாருமையா !

1947

# வேளூர்க் கவிராயா

வேளூர்க் கவிராயா! விண்ணுணச் செந்தமிழின்
வாளொத்த கவியிரண்டும் வாசித்தேன்—நாளெல்லாம்
வெந்தழலாற் பாட்டெழுதும் விருத்தா சலப்பெரியோய்!
தந்திட்டேன் மிகவந் தனம். 1.

தோணியப்பர் பாடிவச்ச சூத்திரத்தைப் பார்த்தபின்னும்
வீணுக்கே கவியெழுதும் வெட்டிகளைக்—கோணிக்குள்
போட்டடைச்சிப் பெருச்சாளி போலடிச்சிச் சாகடிக்கப்
பாட்டெழுதில் உண்டு பலன். 2.

காமனையும் சோமனையும் காவினையும் தென்றலையும்
வாம முலையழகும் வருணித்து—சாமத்தில்
குடை பிடித்துக் கூத்தாடும் கூட்டத்தார் தங்குடுமிச்
சடை பிடித்துச் சாத்தல் சரி. 3.

தங்கக் கவியென்றே தமுக்கடிச்சிச் சொல்லிவரும்
வெங்கத் திருக் கூட்டம் வீடுபெற—சங்கத்து
நக்கீரன் தன்வழியில் நாமிருவர் சென்று நிதம்
மொக்க வுண்டு பேறு முனே! 4.

1945

## பேருக்கா கலைக்கழகம் ?

அன்றொருநாள் மாலை
அடியேனும் ரத்தினமும்
தின்ற 'டிபன்' செமிக்கத்
தெருச்சுற்றி வரும்வேளை,
"கல்லத்தி முடுக்கதனில்
கலைக்கழகம் கூட்டுகிறார்;
செல்லப்பா" என்றொருவர்
செப்பிடவும், இருபேரும்
"நல்லதப்பா, வாபோவோம் ;
நம்மூருத் தோழருக்கும்
கலையார்வம் பொங்கிடிச்சோ ?
கண்டு வருவ"மெனச்
சென்றோம்...
ஆங்கே
சில தோழர் வீற்றிருந்து
சிகரெட்டுப் புகைநடுவே
"கலையார்வம் பொங்கிவரக்
கழகம் அமைக்கோணும் ;
பலபலவாம் கலைமூலம்
பாட்டாளிப் பாமரர்கள்
நிலையுயர்த்த நாமெல்லாம்
நிசத்தைச் சொல்லோணும் ;
நாடகங்கள் போட்டிடணும் ;
நாமெல்லாம் நடிக்கோணும் ;
பாடகர்கள் சேர்க்கோணும் ;
பாட்டும் எழுதோணும் ;

வீடெல்லாம் கலைப்பேச்சு
விரவி வரவேணும் ;
நாடெல்லாம் நம்கலைக்கு
நல்வரவு சொல்லோணும் ”
என்றெல்லாம்—
வீடதிரக் குரலெடுத்து
வீரங்கள் சொன்னார்கள்.

2

“ ஆஹா !
எத்தகைய புத்துணர்ச்சி !
என்னருமைத் தோழர்களே !
இத்தினமே சுதினம் !
இந்தப் பணிக்கெம்மைத்
தத்தமிட்டோம் ” என்றுசொலித்
தாளமிட்டோம் கலைஞர் குழாம்.
அத்தனைதான் ! கலையார்வம்
அப்பாவி ஓர்சிலர்மேல்
தொத்திடவும், அன்னவர்தம்
தோள்தட்டி ஆர்ப்பரிக்க
எத்தனித்தார் !
அதுகண்டு,
அன்றைக்கு—
ஆரம்பக் கூட்டமதில்
ஆங்காரப் பேச்சுமிழ்ந்த
சூரர் சிகாமணிகள்
சொல்லாமல் கொள்ளாமல்
பாரம் கழிந்ததெனப்
பவிசாய்த் திரிந்தார்கள் !

3

என்றாலும்,
புத்தகப் புழுவாகி,
புத்தி தடுமாறி, சென்ற
பத்து வருஷ மதாய்ப்
பாரதத்துக் கலையுணர்வில்
சித்தம் இழந்து, தமிழ்ச்
சிறுகதைகள், கவியெழுதிப்
பத்திரிகைத் தொடர்பேற்று,
பசி மறந்தும் பாடுபட்டுச்
செத்தும், தமிழ்க்கலைகள்
சீவிக்க வேண்டுமென்று
நித்தம் உழைத்தலுத்தும்
நெஞ்சம் அலுக்காத
நானும், எனையொத்த
நண்பர் சிலபேரும்
வேணுங் கலைவளர்க்க
வீராபுரம் சென்றோம்.

4

வீராபுர மதனில்—
மார்க்ஸைப் படித்தவர்கள்,
மக்கள் மக்கள் என்பவர்கள்,
கார்ச் சங்க மேடையிலே
கழகம் அமைத்தார்கள்.

வாரமுறை தவறாது
வாய்வீச்சு வீரர்குழாம்

வாரதுவும் போறதுவும்
வக்கணைகள் பேசுவதும்
நேரம்கழிந் தால்கம்பி
நீட்டுவதும் தொழிலாய்க்
கொண்டார்கள்.

“கள்ளக் கடை ஒழிக்கக்
கலைக்கழகம் பாடுபடும்!
கொள்ளைவிலை மோசடிக்குக்
குழிதோண்டக் கவி எழுதும்!
பாடுபடும் பாட்டாளி
பசி தீர்க்கக் கலை தீட்டும்!
நாடுவளம் பெற்றுயர
நல்ல கலை தனைவளர்க்கும்!”
என்றெல்லாம்,
ஆத்திரங்கள் மிகக்காட்டி
ஆர்வமுடன் மக்கள்கலைச்
சூத்திரமும் சாத்திரமும்
சொல்லிப் படித்தார்கள்;
கைநீட்டி வாய்நீட்டிக்
கப்பி அடித்தார்கள்;
பைநீட்டி ஒன்றிரண்டு
பைசாவும் தந்தார்கள்;
வாணிவிலாஸ் ஹோட்டலிலே
வாய்ருசிக்கக் கைத்துட்டைப்
போணி செய்த வேகத்தில்
பொழிந்தார்கள்!
இப்படியாய்ச்
சாணேற, முழம் வழுக்கச்
சங்கம் வளர்ந்தது காண்!

5

கலைக்கழகம் இப்படியாய்
கட்டெறும்பாய்த் தேய்ந்திற்று
அலைக்கழியும் நிலையதனை
ஆர்வமுள்ள ஓரிருவர்
கண்டார்கள்.
கண்டவர்கள் அந்நாளில்
கழகத்தைத் தோற்றுவித்த
தொண்டர் குழாம் தனைநோக்கி
ஒருவார்த்தை சொன்னார்கள் :
" மேனா மினுக்கியர்போல்
மேடையிலே வீற்றிருந்து
பேனா விடுதலைக்குப்
பேச்சுக்கள் ! தாளங்கள் !
வீணான வெறும் பேச்சு
விண்ணாணம் போதுங்காண் !
காற்றோடு தான்பிறந்து
காற்றோடு தான் மடியும்
ஊற்றுக் கனவுகளை
உதைகொடுத்துத் தள்ளுங்காண்!
நித்தம் வியர்வைதனை
நிலம்பாய்ச்சிப் பயிராக்கும்
கொத்தடிமைப் பாட்டாளி
குறை தீர்க்க வேண்டுமெனில்
தத்துவங்கள் தன்னைமட்டும்
தலைபாடமாக்கி இங்கு
கத்துவதில் அர்த்தமிலை ;
கழகத்தை நெறிப்படுத்த
சட்டதிட்டம் உண்டானால்
சாற்றுமையா! எதிர்காலத்

திட்டங்கள் இன்னவென்று
தீட்டுமையா" என்றிட்டார்.
என்றவுடன்
பொட்டிக்குள் அதையெல்லாம்
பூட்டிவைத்த பாவனையில்
பட்டும் படாமலுமாய்
பதிலேதோ கூறிவிட்டு
விட்டும் பிரிந்துவிட்டார்;
விலாசம் மறந்துவிட்டார்!

6

பாட்டாளி மக்களுக்குப்
பயன்விளைக்கும் கலையென்று
கூட்டாகக் கூடிநிதம்
கூத்தடித்துப் போய்விட்டால்,
ஊருக்கு உழைப்பவர்கள்
ஒருசெயலும் புரியாது
ஆருக்கோ விருந்தென்று
அலட்சியமாய்ப் போய்விட்டால்,
பேருக்கா கலைக்கழகம்?
ஆதலினால் சொல்லுகிறோம்
உம்முடைய,
சாதா வெறும்பேச்சில்
சம்பங்கள் சாயாது!
வாதாடும் வாய்வீச்சில்
வளராது நம்கலைகள்!
கோதாவிலே இறங்கிக்
கொள்கை நிலை நாட்டுதற்கு
நெஞ்சில் இடமிருந்தால்,
நினைப்பில் சேவைசெய

வஞ்சமற்ற பேராசை
வளர்ந்தால், கலைஞரிடம்
வாங்களையா, இல்லையெனில்
வந்தவழி வகையறிந்து
போங்களையா, அருமையுள்ள
புண்ணியரே ! போய்வாரும் !

1947

# எத்தனை நாள்?...

நிலை விட்டு ரயில்மெல்லக் கிளம்பும் வேளை
நிழல்போலே ரயில்வண்டிச் சன்னல் ஓரம்
தலை காட்டி எழுந்தவொரு சிறிய தோற்றம்
தலைநீட்டி உள்ளேறி நுழையக் கண்டேன். 1.

தாரெண்ணெய்க் கட்டியினால் செய்த பொம்மை
தானல்ல அவ்வுருவம்! அந்தோ! வானக்
காரென்னக் கறுத்திருந்த உருவம் நம்போல்
கைகால்கள் கொண்ட சிறுபையன், ஐயா! 2.

சின்னேரம் அச்சிறுவன் கூனிக்குன்றிச்
செயலற்று மூலையிலே பதுங்கிப் பம்மி
முன்னேறப் பயந்தவொரு பூனைபோலே
மூலையிலே பதியிட்டு இருந்தான் ஐயா! 3.

பொல்லாத வெங்கொடுமை மிடிமை வாழ்வில்
புடம்போட்டு வார்த்தெடுத்த படிவம் போலே
மெல்ல மெல்ல அச்சிறுவன் மூலைவிட்டு
மெதுவாகக் காலூன்றி எழுந்து நின்றான். 4

அண்டையினில் வந்தவனும் நின்றான்; ஏதோ
ஆஸ்தானப் பாடகன்போல் நிமிர்ந்து நோக்கி
தொண்டையினைக் கனைத்திருமிச் செருமி வாயில்
தோன்றியதைப் பாடுதற்கே சித்தம் ஆனான். 5.

மங்காத கலைச்செல்வம் மலிந்த நாட்டில்
மகத்துவமும் பண்பாடும் செறிந்த நாட்டில்

கங்கு கரை அறியாத கலையின் உள்ளம்
கணமேனும் பொங்காது இருக்கப் போமோ? 6.

தகிக்கின்ற சாண்வயிற்றைக் கையால் தட்டித்
தாளமிட்டு அவன்பாடும் பஞ்சைப் பாட்டு
சகிக்காத பசிக்கும்பி கற்றுத் தந்த
சங்கீதக் கலையென்றால் தவறும் ஆமோ? 7.

பிழை மலிந்து பொருள்கெட்ட போதும், அந்தப்
பிழையறியா இளஞ்சிறுவன் பகர்ந்த பாட்டில்
இழைசெறிந்து பாவோடும் கருத்தும் யாதோ?
இதுதானே? நீர்தாமே உரைப்பீர், ஐயா! 8.

"சதையற்றேன்; எலும்பானேன், தோலும்
ஆனேன்;
தாங்கரிய துயராலிக் கதிக்கு வந்தேன்;
சிதைபோலே எரிகின்ற கும்பித் தீயால்
சிதைகின்றேன்; பிழைப்புக்கோர் வழியும்
காணேன்! 9.

"கணமேனும் சிறிதெண்ணிப் பாரீர்! யோக
கர்மாவில் தலைசிறந்த நந்தம் நாட்டில்
உணவில்லாப் பசி வறுமைப் பேய்கள் எங்கள்
உயிர் குடிக்கும் மருமத்தை அருகிலீரோ? 10

"ஒற்றுமையின் பெருவெளியாய்த் திகழ்ந்த
நாட்டில்
'உன்னுடைய—என்னுடைய' என்னும்
சண்டை
முற்றிவந்து நம் குலத்தை, வாழ்வைக் கொல்லும்
மோசத்தை, நாசத்தை உணர்கிலீரோ? 11.

"அறிவியலில் ஆகமத்தில் சிறந்த நாட்டில்
அறியாமை இருள்மண்டக் காண்கி லீரோ?
விரிகதிரோன் திருமுகத்தில் கரியை அள்ளி
வீசுகின்ற புல்லடிமை காண்கி லீரோ?" 12.

பாட்டுக்குப் பாராட்டுக் கிடைத்தும் அன்னோன்
பரவசமோ அகமகிழ்வோ கொண்டா னில்லை;
நீட்டியதோர் சிறுகரத்தில் வீழும் காசின்
நினைப்பொன்றே அவன் மனத்தில் நிலைத்த
தையா 13.

கையெடுத்துக் கும்பிட்ட அவன்தன் கையில்
காசுகளும் ஒன்றிரண்டு விழுந்த தையா!
வையகத்தில் இக்கொடுமை கண்டும், இன்னும்
வாழுகின்ற கருணையே நீ வாழி, வாழி! 14.

இன்பு தரும் பாட்டுத்தான்! எனினும் அஃது
இளஞ்சிறுவன் பாடியதோர் பாட்டோ? இல்லை,
துன்புறுத்தும் பசியாலே வாடும் மக்கள்
சூழநிற்கும் பாரதத்தாய் பாடும் பாட்டோ? 15

திருவாயின் மணிக்குரலும், நளினம் சேர்ந்த
திருக்காமும் நீட்டுகின்ற கலையும், எல்லாம்
ஒருவாய்க்கு உணவுக்கே என்னில், கண்ணீர்
உறுத்தாதோ? பொழியாதோ? உரைப்பீர்
ஐயா! 16

நிறுத்துங்கள் இக்கொடுமை தன்னை! நீதி
நெறியற்ற சாக்காட்டு வாழ்வின் நெஞ்சில்
குறி பார்த்து வீழ்த்துகின்ற வீரர் கூட்டக்
குழுவினிலே நீவீரும் ஒன்று சேர்வீர்! 17.

எத்தனை நாள் நமக்குள்ளே சண்டை ! நந்தம்
இந்தியத்தாய் அழுதரற்றும் கொடுமை போக்க
எத்தனமும் செய்யோமோ ? இன்னும் நம்முள்
எத்தனை நாள், எத்தனை நாள் சண்டை
சண்டை ? 18.

1952

# மகாத்மா

காணவும் தெரிகி லாத
களிப்புறு விஜய ரூபம்
மாணுயர்ந் தோங்க, அன்பின்
வெற்றிசேர் மாட்சி ஓங்க,
தானையும் சேனை யின்றித்
தமியனாய்ப் பொருது நின்றான் ;
வானவர் போக பூமி
வாயிலை அருகி வென்றான். 1.

சிங்கவெங் குருளை யென்ன
அன்னவன் செருவில், கையில்
சங்கெடுத் தூதும் நாத
சாகரம் முன்னிப் பாய்ந்து
பொங்குறும் ; எதிரொ லித்துப்
பொருதிடும் ; பொருத ஆங்கே
கங்குலின் நரக வாயில்
கதவங்கள் பொடிந்து வீழும். 2.

பலமிலா யாக்கை ; ரத்தப்
பசையிலா உடலம் ; என்னில்
உலைவுறு மலையின் நெஞ்சம்
உருக்கெனக் கொண்டோன் ; என்றும்
நிலைபெறும் உள்ள வன்மை
நெறியதால் உலகை யெல்லாம்
குலைவுறச் செயயும் ஆற்றல்
கொண்டவன் காந்தி யெம்மான். 3.

மண்ணதில் புதைந்து வீழ்ந்த
மன்பதை உரிமை தானும்,
தண்ணருள் அழிந்த அன்பின்
தகைமையும், அடிமை வாழ்வின்
எண்ணருங் கொடுமை தன்னை
எதிர்த்திட, எழுச்சிக் கீதம்
விண்ணுற முழக்கும் வீரம்
விளைத்தவன் காந்தி வேந்தன். 4.

சாத்திரம் காணா உண்மைத்
தன்மையைத் தேடி, துன்பத்
தோத்திரம் பாடி, வையத்
துயர், பசி துடைத்து, மக்கள்
நேத்திரம் குளிர்வ தொன்றே
நெறியெனத் தெளிந்து, கர்ம
யாத்திரை சென்றான் காந்தி!
ஈடென யாரைச் சொல்வாம்? 5.

# சாந்தி நிலவுக

கன்னம் சிவப்புறக் கன்னியர் தம்முளக்
காதல் விளம்புவ தும் — வெகு
நன்னய மாகவே இல்லற வாழ்வினில்
நல்லறம் பூணுவ தும் — அவர்
அன்னைய ராகி மதலையர் தம்மொடு
ஆனந்தம் காணுவ தும் — போர்
முன்னியெ ழுந்திடில் கண்ணிமைப்பில் மண்ணில்
மூடி மறையா வோ ? 1

செல்லச் சிறுநடை பயிலும் குதலையர்
சிற்றில் சிதைப்பது வும் — மெல்ல
மெல்லவந் தேபெற்ற அன்னையர் தம்மடி
மீதில் அமருவ தும் — தாயர்
முல்லை யரும்பெனும் பல்லொளி சிந்திட
முத்தம் பருகுவ தும் – நமைக்
கொல்லவரும் யுத்தப் பேய்புக நேர்ந்திடில்
கொள்ளைகள் போகா வோ ? 2.

துண்டுப் பிறைநிலா வாரியில், நுண்துளி
தூற்றும் இளம் பனியில் — கரு
வண்டு பயின்றிடும் இங்கித நாதத்தில்
வாசக் குளிர்மல ரில் — சுகம்
கண்டு குலவிடும் மக்களெலாம் சூறைக்
காற்றெனப் போர் வரு மேல் – எரி
குண்டு பட்டு, வாழ்க்கை விண்டு பட்டு விழும்
கூக்குரல் கேளா வோ ? 3.

வானம் அளந்திடும் கோபுரமும் எழில்
வண்ணத்தின் சித்திர மும் — கலை
ஞானம் மலிந்திடும் சாத்திரமும், பல
நன்மைசெய் எந்திரமும்—மக்கள்
மானமும் வாழ்வும் உயர் நலமும் பெண்டிர்
மங்கல நாண் கயி றும்—கொடுங்
கூனச் சிறுமதிப் போர் வெறியால் அலங்
கோலங்கள் ஆகா வோ ? 4.

சீர்முனை ந்தே குலம் வாழ்ந்து வளம்பெறச்
செய்தொழில் வல்லவரும்—நதி
நீர்முனை தேக்கியே கால்திருத்தி எங்கும்
நெல்லை விளைப்பவ ரும்—தங்கள்
ஏர்முனை நீங்கியே போர்வெறி யர்தரும்
எந்திரம் தாங்கிட வோ ?—கொடும்
போர்முனை வந்திடில் பல்தொழில் சக்திகள்
போரில் அழியா வோ ? 5.

முத்துக் குளித்தெழும் கத்துகடலில் நீர்
மூழ்கிக் குளித்தெழ வோ ?—நெல்
வித்து விளையும் கழனியி லே குண்டு
வீசி விதைத்திட வோ ?—நீர்
தத்தித் தவழ்நதி வெள்ளத்திலே மக்கள்
ரத்தம் பெருகிட வோ ?—நமைச்
சித்திர வாதைசெய் யுத்தமெனும் கொடுந்
தீமை பரவிட வோ ? 6.

ஆயிரமாயிரம் கோடி லட்சம் மக்கள்
ஆவி குடித்த வெறி—காளி
கோயில் கிடாயென மக்கள் குலத்தினைக்
கொன்று குவித்த வெறி—பெற்ற

தாயர் புலம்பிட மைந்தர் தம் ஆவியைத்
தட்டிப் பறித்த வெறி—யுத்தப்
பேயர்தம் ஆதிக்க வேட்கையிலே உருப்
பெற்றதோர் யுத்த வெறி ! 7.

ரத்தவெறி கொடும் யுத்தவெறி சாம்
ராச்சிய வேட்டை வெறி—அன்று
நித்த நித்தம் கொரியா சிந்து ரத்தத்தில்
நீச்ச லடித்த வெறி—எழிற்
சித்திர பூமியைக் கொத்திக் குலைத்திடத்
திட்டங்கள் தீட்டும் வெறி—அதை
இத்தினமே குழி வெட்டிப் புதைக்கு மோர்
இயக்கமே சாந்தி நெறி. 8.

ஆசிய மண்ணகம் தன்னிலோர் அன்னியன்
ஆதிக்கம் செய்யவி டோம்—கொடும்
நாசியர் கும்பலின் சூழ்ச்சிகளால் நமை
நாசப் படுத்தவி டோம்—நந்தம்
தேசீய மக்களைப் பீரங்கித் தீனியாய்த்
தின்று கழிக்க விடோம்—விரி
காசினி எங்கணும் சாந்தி நிலவிடக்
கங்கணம் கட்டிடு வோம். 9.

ஆருயிர் தன்னைப்பி ளக்கும்செ யலுக்காய்
அணுவைப் பிளக்க விடோம்—நட்பின்
பேருதவி யெனப் போருதவி தரும்
பேரங்கள் பேசவி டோம்—நந்தம்
நேருவின் ஐம்பெருங் கொள்கை நெறி நின்று
நேசம் வளர்த்திடு வோம்—இந்தப்
பாருல கெங்கணும் சாந்தியின் இன்னிசை
பாடி மகிழ்ந்திடு வோம். 10.

சாந்தி நிலவுக வையமெலாம் மக்கள்
 சந்ததம் வாழ்ந்திடவே—நிறை
சாந்தி நிலவுக மக்கள் மனைவியர்
 சந்ததி வாழ்ந்திடவே—எங்கும்
சாந்தி நிலவுக நற்கலை பண்பு சேர்
 சாத்திரம் வாழ்ந்திட வே—உயர்
சாந்தி நிரந்தரம் எங்கும் நிலவிடச்
 சாந்தி நெறி படைப் போம்! 11

1952

# குறிப்புக்கள்

இந்தத் தொகுதியிலுள்ள பாடல்களில் முதல் மூன்று பாடல்களும் பூலோகபிர்மாக்களாக விளங்கும் உழைக்கும் மக்கள் நலம் பற்றிப் பொதுப்படையாகப் பாடியவை. 4 முதல் 12 வரையுள்ள ஒன்பது பாடல்களும் கவியரங்கங்களில் அரங்கேற்றியவை. 13 முதல் 34 வரையுள்ள இருபத்தொன்று பாடல்களும் பல்வேறு சரித்திர நிகழ்ச்சிகளின் மேலும், குறிப்பிட்ட சந்தர்ப்பங்களிலும் பாடப்பெற்றவை. ஒவ்வொரு பாட்டின் இறுதியிலும் அந்தந்தப் பாடல் இயற்றப்பட்ட ஆண்டு காணப்படும். கீழே காணும் குறிப்புக்கள் பல்வேறு பாடல்கள் இயற்றப்பெற்ற சந்தர்ப்பத்தையும் பிற விவரங்களையும் குறிப்பிடுகின்றன. பாடல்களை நன்கு உணர்ந்து அனுபவிக்க இந்தக் குறிப்புக்கள் வாசகர்களுக்குப் பெரிதும் பயன்படும்.

## யாமறிந்த கம்பன்

காரைக்குடி கம்பன் கழகத்தார் ஆண்டுதோறும் நடத்தி வரும் கம்பன் திருநாள் நிகழ்ச்சிகளில், 10-4-1949 அன்று நடைபெற்ற கவியரங்கில் பாடப்பெற்றது. 'யாமறிந்த கம்பன் என்ற பொதுத்தலைப்பில் பல கவிஞர்கள் தத்தம் கவிதைகளை அரங்கேற்றினார்கள். அவ்வாறு அரங்கேறிய பாடல் இது.

அத்தத் திருநாள்—பங்குனி மாதத்தில் அஸ்த நட்சத்திரம் கூடி வரும் நாள். அன்றுதான் கம்பன் தன் ராமகாதையை அரங்கேற்றினன் என்பது வரலாறு.

சா. கணேசன்—காரைக்குடி கம்பன் கழகத்துச்செயலாளர்.

"வானின்றிழிந்து...சொன்னேனு ?"—குறிப்பு : அயோத்தியா காண்டக் காப்புச்செய்யுள்.

"வேதமும்...என்றேனு?"—குறிப்பு: ஆரண்ய காண்டக் காப்புச் செய்யுள்.

"அன்றென்னில்...போட்டேனு?"—குறிப்பு: யுத்த காண்டக் காப்புச் செய்யுள்.

"வீடணன்போல்...வேதப்பொருள் இதுதான்"—யுத்த காண்டம் கும்பகருணன் வதைப்படலம், பாடல் 356 பற்றிய குறிப்பு.

"கல்விக் கடல் வங்கம்"—கல்வியென்னும் கடலைக்கடக்கும் மரக்கலம்.

## கம்பன் என் காதலன்

1—4—1950 அன்று காரைக்குடி கம்பன் திருநாள் கவியரங்கில் பாரதியின் கண்ணன் பாட்டு வழியில், பல கவிஞர்கள் கம்பனைத் தோழன், தந்தை, காவலன், ஆசான், தெய்வம், பகைவன், காதலன் என்ற பாவத்தில் கற்பனை செய்து பாடினார்கள். அப்போது கம்பனைக் காதலனுகக் கற்பித்துப் பாடிய பாடல் இது.

"கன்னிக் கவிராயன்"—இளங் கவிஞன்; ஆங்கிலத்தில் Maiden poet என்று சொல்வதற்குச் சமானம். கம்பனும், ராமனது முதல்போர் அனுபவத்தை 'கன்னிப்போர்' என்று குறிப்பிடுவதும் கவனிக்கத் தக்கது.

"அறிதோறும்...கண்டறிந்தேன்"—குறிப்பு: குறள் 1110
"வேட்ட பொழுதெல்லாம்...போல்"—குறிப்பு: குறள் 1105

## இளமைத் தமிழ்

22—3—1951 அன்று காரைக்குடி கம்பன் திருநாள் கவியரங்கில் தமிழின் அருமை, பெருமை, எளிமை, தொன்மை, வளமை, இளமை, இனிமை முதலிய பண்புகள்பற்றி ஒவ்வொரு கவிஞரும் தத்தம் பாடல்களை அரங்கேற்றினார்கள். அப்போது தமிழின் இளமை குறித்துப்பாடி அரங்கேற்றிய பாடல் இது.

"அந்தப் பழம் நாளில்...தமிழ் ஐயா!"—கவியரங்கத்துக்குத் தலைமை வகித்த வித்வான் திரு. கு. அருணாசலக் கவுண்டர், கவிராயருக்கு முன்னாள் கல்லூரி ஆசிரியராக இருந்தவர்: எனவே ஆசானுக்கு இங்கு வணக்கம் கூறப்படுகிறது.

"வங்கம் கவிழ்ந்ததென"—(உருக்கிய) வெள்ளி வீழ்ந்தாற்போல.

"கங்கைப் புதுப்புனல்"—ஆகாச கங்கை போன்று வானின்று வழிந்து வருவது போன்ற அருவி.

"பூமாலை...பாவை"—சூடிக்கொடுத்த நாச்சியார் எனப் புகழ் பெற்ற ஆண்டாள்.

வசந்த வல்லி—திரிகூட ராசப்பக் கவிராயர் இயற்றிய குற்றாலக் குறவஞ்சியின் கதா நாயகி.

குறச்சிங்கி—குற்றாலக் குறவஞ்சியில் குறிசொல்லும் குறத்தி.

மருதூர்ப் பள்ளி—முக்கூடற் பள்ளுவில் வரும் கதா பாத்திரம்.

"போயொழிந்த...இலக்கியமும்"—கடல் கொண்ட கபாட புரத்தோடு அழிந்துபோய்விட்டதாகச் சொல்லப்படும் இலக்கியங்கள்.

## காற்று

7—4—1952 அன்று நடந்த காரைக்குடி கம்பன் திருநாள் கவியரங்கில் 'இயற்கைப் பத்து' என்ற பொதுத் தலைப்பின் கீழ் ஞாயிறு, திங்கள், காற்று, மழை, பனி, மலை, ஆறு, கடல், காடு, வயல் என்ற பத்துப் பிரிவுகளைக் குறித்து, பத்துக் கவிஞர்கள் தமது கவிதைகளை அரங்கேற்றினர்கள். அப்போது 'காற்று' என்ற தலைப்பில் அரங்கேற்றிய பாடல் இது.

"மண்ணுலகத் தோசையெலாம்...பாரதியார்"—'நிலாவும் வான் மீனும் காற்றும்' என்ற தலைப்பில் பாரதி பாடியுள்ள பாட்டு.

"எந்தன் திருநெல்லை...குறவஞ்சி"—திருநெல்வேலிச் சீமையில் தோன்றிய திரிகூட ராசப்பக் கவிராயர் இயற்றிய குற்றாலக் குறவஞ்சி

“சீதக் குளிர்...பாட்டினிலே”—குறிப்பு: ‘மங்கையர் கண் புனல் பொழிய, மழை பொழியும் காலம்’ எனத் தொடங்கும் நந்திக் கலம்பகப் பாடல்.

இளநந்தி—நந்திக் கலம்பகத்தின் ஆசிரியர் யாரெனத் தெரியா விட்டாலும், நந்திவர்மனின் தம்பியே அதனைப் பாடினுன் என்று கருதப்படுகிறது. எனவே கலம்பக ஆசிரியருக்கு இப்பெயர் வழங்கப்பட்டுள்ளது.

“என் முன்னே...மின் கருவி”—அரங்க மேடையிலுள்ள அகில இந்திய வானொலி நிலையத்தாரின் ஒலிப்பதிவுக்கான ‘மைக்’ பற்றிய குறிப்பு.

## நம்நாடு

14—1—1948 பொங்கல் தினத்தன்று திருச்சி வானொலி நிலையத்தார் கூட்டிய கவியரங்கில் ‘நம்நாடு’ என்ற தலைப்பின் கீழ், பல கவிஞர்கள் கவிதைகளை அரங்கேற்றினுர்கள். அப்போது அரங்கேற்றப் பெற்ற பாடல் இது. இந்தப் பாடல் சில பிற் சேர்க்கைகளோடும் ஒட்டுவெட்டுகளோடும் இதில் வெளியிடப் பெறுகிறது.

‘தானுபதி’—தலைவன்; மந்திரி; ஸ்தானுதிபதி.

‘வியன் கங்கை’—பகீரத முயற்சியால் ஆகாயத்திலிருந்து வர வழைக்கப்பட்டதாகச் சொல்லப்படும் கங்கை நதி.

‘மல்லைக் கடற்கரை’-மாமல்லபுரக் கடற்கரை(க் கற்கோயில்கள்)

“அஞ்சு கஜத் துணிக்கும்...கெஞ்சுவதை”—1948ல் மில் துணிக்கு இருந்த ரேஷனைக் குறிப்பிடுவது. அப்போது ஒவ்வொருவருக்கும் ஐந்து கஜத் துணிதான் கிடைத்து வந்தது. அதற்கும் கிராக்கி; அடிபிடி.

“வெங் கருத்திகுழு”—அறிவு சூன்யமான வெறும் கூட்டம்.

“அந்தப் பரிசு”—கவியரங்கில் கலந்துகொண்ட கவிஞர்களுக்கு வானொலி நிலையத்தார் தரும் சன்மானத் தொகை.

‘வண்டுகட்டி’—திருநெல்வேலி வழக்குச் சொல். ஊறுகாய் கெட்டுப்போகாமல், பானையைத் துணியிட்டு மூடி மறைத்தல்.

## சுதந்திரம்

15—8—1949 சுதந்திர தினத்தன்று சென்னை வானொலி நிலையத்தார் கூட்டிய கவியரங்கில் 'சுதந்திரம்' என்ற பொதுத் தலைப்பின் கீழ், பல கவிஞர்கள் தமது கவிதைகளை அரங்கேற்றினார்கள். அப்போது அரங்கேறிய பாடல் இது.

"சிற்றரசர்தம் கூட்டம்"—சுதந்திர இந்தியாவுடன் இணைய மறுத்து, சண்டித்தனம் செய்து வந்த சமஸ்தானாதிபதிகள்.

## துஞ்சலும் இலர்

13—4—1953 தமிழ் வருடப் பிறப்பன்று திருச்சி வானொலி நிலையத்தார் கூட்டிய கவியரங்கில், கடலுள் மாய்ந்த இளம் பெரு வழுதி பாடிய 'உண்டால் அம்ம இவ்வுலகம்' என்று தொடங்கும் புறநானூற்றுப் பாடலின் (புறம்: 182) பல்வேறு கருத்துக்களைத் தத்தம் கவிதைகள் மூலம் வியாக்கியானம் செய்தார்கள் பல கவிஞர்கள். அந்தப் பாடலின் ஓரடியான 'துஞ்சலும் இலர், பிறர் அஞ்சுவதஞ்சி' என்ற கருத்தை விளக்கிப்பாடிய பாடல் இது.

"அஞ்சுவதற் கஞ்சுவது ... அறிவோம் யாம்"—குறிப்பு: குறள் 428.

கருப்பட்டி—திருநெல்வேலி வழக்குச் சொல். கருப்புக்கட்டி; பனை வெல்லம்.

## வாழ்க்கை வளமுற : அறிவு

1956 பிப்ரவரி-மார்ச் மாதங்களில் அகில இந்திய வானொலி நிலையத்தார் ரேடியோ வாரம் கொண்டாடினார்கள். 'ரேடியோ வார'க் கொண்டாட்டத்தின்போது 2—3—1956 அன்று கூட்டப்பெற்ற கவியரங்கில் 'வாழ்க்கை வளமுற' என்ற பொதுத் தலைப்பின் கீழ், பல கவிஞர்கள் பல்வேறு பண்புகளைப் பற்றிய தத்தம் கவிதைகளை அரங்கேற்றினார்கள். அப்போது 'அறிவு' என்ற பண்பு குறித்துப் பாடி அரங்கேற்றிய பாடல் இது.

"தக்கது ஈதென்றும்...கம்பத் திருநாடன்"—குறிப்பு: கிஷ்

கிந்தா காண்டம்; வாலி வதைப்படலம் பாடல் 112.
"சென்ற இடத்தாறே...வள்ளுவனுர்"—குறிப்பு: குறள் 422.

## பாரதி திருநாள்

12—9—1949 அன்று கோவை திரு. ஜி. டி. நாயுடுவின் முயற்சியால் கோவையில் நடைபெற்ற பாரதி விழா நிகழ்ச்சி களில் கவியரங்கமும் ஒன்று. அந்தக் கவியரங்கில் பல கவிஞர் களும் தமது கவிதைகளை அரங்கேற்றினுர்கள். இந்தப் பாடல் அங்கு விசித்திரமாக அரங்கேற்றப்பட்டது. இக் கவியரங்கில் கவிராயரும், திரு. கு. அழகிரிசாமியும் 'இரட்டையர்' ஆகத் தோன்றி, பழைய இரட்டைப் புலவரின் வழியைப் பின் பற்றித் தமது கவியை அரங்கேற்றினுர்கள். அதாவது பரஸ்பரம் இரு வரும் ஒருவர் அடியெடுத்துக் கொடுக்க, மற்றவர் முடித்துக் கொண்டு வந்தார். முதல் பாட்டின் முதல் இரண்டு அடியும் கவிராயர் பாடியவை. இவ்வாறு அடியெடுத்துக் கொடுத்த பாடலை முடித்ததோடு மறு பாடலுக்கு அடியெடுத்துக் கொடுத்த வர் கு. அழகிரிசாமி. அதாவது முதல் பாட்டின் பின் இரண்டு அடிகளும், இரண்டாம் பாட்டின் முதல் இரண்டு அடிகளும் அழ கிரிசாமி பாடியவை. அடுத்துவரும் நான்கு அடிகளும் கவிராயர் பாடியவை. இவ்வாறு இருவரும் மாறி மாறிப் பாடிக் கவிதை யைப் பூர்த்தி செய்தனர்.

நாவலிக்கும்—நாவலோசை இடும்; கோஷ மிடும்.

இடைசெவல்—கோயில் பட்டிக்கு அருகேயுள்ள கிராமம்; கு. அழகிரி சாமியின் சொந்த ஊர்.

புட்டா ஜரிகை—பூவேலைப் பாடுகள் நிறைந்த ஜரிகைப் பட்டு.

வே—திருநெல்வேலி வழக்கு.

## வாரும்பிள்ளாய், எழுத்தாளரே!

1946-ம் ஆண்டு சென்னையில் நடைபெற்ற இரண்டாவது தமிழ் எழுத்தாளர் மகாநாட்டுச் சமயத்தில் பாடியது. இதற்கு முன் 1943-ம் ஆண்டில் கோயமுத்தூரில் முதல் மகாநாடு கூட் டப்பெற்றது. அந்த மகாநாட்டில் ஏராளமான எழுத்தாளர்கள்

கலந்துகொண்டார்கள். எனினும் மகாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் எவையும் எழுத்தாளரின் ஜீவாதார உரிமைகளையும் நலன்களையும் பிரதி பலிக்கவில்லை. கலைச் சொல்லாக்க முயற்சிவேண்டும், கலைக்களஞ்சியம் தேவை, பாரதிக்குச் சிலை எடுக்கவேண்டும் என்பன போன்ற விஷயங்கள் தாம் தீர்மானங்களாக நிறைவேற்றப்பட்டதே ஒழிய, எழுத்தாளனையும், அவனுடைய எழுத்தையும் பாதுகாப்பதற்கான முடிவுகள், முயற்சிகள் எதுவும் செய்யப்படவில்லை. இதன் பின் இரண்டாவது மகாநாட்டைக் கூட்டும் சமயத்திலும், எழுத்தாளரின் ஜீவாதாரப் பிரச்சினைகள் எதுவும் விவாதத்துக்கோ, தீர்மானத்துக்கோ வரும் என்ற சூசகமே இல்லை. எனவே ஜீவாதார உரிமைகளைப் பெறுவதற்கு முயற்சி செய்வதே எழுத்தாளர் மகாநாட்டின் முதற் கடமை என்பதை அறிவுறுத்துவதற்காக எழுதப்பட்ட பாடலே இது. (சமீபத்தில்—1956—சென்னையில் கூடிய தமிழ் எழுத்தாளர் மகாநாடுதான் இந்த விஷயத்தைப்பற்றி அக்கறை காட்டியுள்ளது. இது பாராட்டத் தக்கது, வரவேற்கத்தக்கது).

'திருச்சிற்றம்பலக் கவிராயர்' என்ற புனை பெயரில் முதன் முதலாக அச்சில் வெளிவந்து தமிழருக்கு அறிமுகமான பாடல் இது தான்.

"வரகரிசி ... மோருக்குமாய்"—குறிப்பு : "வரகரிசி" என்று தொடங்கும் அவ்வையாரின் தனிப்பாடல்.

"நெற்கொண்டு...சொந்தம் தான்"—குறிப்பு : கம்பன் பெயரால் வழங்கப்படும் 'மற்கொண்ட திண்புயத்தான்...' என்று தொடங்கும் தனிப்பாடல்.

ரீஜெண்ட் : ஆங்கிலச்சொல் (Regent) ; ராஜப்பிரதிநிதி.

சல்லி : பணம் ; (திருநெல்வேலி வழக்கு) ஒரு பைசா.

## தற்சிறப்பு

மேலே குறிப்பிட்ட 'வாரும் பிள்ளாய் எழுத்தாளரே !' பாடல் வெளிவந்ததும் அதனைப் படித்துவிட்டு, அமோகமாகப் பாராட்டியவர்களும் உண்டு ; ஆத்திரப்பட்டுச் சீறிச் சினந்த

வர்களும் உண்டு. இவ்வாறு சீறிச் சினந்த எழுத்தாளப் பிர முகர்கள் சிலர் 'திருச்சிற்றம்பலக் கவிராயர்' என்ற புனைபெயரில் மறைந்து கொண்டிருக்கும் 'ஆசாமி'யை இனம் கண்டுகொள்ள இயலாமல், 'யார் இந்தக் கவிராயர்?' என்று சினந்து குமுறி ஞர்கள். அவ்வாறு சினந்து குமுறிய எழுத்தாளர்களுக்குக் கவிராயர் தம்மைத் தாமே அறிமுகப்படுத்திக் கொள்ளும் முறையில் இந்தப் பாட்டு வெளிவந்தது.

"ஆராரோ...நானல்ல"—குறிப்பு: கம்பத்தின் கீழ் கண்டெ டுக்கப்பட்டதாகச் சொல்லப்படும் கம்பன்.

"ஈசன்...நானல்ல"—குறிப்பு : சேக்கிழார்.

"தம்பலத்தின்...நானல்ல"—குறிப்பு : காளமேகப் புலவர்.

"கமிசனுக்கு...நானல்ல"—குறிப்பு : அருணகிரிநாதர்.

திண்டு மிண்டு—ஏறுக்குமாறு.

## அழைப்பிதழ்

நமது நாட்டுக்குச் சுதந்திரம் கிடைத்த காலத்தில் நாட்டுப் பிரிவினையைப் பயன்படுத்திக்கொண்டு வகுப்பு வாதி களும் வெள்ளைக்கார அன்னியர்களும் வகுப்புக் கலவரங்களைத் தூண்டிவிட்டு,எண்ணற்ற உயிர்களைப் பலிகொண்டு, நாட்டையே ரத்தக் களரியாக்கி வந்த வேளையில் எழுதப்பட்ட பாடல் இது கிடைத்த சுதந்திரத்தையும் நாட்டின் மதிப்பையும், நாட்டு மக்களின் வாழ்வையும் காப்பாற்றும் பணியில் எழுத்தாளர் களின் கவனம் திரும்பவேண்டும் என்ற எண்ணத்தோடு எழுதப்பட்டது.

'கண்ட்ரோல் ... விடுபடவும்" — யுத்த காலம் தொட்டு நம் நாட்டில் நீடித்து வந்த காகிதக் கட்டுப்பாடு நீக்கப் பட்டபோது, புற்றீசல்போல் பல தமிழ்ப் பத்திரிகைகளை யாராரோ தொடங்கினர்கள். அது பற்றிய குறிப்பு இது.

ரோசனை : யோசனை.

டங்கரிக்கும்: டங்காரம் செய்யும்.

பஞ்சநதிதீரம் : பஞ்சாப் பிரதேசம்.

## உன்னைத்தான் கேட்கின்றேன் !

இந்தப் பாடல் 1955-ம் ஆண்டு ஜூன் மாதம் புதுமைப் பித்தன் தினத்தை ஒட்டி எழுதப்பட்டது.

சிறந்த சிறு கதை எழுத்தாளரான புதுமைப்பித்தன் 'வானத்து அமரன் வந்தான் காண் ! வந்ததுபோல் போனான், காண் என்று புலம்பாதீர் !' என்று பாடிவிட்டு மறைந்தார் மறைந்துபோன எழுத்தாளனின் இலக்கியத்தைப் பயின்று பரப்புவதும், அதன் மூலம் இலக்கிய பரம்பரையை மேம்படுத்துவதும் தான் உண்மையில் அந்த எழுத்தாளனுக்குச் செய்ய வேண்டிய கைம்மாறு. ஆனால், மறைந்துபோன எழுத்தாளனைக் கௌரவிப்பதாகச் சொல்லிக்கொண்டு, ஆண்டுக்கொரு முறை அவனைப்பற்றி 'ஒப்பாரி' வைப்பதும், மறு தினமே அவனை மறந்து விடுவதும் தம்மைப் பொறுத்த வரையில் 'பிழைக்கும் வழி'யைப்பார்த்துக் கொள்வதும் ஆகவுள்ள தமிழ் நாட்டு எழுத்தாளர்களின் 'சம்பிரதாய'த்தைக் கண்டித்து எழுந்த பாடல் இது.

## வா வா வா !

தொழிலாளர்களின் உரிமைப் போர் தினமான மே தினத்தை ஒட்டி, 1953-ம் ஆண்டில் எழுதியது, பாரதியின் 'ஒளி படைத்த கண்ணினாய் வா வா வா' என்ற பாடலின் சந்த அமைப்பைப் பின்பற்றியது.

## இந்தியக் குடியரசு

26—1—1950 அன்று நம் நாட்டைச் சுதந்திரக் குடியரசாகப் பிரகடனப்படுத்தியபோது பாடிய வாழ்த்துப்பா.

லாந்தி வரும் : உலாவிவரும் (திருநெல்வேலி வழக்கு)

## ஜனவரி 30

இந்தத் தேதி இந்திய சரித்திரத்திலேயே ஒரு கரிநாள். இந்தத் தேதியில்தான் தேசபிதாவான காந்திஜியை ஒரு

வகுப்புவாதி சுட்டுக் கொன்றுவிட்டான். காந்திஜி சுடப்பட்டு மாய்ந்த 30—1—1948 அன்று பாடிய பாடல் இது.

## சங்கமம்

"வங்கத்தில் ஓடிவரும் நீரின் மிகையால்
மையத்து நாடுகளில் பயிர் செய்குவோம்"

என்று பாடிச் சென்றான் பாரதி. பாரதி கண்ட கனவைப் போலவே ருஷ்ய மக்கள் தங்கள் நாட்டிலுள்ள வால்கா, டான் என்ற இருநதிகளை இணைக்கவேண்டும் என்று கனவு கண்டார்கள். இந்தக் கனவை நனவாக்கத் திட்டம் தீட்டியது ருஷ்ய அரசாங்கம். திட்டமிட்டு 1952-ம் ஆண்டு மே மாத இறுதியில் இரு நதிகளையும் இணைத்து முடித்து விட்டார்கள். இந்த இணைப்பின் மூலம் ஐந்து கடல்களே இணைக்கப்பட்டு விட்டன. வெண்கடல், பால்டிக் கடல், அஸோவ் கடல், காஸ்பியன் கடல், கருங்கடல் முதலிய ஐந்து ஜல சமுத்திரங்களும் இணைந்து போக்குவரத்து முதலியன பெருகியுள்ளன. மேலும், இந்த வால்கா–டான் நதிகளின் சங்கமம் ருஷ்ய நாட்டில் புதிய புதிய நகரங்களையும், வயல் வெளிகளையும் கனித். தோட்டங்களையும் ஏற்படுத்தியுள்ளது. நான்கு ஆண்டுக் காலத்துக்குள் திட்ட மிட்டு நிறைவேற்றிய இந்த அற்புத சாதனையைப் பற்றிய செய்திகளைப் படித்தபோதுஏற்பட்ட உணர்வில் பிறந்த கவிதைதான் 'சங்கமம்'. நாட்டு மக்களின் ஐக்கிய பலமும் மக்களாட்சியும் நிலைபெற்ற ஒருநாட்டில் மக்கள் எத்தனை மகத்தான காரியங்களைச் சாதிக்க முடியும் என்பதற்கு வால்கா—டான் இணைப்பு கண்கண்ட சாட்சியம் ஆகும். இந்தப் பாடல் 1952-ம் ஆண்டில் எழுதியது.

## கூச் பீஹாரில் கொலையுண்ட குமரிக்கு

1951-ம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் கூச் பீஹாரில் உணவு வேண்டுமென்று கோரி அரசாங்கக் காரியாலயத்துக்கு அணி வகுத்துச் சென்ற நாட்டு மக்கள் மீது வங்க அரசாங்கப் போலீஸார் அநியாயமாகத் துப்பாக்கிப் பிரயோகம் செய்தார்கள்

அந்தத் துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒரு இளம் கன்னிப்பெண் குண்டுபட்டு உயிர் துறந்தாள். நீசத்தனமான இந்தத் துப்பாக்கிப் பிரயோகத்தைக் கண்டித்து எழுந்த கவிதை இது. 1951-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் இயற்றியது.

பாடல் 2 : யுத்த காலத்தில் நிகழ்ந்த வங்கப் பஞ்சம் பற்றிய குறிப்பு

பாடல் 4 : அப்போது உணவு மந்திரியாக இருந்த முன்ஷியார் தொடங்கிவைத்த 'வனமகோத்ஸவம்' பற்றிய குறிப்பு.

## பிள்ளை இதோ பிள்ளை !

1952-ம் ஆண்டு தமிழகத்தின் பல பகுதிகளில் பஞ்ச நிலைமை தாண்டவமாடியது. பஞ்சத்தின் கோரத்தால் பற்பல பட்டினிச் சாவுகளும், தாய்மார்கள் குழந்தைகளையும் கற்பையும் மானத்தையும் விலைபேசும் கோரமும் நிகழ்ந்து வந்ததும் நாம் அறிவோம். பெற்றெடுத்த குழந்தைகளைத் தாய்மார்கள் காய் கறிபோல் விலைகூறி விற்ற நாட்டின் இழி நிலைமையைக் கண்டெழுந்த உணர்வில் உருவான பாடல் இது. பெற்றெடுத்த தாயே குழந்தையை விலை கூறுவதாக அமைந்துள்ளது பாட்டு. 1952-ம் ஆண்டில் எழுதியது.

ஓராட்டு : தாலாட்டு (திருநெல்வேலி வழக்கு)

## அன்னை தமிழ்த் தாயகமே வெல்க, வெல்க !

இந்திய நாடு சுதந்திரமடைந்த பின்னும் இந்திய நாட்டின் கரையோரங்களிலே அன்னியத் திட்டுப் பிரதேசங்கள் இருந்து வந்ததையும்—இன்னும் கோவா போன்ற போர்த்துகீசியப் பிரதேசங்கள் இருந்து வருவதையும் நாம் அறிவோம். நமது தமிழ்த் தாயகத்தை ஒட்டியிருந்த பிரஞ்சு இந்தியப் பகுதிகள் தாய்த் தமிழகத்தோடு இணையவேண்டும் என்ற கிளர்ச்சி 1954-ம் ஆண்டு முற்பகுதியில் தீவிர மடைந்ததும், புதுச்சேரி, காரைக்கால் போன்ற பகுதிகளில் இந்த இணைப்புக்கான அறப் போர் உச்ச நிலையை அடைந்ததும், இந்தப் போரில் மக்கள் வெற்றி பெற்றதும் நாம் அறிவோம். தாய்த் தமிழகத்திலிருந்து

அன்னிய அரசியல் ஆதிக்கத்தை அடியோடு ஒழிக்கவேண்டும் என்ற இந்த அறப்போர் தீவிரமடைந்துவந்த வேளையில் எழுதிய பாடல் இது. 1954-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் எழுதியது.

ஜராசந்தன் : இவன் ஒரு புராண பாத்திரம்; மகாபாரதக் கதையில் வருபவன். இவனை இரண்டு கூருகப் பிளந்து கொன்ருலும், பிளந்த கூறுகள் மீண்டும் ஒன்றுபட்டு அவன் உயிர்பெற்று எழுந்து விடுவான் எனக் கதை.

## வாழிநீ கொரிய நாடே !

கொரிய நாட்டில் கொரிய மக்களுக்கும் அமெரிக்க யுத்த வெறியர்களுக்கும் நடந்த யுத்தம் சரித்திரப் பிரசித்தி பெற்றது. சின்னஞ் சிறு நாடான கொரியா, உலகத்தின் மாபெரும் ஏகாதிபத்தியமான அமெரிக்கரின் ஆதிக்கத்தைப் பல வருஷக் கணக்காக எதிர்த்து நின்றது மட்டுமல்லாமல், தனது நாட்டின் எந்தப் பகுதியையும் ஆதிக்க வெறியர்களின் கையில் அகப் படாமல் காப்பாற்றியது மாபெரும் வீரசாதனை என்றுதான் சொல்லவேண்டும். முதல் உலக யுத்தத்தில் சின்னஞ் சிறு பெல்ஜிய நாடு ஏகாதிபத்தியத்துக்கு இரையாகியது. பெல் ஜியத்தின் வீழ்ச்சியை 'அறத்தின் வீழ்ச்சி' என்று பாரதிகூட, தனது 'பெல்ஜியத்திற்கு வாழ்த்து' என்ற பாட்டில் வாழ்த்திச் சென்ருன். ஆனல், கொரிய மக்களோ பெரும் ஏகாதிபத் தியத்தை எதிர்த்து நிற்பதில் வெற்றிகண்டு விட்டார்கள். காரணம் கொரிய நாட்டு மக்களின் ஐக்கிய பலம்தான். எத்தனை அணு குண்டுகள், ஹைட்ரஜன் குண்டுகள் தோன்றிய போதி லும், நாட்டு மக்கள் ஐக்கியப்பட்டு நின்ருல், எந்த நாச சக்தியும் அவர்களை அழித்துவிட முடியாது என்பதுதான் சின்னஞ் சிறு நாடு உலகத்துக்கே கற்றுத் தந்துள்ள ஞானபாடமாகும்.

இந்தப் பாடல் வீரச் சமர்புரிந்த கொரிய மக்களை வாழ்த்தும் வகையில், 1952-ம் ஆண்டு இறுதியில் எழுதப்பட்டது.

செந்தழல் குழம்பின் குண்டு—நப்பாம் குண்டுகள் (Napalm)

கோஜே : அமெரிக்கர்கள் கொரிய நாட்டின் யுத்தக் கைதி களைச் சித்திரவதை செய்த சிறைக் கூடம் இருந்த தீவு.

## சமாதானம்

1951-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21, 22 தேதிகளில் பேராசிரியர் டி. டி. கோசாம்பி தலைமையில் சர்வகட்சி சமாதான மகாநாடு கூடியது. அந்த மகா நாட்டின்போது இயற்றப் பெற்று, மகாநாட்டுக் கலையரங்கில் அரங்கேற்றப்பட்ட பாடல் இது. பாடல் உருவம் கானமும் கோஷமும் இணைந்து ஒலிக்கும் வண்ணம் அமைக்கப்பட்டதாகும்.

## கலாசார சுதந்திர' மகாநாட்டில் கலந்து கொண்ட எழுத்தாளனுக்கு

நாட்டை மட்டுமல்லாமல் நமது ஆத்மாவையுமே விலைக்கு வாங்க முயன்றுவந்த அமெரிக்க ஏகாதிபத்திய வாதிகளின் ஆதரவில் நம் நாட்டில் 'ஜனநாயக ஆராய்ச்சி' என்றும், 'கலாசார சுதந்திரம்' என்றும் கூறி நமது சகோதர நாடுகளான சீனு, ருஷ்யா போன்ற நாடுகளின் மீது துஷ்பிரசாரமும், யுத்த வெறிப் பிரசாரமும் செய்துவந்த 'கழக'ங்களைப் பற்றி நாம் அறிவோம். இந்த "ஜனநாயக ஆராய்ச்சி" வலையில் அற்ப ஆசைகளின் காரணமாகத் தமிழ்நாட்டு எழுத்தாளர்கள் சிலரும் சிக்கியிருந்ததையும் நாம் அறிவோம். இத்தகைய கலாசார சுதந்திர மகாநாடு ஒன்று 1953ம் ஆண்டு செப்டம்பர் மாதம் சென்னையில் கூட்டப்பட்டது. அமெரிக்கப் பிரசாரத்துக்கே பயன்படுத்தப் பட்ட இந்த மகாநாட்டில் தமது ஆத்மாவையே விலைக்கு விற்று விட்டுக் கலந்துகொண்ட சில தமிழ் எழுத்தாளர்களுக்காக இயற்றப்பட்ட பாடல் இது. 1953-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் எழுதியது.

## மீட்டத் திரண்டெழுவோம்

பாரதியின் பாடல்களை சென்னை அரசாங்கம் விலைக்கு வாங்கி நாட்டின் சொத்து ஆக்கிய பின்னும், பாரதியின் பாடல் களைப் பயன்படுத்துவதற்கு அரசாங்கத்துக்குக் கட்டணங்கள்

கட்ட வேண்டும் என்று விதி விதித்திருந்ததையும், இதை எதிர்த்துத் தமிழக மெங்கணும் கிளர்ச்சி நடந்து வந்ததையும் இந்தக் கிளர்ச்சியின் பயனாக ஆறு ஆண்டுக் காலமாக அரசாங் கத்தின் உடைமையாக இருந்த பாடல்களை, 1955-ம் ஆண்டு மார்ச் மாதம் மக்களுக்கு உடைமை யாக்கியதையும் நாம் அறிவோம். இந்தப் பாடல் பாரதி பாடல்கள் விடுதலைக் கிளர்ச்சியின் ஒரு பகுதியாக, 1953-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் பாரதி தினத்தை ஒட்டி இயற்றப்பட்டதாகும்.

## இன்பப் பொங்கல்

இந்தப் பாடல் பொங்கல் தினத்தை ஒட்டி, 1956-ம் ஆண்டு ஜனவரியில் இயற்றப்பட்டது.

## "கந்தையா !...."

இந்தப் பாடல் கவிராயரின் நண்பரான திரு. எஸ். கந்த சாமியின் திருமணத்தின்போது எழுதி அனுப்பிய வாழ்த்துப்பா திரு. கந்தசாமி, கவிராயரின் கல்லூரித் தோழர்; கவிஞரும் கூட. 'துறைவன்' என்ற புனை பெயரில் மறைந்து கொண்டு, அருமை யான கவிதைகள் பலவற்றை எழுதி வருபவர். இவர் திருச்சி அகில இந்திய ரேடியோவில் பணியாற்றுகிறார். இவரது திரு மணம் நாகர் கோயிலில் நிறைவேறியது. திருமணத்துக்கு நேரில் செல்ல வசதிப்படாமையால், இந்தக் கவிதைமூலம் தமது வாழ்த்தைத் தெரிவித்தார் கவிராயர். இந்தப் பாடல் 4—5—1947 அன்று எழுதப்பட்டது.

முகம்—திருமுகம் : அழைப்புக் கடிதம்.

தென் திசைக்கே—தமிழ் நாட்டின் தென் கோடியிலுள்ள நாகர் கோயிலுக்கே.

பாலத்து—திருநெல்வேலி ஜங்ஷனுக்கு மற்றொரு பெயர் திரு நெல்வேலிப் பாலம் ; ரயில்வே நிலையம் ஏற்பட்ட பின்னர் இந்தப் பெயர் மாறி மங்கி விட்டது.

சின்னத்தட்டாரத் தெரு வீட்டு மாடி—ஜங்ஷனிலுள்ள இந்தத் தெருவில்தான் கந்தசாமி தமது திருநெல்வேலி வாசத்தின்போது குடியிருந்தார்.

ஆற்று மணற்பரப்பில் — தாம்பிரவருணி ஆற்று மணற் படுகையில்.

அ. சீ. ரா.—கந்தசாமியும் கவிராயரும் படித்துவந்த இந்துக் கல்லூரியில் ஆங்கிலப் பேராசிரியராகப் பணியாற்றிய திரு. அ. சீனிவாச ராகவன். அ. சீ. ரா. வைத் தமிழுலகம் நன்கு அறியும்; பிரபல எழுத்தாளர்.

கண்ணம்மன் கோயில் கடைவீதி முச்சந்தி—இது திருநெல்வேலி ஜங்ஷனில் பரபரப்புள்ள ஒரு இடம்.

ராணி மங்கம்மா ரோடு — திருநெல்வேலி ஜங்ஷனிலுள்ள மதுரை ரோடு.

சென்னை - திருச்சியிலே—கவிராயர் சென்னையில் பத்திரிகைத் தொழிலிலும், கந்தசாமி திருச்சியில் வானொலி நிலையத்திலும் பணியாற்றியதைக் குறிப்பிடுகிறது.

## "வேளூர்க் கவிராயா !"

இந்தப் பாடல் 1946-ம் ஆண்டு பொங்கல் தினத்தை ஒட்டி, 'வேளூர்க் கவிராயர்' என்ற புனை பெயரில் கவிதைகள் எழுதி வந்த "புதுமைப்பித்த"னுக்குக் கவிராயர் எழுதியனுப்பியது. இந்தப் பாடல் பிறந்த கதை ரசமானது. கவிராயர் பொங்கல் தினத்தன்று 'பொங்கல் செய்தி' என்று மகுடமிட்டு, 'குட்டு தற்கோ பிள்ளைப் பாண்டியனுர் இங்கில்லை' என்ற பழம் பாடலை அச்சிட்டு, பல எழுத்தாளர்களுக்கும் அனுப்பிவைத்திருந்தார் புதுமைப்பித்தனுக்கும் அவ்வாறு அனுப்பப்பட்டது. அந்தப் பாடலைப் படித்துப் பார்த்துவிட்டுப் புதுமைப்பித்தன் கவிராயருக்கு இரண்டு பாடல்கள் எழுதி அனுப்பியிருந்தார். அந்த இரு பாடல்களைப் பார்த்துவிட்டு, புதுமைப்பித்தனுக்கு எழுதிய பாடல்கள் தான் இவை.

விருத்தாசலம்—புதுமைப்பித்தனின் இயற் பெயர்.

தோணியப்பர்—16-ம் நூற்ருண்டு தமிழ்ப் புலவர்.

## பேருக்கா கலைக் கழகம் ?

1947-ம் ஆண்டு திருநெல்வேலியிலுள்ள சில எழுத்தாளர்களும், கம்யூனிஸ்ட் கட்சி அங்கத்தினர்களும் அனுதாபிகளும் ஒன்றுகூடி, திருநெல்வேலியில் ஒரு முற்போக்குக் கலைஞர் கழகத்தைத் தோற்றுவிக்க முயன்ருர்கள். அந்த முயற்சியின் பூர்வாங்கக் கூட்டத்துக்குத் தற்செயலாகப் போய்ச் சேர்ந்த கவிராயர் அந்த முயற்சியை வரவேற்று, அதனைக் காரிய சித்தியாக்கும் பணியில் ஈடுபட்டார் எனினும் பூர்வாங்க முயற்சியில் முன்னின்று பணியாற்றிய கம்யூனிஸ்ட் கட்சி நண்பர்கள், கலைஞர் கழத்தை உருப்படியாக்கி உருப்பெறச் செய்வதில் போதிய அக்கறை கொள்ளவில்லை. அந்த நண்பர்களின் அசட்டைத்தனத்தைச் சுட்டிக்காட்டி, அவர்களைச் செயலாற்றத் தூண்டுவதற்காக எழுதப்பட்ட பாடல் இது. 1947-ம் ஆண்டில் எழுதியது.

ரத்தினமும்—கவிராயரின் நண்பர்களில் ஒருவரான ராஜரத்தினம் என்பவர்.

கல்லத்தி முடுக்கு—திருநெல்வேலியிலுள்ள ஒரு சந்தின் பெயர்.

வீராபுரம்—வீரராகவபுரம் என்ற பெயரின் பேச்சுப் பிரயோகம் வீரராகவபுரம் : திருநெல்வேலி ஜங்ஷனுக்குரிய மற்ருெரு பெயர்.

மார்க்ஸ்—கம்யூனிஸ தத்துவ பிதாவான கார்ல் மார்க்ஸ்.

கார்ச் சங்கம்—மோட்டார் தொழிலாளர் சங்கம்.

வாணி விலாஸ் ஹோட்டல்—ஜங்ஷனிலுள்ள ஒரு ஹோட்டல்.

போணி—(திருநெல்வேலி வழக்குச் சொல்) தினசரி முதன் முதலாக ஒரு கடையில் சாமான் வாங்குவது.

## எத்தனை நாள்?....

இந்தப் பாடல் பிரபல மலையாளக் கவிஞரான மகாகவி வள்ளத்தோள் எழுதிய ஒரு கவிதையின் தமிழாக்கம். வள்ளத்தோள் இந்திய நாட்டின் இன்றைய கவிஞர்களில் குறிப்பிடத் தகுந்தவர். தேச பக்தியும், முற்போக்கு எண்ணமும் கொண்ட சிறந்த கவி. இவர் மலையாள நாட்டின் ஆஸ்தான கவிஞராகவும் இருந்தவர்; இந்திய இலக்கிய உலகில் நன்கு அறிமுகமானவர். இவரது கவிதைகள் பல அன்னிய மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. மேரி மக்தலேனைவைப்பற்றி இவர் எழுதிய கவிதை மிகவும் பிரபலமானது. ரயிலில் சாதாரணமாகக் காணக் கூடிய சிறு சம்பவத்தைக் கொண்டு, அசாதாரணமான மன உணர்ச்சிகளை இந்தப் பாடலின்மூலம் தூண்டி விடுகிறார் அவர். இந்தப் பாடல் 1952-ம் ஆண்டில் தமிழாக்கப் பெற்றது.

## மகாத்மா

இந்தப் பாடல் பிரபல ஜப்பானியக் கவிராயரான யோனே நோகுச்சி என்பவர் மகாத்மா காந்தியைப்பற்றி எழுதிய ஆங்கிலக் கவிதையின் தமிழாக்கம் ஆகும். யோனே நோகுச்சி இந்தியாவுக்கும், தமிழ் நாட்டின் தலை நகரான சென்னைக்கும் கூட வந்து சென்றிருக்கிறார். இந்தியாவைப்பற்றி ஜப்பானிய மொழியில் ஒரு நூலும் எழுதியிருக்கிறார். இவரது கவிதைகள் பல ஐரோப்பிய மொழிகளிலும் மொழிபெயர்க்கப் பெற்றுள்ளன. இந்தியாவுக்கு வந்து காந்திஜியை நேரில் சந்தித்த இந்தக் கவிஞர் நமது தேசபிதாவுக்குச் சூடிய பாமாலையின் தமிழுருவமே இந்தப் பாடல். 1949-ம் ஆண்டு ஜனவரி மாதம் காந்திஜியின் அமரத்துவ தினத்தை ஒட்டி இந்தப் பாடல் தமிழாக்கப்பட்டது.

## சாந்தி நிலவுக

இந்தப் பாடலும் சமாதான இயக்கத்தின் முக்கியத்துவத்தைக் குறிக்கோளாகக் கொண்டு 1952-ம் ஆண்டில் இயற்றப்

பட்டதே. 1954-ம் ஆண்டின் உதய காலத்தில், ஜனவரி மாதத்தில் சென்னையில் அகில இந்திய சமாதான மகாநாடு கூட்டப் பெற்றபோது, இந்தக் கவிதையின் 10-வது பாடல் மட்டும் புதிதாக எழுதிச் சேர்க்கப்பட்டு, மீண்டும் இது வெளியிடப்பட்டது. "கீழ்நாட்டுப் போராட்டப் பாடல்கள்" என்ற தலைப்பில் செக்கோஸ்லோவேகிய நாட்டின் தலைநகரான பிராக் ரேடியோவில், இந்தப் பாடல் செக் மொழியில் மொழி பெயர்க்கப் பட்டு ஒலிபரப்பப் பெற்றது.